பேசும் படம்
ஜனவரி 1961 • 75 காசு
சிவாஜி கணேசன் அளிக்கும்
பிரபுராம் பிக்சர்ஸ்
விடிவெள்ளி
கதை, வசனம், டைரக்ஷன் ஸ்ரீதர்
ஒளிப்பதிவு: வின்சென்ட் • சங்கீதம்: A.M.ராஜா

ஒவ்வொருவரும் குடும்பத்துடன் காணவேண்டிய
உன்னதத் திரைக்காவியம்
ஜனவரி
வெளியீடு!
மாபெரும் இதிகாசக்-
காவியத்தின் இணையற்ற
திரை ஓவியம்.....
வைதேகி பிக்சர்ஸ் அளிக்கும்
என்·ஏ·டி யின்
சீதாராம கல்யாணம்

பிப்ரவரி
வெளியீடு
புத்தா
பிக்சர்ஸ்
பாவ
மன்னிப்பு
டைரக்ஷன்
A. பீம்சிங்
BUDDHA PICTURES
ஸ்டுடியோ
எவி எம்

மங்கையர் திலகங்களுக்கு ஒரு வழிகாட்டி!
உள்ளத்தை உலுக்கும் உணர்ச்சிகள் நிறைந்த கதை!!
ராஜசேகர் புரொடக்ஷன்ஸ் அளிக்கும்
...ஜகபதியின்...
அன்னபூர்ணா
கதை: சதாசிவபிரம்மம்
வசனம்: (தமிழ்) சந்தானம்
பாடல்கள்: எஸ்.டி.சுந்தரம், குயிலன்.
டைரக்ஷன்: வி.மதுசூதன ராவ்
ராஜசேகர் புரொடக்ஷன்ஸ், தி.நகர் ...சென்னை-17

M211,N42P
N61.19.5



படம் 19
காட்சி 5

பேசும் படம்

★ ஜனவரி - 1961 ★

பொருளடக்கம்

		பக்கம்
1.	என் லக்ஷியம்	4
2	செய்திச் சுருள்	10
3.	செய்திப் படங்கள்	12
4.	நரசுவின் 'ஸ்ரீவள்ளி'யில் பத்மினி	17
5.	தங்கவேலு - எம். சரோஜா	18
6.	'சபாஷ் மாப்பிளே' யில் எம். ஜி. ஆர். - மாலினி	19
7.	பத்மினி - ராகினி	20
8.	மல்லிகா	21
9.	எம். என். ராஜம் - சிவாஜி கணேசன்	22
10.	விஜயகுமாரி - சந்திரகாந்தா	23
11.	ஸ்டுடியோ விஜயம்	24
12.	'கலையரசி' வைஜயந்திமாலா	32
13.	சாவித்திரி - நவரச நாடகம்	45
14.	கோடம்பாக்கம் பஸ்	54
15.	'விடிவெள்ளி' படக்காட்சிகள்	57
16.	கேள்வி - பதில்	65
17.	வெட்டுங்கள் வெட்டுங்கள்	73
18.	நான் ரசித்த காட்சி	75
19.	'அன்பு மகன்' படக்காட்சிகள்	81
20.	தபால் பெட்டி	90
21.	எங்கள் ஊரில் நடந்தது	98
22.	'பேசும் - படம்' போட்டோ ஆல்பம்	105
23.	சீதாராம கல்யாணம் படக்காட்சிகள்	109
24.	இம்மாத நக்ஷத்திரங்கள்	114
25.	தங்கரத்தினம் - திரைக் கதை, வசனம்	115

★ NINETEENTH YEAR OF PUBLICATION ★

PESUM PADAM. Tamil Monthly Magazine: Printed and Published by T. V. Ramanath, at Ramanath Press, Arcot Road, Kodambakkam, Madras-24. Phone: 88728 Proprietors: Ramanath Publications. Managing Editor T. V. Ramanath.

EDITORIAL & PUBLICATION OFFICES:
Arcot Road, Kodambakkam, Madras - 24.

MEMBER: AUDIT BUREAU OF CIRCULATIONS LTD.

Registered as a Newspaper in Ceylon

1961-ல் தனது 'லக்ஷியம் என்ன'? என்பது பற்றி எம்.ஜி.ஆர். கூறுகிறார்...

என் லக்ஷியம்

1961-ம் ஆண்டில் என்னுடைய உழைப்பின் சக்தி எவ்வளவு என்பதை வெளிப்படுத்துவதன் மூலம் படவுலகிற்கு எனது பணியை ஆற்ற விரும்புகிறேன்.

மாதம் ஒரு படம் விதம் வெளிவருவதற்கான திட்டமிட்டு, கடந்த மூன்று மாதங்களாகவே அதற்கான முழு நேர உழைப்பில் ஈடுபட்டு வருகிறேன்.

1961-ம் ஆண்டு ஜனவரி முதல் நாள் வெளிவரும் 'அரசிளங்குமரி' படத்தைத் தவிர, குறைந்தது பத்துப் படங்களை முடித்து வெளியிடுவதுடன், எம். ஜி. ஆர். பிக்சர்ஸின் தயாரிப்பாக 'தூங்காதே தம்பி தூங்காதே' படத்தைத் தயாரித்து வெளியிடவும் முடிவு செய்திருக்கிறேன்.

எதிர்பாராத வேறு தடைகள் ஏற்பட்டாலன்றி, மேலே குறிப்பிட்டுள்ள படங்கள், 1961-ம் ஆண்டில் வெளிவருவதற்

பேசும் படம் காலண்டர்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
1	2	3	4	5	6	7
8	9	10	11	12	13	14
15	16	17	18	19	20	21
22	23	24	25	26	27	28
29	30	31				

ஜனவரி 1961

இருவரது இதயமும் அமைதி இன்றி, கூண்டிலடைப்பட்ட பறவையைப் போலத் துடிக்கின்றன. புத்தா பிக்சர்ஸின் பாவ மன்னிப்பு படத்தில் சிவாஜி கணேசன் - 'அழகு நடி' தேவிகா.

கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறேன். அவை: திருடாதே, சபாஷ் மாப்பிளே, அரசு பிக்சர்சாரின் படம், கலையரசி, ராணி சம்யுக்தா, விக்கிரமாதித்தன், பவானி, குமாரதேவன், அதிரூப அமராவதி, இன்பக் கனவு, மலை நாட்டுத் தலைவன்.

மேலே குறிப்பிட்டுள்ளபடங்களில் இரண்டு முடிவடையும் நிலையில் இருக்கின்றன. ஆறு படங்கள் பத்தாயிரம் அடிகளுக்கும் மேலாக வளர்ந்துள்ளன. இதனால் என்னுடைய குறிக்கோளை நிறைவேற்றுவதில் எனக்கு கஷ்டமோ, என்னால் தடைப்படும் படியான நிலையோ ஏற்படாது என்பது நிச்சயம்.

தவிர; எனது நண்பரும் படத் தயாரிப்பாளருமான ஒருவரது வேண்டுகோளை ஏற்று, அவர் தயாரிக்கும் படத்தில் நடிக்கவும், சில மாதங்களிலேயே அப்படத்தை வெளியிடவும் முடிவு செய்துள்ளேன்.

இதற்கிடையில், இடையிடையே இரண்டு மாதங்களுக்கு 'பொன்னியின் செல்வன்' வெளிப்புறக் காட்சிப் படப்பிடிப்பு ஏற்பாடுகளுக்காகவும், நீண்டகாலமாக இடைவிடாது என்னை அழைத்துக் கொண்டிருக்கும் ரசிகர்களைச் சந்திப்பதற்காகவும் மலேயா, இலங்கை போன்ற நாடுகளுக்குச் சென்று வர திட்டமிட்டிருக்கிறேன்.

ரசிகர்களுக்கு என் பொங்கல் வாழ்த்துக்கள்!



ஜனவரி
1
முதல்
சென்னை
வெலிங்டன்
பிரபாத்
சரஸ்வதி
மற்றும் தென்னாடெங்கும்
ஜூபிடரின்
அரசிளங்குமரி
டைரக்ஷன்: A.S.A. சாமி
கதை, வசனம்
கலைஞர் மு. கருணாநிதி, எம்.எல்.ஏ.
ஸ்டுடியோ
நெப்ட்யூன்
Rights controlled by
JAYANTHI FILMS (MADURAI) PRIVATE LTD., MADRAS-17.

செய்திச் சுருள்

பிரபுராமின் 'விடிவெள்ளி'

பிரபுராம் பிக்சர்ஸ் முதல் முயற்சியான 'விடி வெள்ளி'யில் 'நடிகர் திலகம்' சிவாஜி கணேசன், பாலாஜி, டி. ஆர். ராமச்சந்திரன், எஸ். வி. ரங்கராவ், சரோஜாதேவி, எம். என். ராஜம், மற்றும் பல நக்ஷத்திர நடிகர்கள் நடித்திருக்கிறார்கள். ஸ்ரீதர் கதை வசனம் எழுதி, டைரக்ட் செய்துள்ள இப்படத்தின் இசை அமைப்பை ஏ. எம். ராஜா செய்திருக்கிறார். விஜயா-வாஹினி ஸ்டுடியோக்களில் உருவாக்கப்பட்டுள்ள படம் 'விடிவெள்ளி'.

அன்பு மகன்

பிரகதி ஆர்ட் புரொடக்ஷன்ஸ் உருவாக்கியிருக்கும் 'அன்பு மகன்' தாயுள்ளத்தின் பிரதிபலிப்பையும், பாசத்தையும் விளக்குகிறது. டி. வி. எஸ். ராஜு தயாரிப்பாளராக அமர்ந்திருக்கும் இப்படத்தின் டைரக்ஷன் பொறுப்பை டி. பிரகாஷ்ராவ் ஏற்றுள்ளார். சாவித்திரி, நாகேஸ்வரராவ், தங்கவேலு, ஜூனி இரானி மற்றும் பலர் நடித்திருக்கும் இப்படத்தின் வசனத்தை 'முரசொலி' மாறன் எழுதியிருக்கிறார். விரைவில் வெளிவர விருக்கிறது இப்படம்.



அன்னபூர்ணா பிக்சர்ஸ் "தூய உள்ளம்" படத்தில் நாகேஸ்வரராவ் - சாவித்திரி.

பாவ மன்னிப்பு

ஏவி. எம். ஸ்டுடியோவில் புத்தா பிக்சர்ஸ் தயாரித்து வரும் படத்திற்கு 'பாவ மன்னிப்பு' என்று பெயர் தரப்பட்டிருக்கிறது. சோலைமலை கதை, வசனம் எழுதியுள்ள இப்படத்தை பீம்சிங் டைரக்ட் செய்கிறார். விஸ்வநாதன்-ராமமூர்த்தி ஜோடி இசை அமைத்து வருகிறார்கள். சிவாஜி கணேசன், எம். ஆர். ராதா பாலய்யா, தேவிகா சாவித்திரி மற்றும் பலர் இதில் நடித்து வருகிறார்கள்.

பெயர் மாற்றம்

படத்தின் பெயரல்ல இது. மதன் தியேட்டர்ஸ் தயாரித்துவரும் தாய் வீடு என்ற படத்திற்கு 'ஆடிப்பெருக்கு' என்றும், மோகேஷ்வர் சித்ராவின் அருந்ததி என்ற படத்திற்கு இறுதியாக 'தெய்வ

வெற்றி முருகன் பிலிம்ஸ் முதல் தயாரிப்பில் நடிக்கும் புதுமுகம் ஆர். ஜெயந்தி.

மங்கை' என்றும் பெயர் மாற்றப்பட்டிருக்கின்றன.

'ஆடிப்பெரு'க்கில் ஜெமினி கணேசன், சரோஜாதேவியும், 'தெய்வ மங்கை'யில் நாகேஸ்வர ராவ் அஞ்சலிதேவியும் ஜோடியாக நடித்து வருகிறார்கள்.

அன்னபூர்ணா

'அன்னபூர்ணா' என்ற பெயரில் விரைவில் ஒரு தமிழ்ப்படம் வெளிவரவிருக்கிறது. உணர்ச்சி வசப்படுத்தும் உயரிய கருத்துடன் கூடிய இப்படத்தை ராஜசேகர் புரொடக்ஷன்ஸார் வெளியிடப்போகிறார்கள். ஜமுனா, கிரிஜா, கும்மிடி மற்றும் பல பிரபல நடிகர்கள் நடித்துள்ள இதன் கதையை சதாசிவப் பிரம்மம் எழுதியிருக்கிறார். எஸ்.

எம். சந்தானம் தமிழ் வசனங்களை அமைத்திருக்கிறார். வி. மதுசூதன ராவ் இதை டைரக்ட் செய்துள்ளார்.

தூய உள்ளம்

நடிகர் ஏ. நாகேஸ்வரராவின் சொந்தப் படமான 'தூய உள்ளம்' பொங்கல் திருநாளன்று வரப்போகிறது. சாவித்திரி, ராஜசுலோசனா, இ.வி. சரோஜா, ஏ. நாகேஸ்வரராவ், தங்கவேலு முதலியோர் நடித்துள்ள இப்படம் ஒரு வங்கக் கதையைத் தழுவியது. ஏ. சுப்பாராவ் டைரக்ஷனில் வளர்ந்து வரும் இப்படத்தின் தமிழ் வசனங்களை ஸ்ரீதர் எழுதியிருக்கிறார். அன்னபூர்ணா பிக்சர்ஸ் ஸ்தாபனத்தின் பெயரில் இப்படம் தயாராகியிருக்கிறது.

'கானல் நீர்'

பானுமதி பிரதம பாகத்தில் நடித்து, சொந்தத்தில் தயாரித்து வரும் 'கானல் நீர்' ஒரு விதவையின் உள்ளக்குமுறலை வெளியிடும், போதனைகள் பல நிறைந்த படம். வங்கக் கதையைத் தழுவி அமைக்கப்பட்டுள்ள இதன் வசனங்களை ஆரூர்தாஸ் எழுதியிருக்கிறார். பானுமதியின் கணவரான ராமகிருஷ்ணா டைரக்ட் செய்து வரும் இதில், மற்

பரணி பிக்சர்ஸ் "கானல் நீர்" படத்தில் பி. ஆர். பந்துலு, பானுமதி.

அபார சக்தி வாய்ந்த அதிசய மனிதர்!

உங்கள் கவலை எதுவாயிருந்தாலும் சரி, விளக்கமாக ஜனன காலம் அல்லது கடிதம் எழுதும் நேரத்தைக் குறிப்பிட்டு கடிதம் அனுப்பும் பொழுது பதிலுக்காகவும் கேட்லாக்கிற்காகவும் 35 n. P. ஸ்டாம்பு அனுப்பி வைத்தால், இலவச ஆத்மீக ஆலோசனை அனுப்பி வைக்கப்படும். அவர் ஈஸ்வர தியானத்தில் ஈடுபட்டு சக்தி பெற்றதினால் இவருடைய கவசங்கள் வெற்றி யளிக்கிறது. இவருடைய தாந்திரீக கவசத்தை உலகத்தில் பல பாகங்ளிலுள்ள ஆயிரக் கணக்கானவர்கள் அணிந்து எதிர்பாராத நன்மைகளை அடைந்து வருகிறார்கள். அவரை அணுகி வருங்காலத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

ஒரு சில நற்சாட்சிகள்

சென்னை ஹைகோர்ட் நீதிபதி ஹானரபிள் ஸ்ரீ Ch. ராகவராவ் 22-3-52ல் எழுதுவதாவது: ஸ்ரீமான் R. T, தேவர் பெருங்கீர்த்தி வாய்ந்தவர். இவர் ஸ்ரீ சுப்ரமண்ய சுவாமிக்கு ஆழ்ந்த பக்தர். வாழ்க்கையில் வெற்றி காணும் பொருட்டு ரக்ஷை தயாரிப்பது அவருக்கு பூர்வீகமாக அடைந்த கலையாக விளங்குகிறது.

ஸ்ரீ V.D. திருவரங்கம். ஜில்லா ரெவின்யூ அதிகாரி, திருச்சிராப்பள்ளி :- தாங்கள் முன்பு எனக்த அளித்த கவசத்தின் சக்தி அபூர்வமாய் இருந்து வந்துள்ளது. அது எனக்கு பூரண திருப்தியுடன் விரும்பிய பலனைக் கொடுத்தது.

ஸ்ரீ V. K. C. நடராஜன், M. A., ஜில்லா ரெவின்யூ அதிகாரி. சேலம் :- பேரன்புமிக்க ஸ்வாமி, தாங்கள் முருக உபாசனையால் தயாரித்துக் கொடுத்த கவசம் உண்மையில், உள்ள நிறைவையும், தெம்பையும் கொடுத்தது. மிகச் சக்தி வாய்ந்தது என்பதற்கு ஐயம் இல்லை. கலியுக வரதனும் முருகன் அருள் பூரணமாக உள்ளது.

ஸ்ரீ K. லட்சுமிகாந்தன், டிப்டி கமிஷனர், (கம்மர்ஷியல் டேக்ஸஸ்) சென்னை :- மதிப்பிற்குரிய சுவாமிகளே, தங்கள் கவசம் இறை அருளால் அற்புதமான பலனைத் தருகிறது. தாங்கள் கொடுத்த கவசத்தை அணிந்த மூன்று மாதங்களுக்குள் எனக்கு உயர்வு கிடைத்தது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். முருகப் பெருமான் தங்களுக்கு நீண்ட ஆயுளைத் தரவேண்டும் எனப் பிரார்த்திக்கிறேன்.

புரபஸர் R. T. தேவர்,

தபால் பெட்டி எண் 14, ஷண்முகபுரம் காலனி,

பழனி. P.O. தென் இந்தியா.

றும் ஏ. நகேஸ்வரராவ், ஜாவர் சீதாராமன், முத்தய்யா, பி. ஆர். பந்துலு, கல்கத்தா விஸ்வநாதன், தேவிகா, ஆகியோர் நடிக்கின்றனர். பரணியில் படம் தயாராகிறது.

க்வின் வந்தார்

லண்டன், பிலிம் இன்ஸ்டிட்யூட்டின் டைரக்டரான க்வின் சென்ற மாதம் சென்னைக்கு வந்தார். தென்னிந்திய சினிமாப் பத்திரிகையாளர்கள் சங்கமும், தென்னிந்திய நடிகர் சங்கமும் அளித்த வரவேற்புகளில் கலந்து கொண்ட அவர், பிலிம் இன்ஸ்டிட்யூட் செயல்படும் முறைகளை விரிவாக எடுத்துச் சொன்னார்.

ரஷ்யா சென்றார்

சோவியத் நாட்டின் அழைப்பின் பேரில், இந்திய சர்க்காரின் கலாசாரப் பிரதிநிதியாக நடிகர் சஹஸ்ரநாமம் ரஷ்யாவுக்குச் சென்றுள்ளார். ரஷ்ய நாடகக்கலையைப்பற்றி அவர் அறிந்து வருவார்.

நவீனனுக்கு விழா

சினிமாப்பத்திரிகைத் துறையில் கால் நூற்றாண்டுகளாக பணியாற்றி வந்துள்ள எழுத்தாளர் நவீனனுக்கு வாஹினி மகாலில் ஒரு பாராட்டு விழா நடந்தது. குலதெய்வம் ராஜகோபால் பொன்னாடைப் போர்த்த, விழாக் கமிட்டியின் சார்பில் சேகரிக்கப்பட்டிருந்த தொகையுடன், தன்னுடைய ஐநூறு ரூபாயையும் சேர்த்து ஒரு பணமுடிப்பை எம். ஜி. ஆர். அவருக்கு அளித்தார்.

பத்திரிகையாளர்கள் சங்கம்

தென்னிந்திய சினிமாப் பத்திரிகையாளர்கள் சங்க நிதிக்காக மயிலை ரசிக ரஞ்சனி சபையில் சென்ற 9-ம் தேதியன்று எம். ஆர். ராதாவின் 'ரத்தக் கண்ணீர்' நாடகம் நடந்தது. சங்கத்திற்கு ஒரு 16. மி. மீ. புரொஜக்டரை அன்பளிப்பாக சிவாஜி கணேசன் தர இசைந்திருப்பதும் அன்று அறிவிக்கப்பட்டது.

எமது நன்றி கலந்த பொங்கல் வாழ்த்துக்கள்

கற்பனையிலே காண முடியாத அழகினை
ஒப்பனையிலே காணலாம்
ஒப்பனைக்குத் தேவை - சிறந்த மேக்கப் சாதனங்கள்

சிறந்த மேக்கப் சாதனங்கள் :

கல்கத்தா நைலான், நெட் டோப்பாக்கள், தாடிகள்,
நகைகள், தையல் சரிகைகள் முதலியன

மிகவும் குறைந்த விலையில் கிடைக்குமிடம்

KRISHCO Shopping

கிருஷ்கோ ஷாப்பிங்

331 - 333, ராசப்ப செட்டி தெரு,
சென்னை-3 Phone : 55960

மேக்கப்பிற்கு கிருஷ்கோ - தெரிந்தவர்களுக்குத் தெரியும்

செய்திப் படங்கள்

வெற்றிவேல் பிலிம்ஸ் 2-வது பட ஆரம்ப விழாவை மா. பொ. சிவஞானம் தலைமையில் சிவாஜி கணேசன் துவக்கி வைத்தார். ஜெமினி கணேசன் பேசினார். சினிமா விசிறிகள் சங்க நிதிக்கு சிவாஜி தலைமையில் பாலாஜி, ''அவன் வந்த வழி'' நாடகம் நடத்தினர்.

போட்டோக்கள்:
டி. ஐ. சந்தாமியான்

பம்பாயில் பிரண்ட் ராமசாமி பார்ட்டி நடத்திய நாடகத்திற்குத் தலைமை வகித்த பிருதிவிராஜ்கபூருடன் எஸ். எம். ராமநாதன். பின்னணிப் பாடகர் பி. பி. ஸ்ரீனிவாசன் நடத்திய தன் சகோதரி திருமணத்தில் கலைஞர்கள். உதகையில் கச்சா பிலிம் தொழிற்சாலை ஏற்படுத்தும் விஷயமாக தெ. இ. பி வ. ச. தலைவர். ஏ. எல். ஸ்ரீனிவாசன் பத்திரிக்கையாளர்களுடன்.







சென்னையில் சுகிர்தலக்ஷ்மி விலாச சபையின் டேபில் டென்னிஸ் விளையாட்டுப் போட்டியில் பிரேம்நஸீர். பரிசு விழங்கினார்.

அருள்ஜோதி பிலிம்ஸ் பூசையை. நாகிரெட்டி துவக்கி வைத்தார்.

நாகர்கோவில் நாகராஜன் ஆரம்பித்த ஸ்ரீ ஐயப்பன் படத்தை முன்னால் மேயர் ராமநாத அய்யர் துவக்கிவைத்தார்.







லண்டன் பிலிம் இன்ஸ்டிட்யூட் டைரக்டர் க்வின் சென்னை விஜயத்தின் போது சங்கீத நிபுணர் தாசப்பாவின் சங்கீதத்தைக் கேட்டு மகிழ்ந்தார். வட இந்திய நடிகர் டேவிட்டும் வந்திருந்தார்.



க்வின் தெ. இ. சி. பத்திரிக்கையாளர் சங்கத்தில் உரை நிகழ்த்தினர்.

க்வின், தெ. இ. நடிகர் சங்கத்தினருக்கு அவர் கொண்டுவந்த படத்தை விளக்குகிருர்.

ELEGANT

மல்லிகா

நடிகை கே. என். கமலத்தின் குமாரி மல்லிகா சுதர்சனம் பிக்சர்ஸாரின் "ஹல்லோ, மிஸ்டர் ஜமீந்தார்!" படத்தில் முக்கிய பாத்திர மொன்றை ஏற்று நடித்து வருகிருர்.

எம். என். ராஜம் - சிவாஜி கணேசன்

பிரபுராம் பிக்சர்ஸாரின் முதல் தமிழ்த் தயாரிப்பான "விடிவெள்ளி" யில் கூடப் பிறந்தவர்களாக அருமையாக நடித்திருக்கிருர்கள்.

விஜயகுமாரி - சந்திரகாந்தா

உதயசூரியன் பிக்சர்ஸார் தயாரித்து வரும் “எதையும் தாங்கும் இதயம்” படத்தில் முக்கிய பாகங்களில் நடித்து வருகிருர்கள்.

ஸ்டூடியோ விஜயம்

பிரகதி ஆர்ட் புரொடக்ஷன்ஸார் தயாரித்து வரும் "அன்பு மகன்" தமிழ்ப் படத்திற்கான காட்சியொன்று சமீபத்தில் படமாக்கப்பட்டது. எகிப்து நாட்டிய நடிகை லீலா ஜஸாஇரியா, எம். என். ராஜம் இருவரும் இந்த நடனக் காட்சியில் கலந்து கொண்டார்கள். படத்தில் நடன டைரக்டர் ஹீராலால், லீலா, எம். என். ராஜம், டைரக்டர் பிரகாஷ்ராவ், ஒளிப்பதிவாளர் கமால் கோஷ் ஆகியோர் இருக்கிறார்கள்.

அந்த ஆஸ்பத்திரியின் பிரதம டாக்டர் அவர். மிகவும் நல்லவர். நோயாளிகளை மன அமைதியால் குணப்படுத்திவிட முடியும் என்று நம்பி, அன்பினாலேயே அவர்கள் நோய் தீர்க்கும் உத்தமர் அவர். கைலாசம் அவரது உதவியாளன். ரொம்பவும் கண்டிப்பானவன். ஆனால் வாழ்க்கையை விளையாட்டாக நினைக்கும் கோமாளி.

அந்த ஆஸ்பத்திரிக்கு வரும் ஒரு பெண் - நர்ஸ் வேலைக்குப் படித்துத் தேறியவள் - டாக்டரிடம் ஒரு கடிதத்தைக் கொடுக்கிறாள். டாக்டரின் பால்ய நண்பரான புரொபசர் ஞானசேகரிடமிருந்து வாங்கி வந்த சிபாரிசுக் கடிதம்தான் அது. அவள் பெயர் சுசீலா.

''இதோ பாரம்மா. நர்ஸ் வேலைக்குப் படித்துத் தேறி வேலைக்காக வந்திருக்கே நல்லபடி பணி செய்து நல்ல பெயரெடுக்கணும்'' என்று டாக்டர் அவளிடம் கூறும்போதே, கூச்சல் போட்டபடி அங்கே வருகிறான் கைலாசம்.

''அந்த ஆள் ஒரே கலாட்டா பண்றானுங்க. சொல்றதை கேக்கமாட்டேங்கிறான்'' என்று டாக்டரிடம் கூறுகிறான்.

'யார் அது?' என்கிறார் டாக்டர்.

''மூணாவது 'பெட்'காரன். அவன் நெஞ்சு வலிக்காரன். மூணு முட்டை வேணும்னு கேக்கறான்'' என்கிறான் கைலாசம்.

''சரி அவனை அப்பறம் டிஸ்சார்ஜ் பண்ணிடலாம்; இது யார் தெரியுமா? புது நர்ஸ் சுசீலா. இவங்களை அழைச்சுக்கிட்டு ஆஸ்பத்திரி பூரா காட்டிட்டு, வேலை செய்ய வேண்டிய முறைகளைச் சொல்லிக் கொடு'' என்கிறார் டாக்டர்.

''இந்த நன்றியை நான் என்றும் மறக்க மாட்டேன் டாக்டர்'' என்று கூறி கைலாசத்துடன் போகிறாள் சுசீலா.

ராமன் புரொடக்ஷன்ஸ் ''கொஞ்சும் சலங்கை''யில் அமரேந்திரனும் பாளையக்காரர்களும். வலது கோடியிலிருப்பவர் சாக்ரடீஸ் தங்கராசு.



'கைதி கண்ணாயிரம்' படத்தில் வீரய்யனாக வந்து சக்கைப்போடு போட்ட 'சாக்ரடீஸ்' தங்கராசு 'கொஞ்சும் சலங்கை' முதலிய படங்களில் நடிக்கிறார்.

அசோகா பிக்சர்ஸாரின் "இந்திரா என் செல்வம்" படத்திற்காக பேற்படி காட்சி சுடப்பட்டது. டாக்டராக டி. பி. ஹரிசிங்கும் சசீலாவாக பண்டரிபாயும் கைலாசமாக ஏ. கருணாநிதியும் நடித்தார்கள்.

இதே படத்திற்காக மற்றொரு காட்சியும் சுடப்பட்டது.

அந்தப் பெண் ஒரு குழந்தையைப் பெற்றெடுக்கிறாள். பிரசவ வேதனையால் துடித்த அவளிடம் விவரம் எதுவும் கேட்காமல் உடனடியாகச் சேர்த்து விட்டாள் சுசீலா. குழந்தை பிறந்ததும் யுவதி மரணாவஸ்தைப் படுகிறாள்.

"என் செல்வத்தை நீங்கள் காப்பாற்றுவதாக வாக்குறுதி கூறினால் தான் அமைதியான சாவு எனக்கு ஏற்படும்" என்று கெஞ்சுகிறாள் அந்தப்பெண். இளகிய மனமுள்ள சுசீலா அதற்குச் சம்மதம் தெரிவித்த பின் அந்த யுவதி மாண்டு போகிறாள்.

ஒரு தொட்டிலில் குழந்தையை விட்டு சுசீலா அருகிலிருந்து கவனிக்கும்போது டாக்டர் அங்கே வருகிறார்.

"பிரசவத்துக்கு வந்த அந்தப் பெண்ணின் ஊர், பேர், விலாசத்தைக் கேட்காமல் நீ அவளை 'அட்மிட்' பண்ணினது தப்பு சுசீலா" என்கிறார் டாக்டர்.

"தவறுதான், மன்னிச்சுடுங்க டாக்டர். இனிமே இப்படிப்பட்ட தவறு நேராமெ பாத்துக்கறேன் என்கிறாள் சுசீலா.

"சரி...சரி...இந்தக் குழந்தையை அனாதை விடுதியிலே சேர்க்க வேண்டியதுதான்" என்கிறார் டாக்டர். சுசீலா அக்குழந்தையின் தாய்க்

ஸ்ரீ கணபதி பிலிம்ஸார் தமிழாக்கி வரும் "ஸ்ரீ கிருஷ்ண பாண்டவ யுத்தம்" படத்தில் மஹிபால்.



ஜெமினி கணேசனின் காரியதரிசியும் நாடக நடிகருமான மகாலிங்கம் தற்போது பல படங்களில் முக்கிய பாத்திரமேற்று நடித்து வருகிறார்.

ளித்த வாக்குறுதி பற்றி அவருக்கு எதுவும் தெரியாது.

''வேண்டாம் டாக்டர். அனாதை விடுதியில் சேர்க்க வேண்டாம். நான் இதைக் காப்பாற்றுவதாக இதன் தாய்க்கு வாக்களித்து விட்டேன். நான் வளர்க்க அனுமதி கொடுங்கள் டாக்டர்'' என்று வேண்டுகிறாள் நர்ஸ் சுசீலா.

''உனக்கு நல்ல மனசும்மா. உன் இஷ்டப்படி செய்'' என்று கூறிப் போகிறார் டாக்டர்.

இக்காட்சியில் ஹரிசிங், பண்டரி தவிர, குழந்தையின் தாயாக சந்திரா நடித்தார்.

அசோகா பிக்சர்ஸாரின் ''இந்திரா என் செல்வம்'' நல்ல கதை அமைப்பு கொண்ட படம். இதில் மற்றும் அசோகன், டி. பாலசுப்பிரமணியம் முதலியோரும் நடித்து வருகிறார்கள். பி. எஸ். மணி, பத்மநாபன் இருவரும் டைரக்ட் செய்து வருகிறார்கள்.

* * *

வாசு மிகவும் நல்லவன். மற்றவருக்குத் துரோகம் செய்வதை கனவிலும் நினையாதவன். வசந்தி அவன் மனைவி. காதலித்து மணம் புரிந்து கொண்ட அன்புத் தம்பதிகள் அவர்கள். கண்ணன் வாசுவின் நண்பன். அவனும் மிகவும் நல்லவன். சமயத்துக்குதவும் உத்தமன்.

வாசு, தான் வேலை செய்யும் காரியாலயத்தின் பணத்துடன் ஏதோ வாங்கவோ, பாங்கியில் போடவோ வெளியே போகிறான். அப்போது அவன் பணம் பறிபோகிறது. காரியாலயத்தார் விட்டுக் கொடுக்க முடியுமா? பணத்தை அவனே கையாடியதாகக் குற்றம் சாட்டப்பட்டுக் கைதாக்கப் படு

ஸ்ரீ கணபதி பிலிம்ஸார் தமிழாக்கி வரும் ''ஸ்ரீ கிருஷ்ணபாண்டவ யுத்தம்'' படத்தில் நளினி ஜெய்வந்த்.

ரஞ்சிதம் பிக்சர்ஸின் ''செல்வச் சீமான்'' பட ஆரம்ப விழா சமீபத்தில் நடைபெற்றது. கல்லல் ராமநாதன் கதை, வசனம், பாடல்கள் எழுதும் இதை எல். எஸ். சீனிவாசன் டைரக்ட் செய்கிருர்.

கிருன். அப்போது அவன் மனைவி வசந்தி நிறை மாத கர்ப்பிணி. வாசு நல்லவன். கடவுள் அவன் பங்கிலிருந்தார். ஆகவே உண்மைக் குற்றவாளி அகப்பட, அவன் நிரபராதி என்று விடுதலை செய்யப் படுகிருன். வாசுவின் கவலையெல்லாம் தன் மனைவியைப் பற்றியது தான். அவள் மனம் என்ன பாடு படுமோ என்று வேதனைப்படும் போது, அவனிடம் ஓடி வருகிருன் நண்பன் கண்ணன்.

வசந்திக்கு ஒரு குழந்தை பிறந்திருப்பதாகக் கூறுகிருன். வாசு மகிழ்ச்சியால் பூரித்துப் போகிருன்.

ராகவன் புரொடக்ஷன்ஸாரின் ''சபாஷ் மாப்பிள்ளே!'' முழுநீள ஹாஸ்யப் படத்திற்காக இந்தக் காட்சி சுடப்பட்டது. எம். ஜி ராமச்சந்திரன் வாசுவாகவும், 'குலதெய்வம்' ராஜகோபால் கண்ணனுகவும் நடித்தனர். வசந்தியாக நடிப்பது மாலினி. இப்படத்தில் எம். ஆர். ராதா, பி. எஸ். ஞானம் முதலியோரும் நடிக்கிருர்கள். தயாரிப்பாளர் ராகவன் இதன் கதை, வசனங்களை எழுதியிருப்பதுடன் டைரக்ஷன் பொறுப்பையும் ஏற்றிருக்கிருர். இது ஒரு துரிதகாலத் தயாரிப்பு.

* * *

கோல்டன் ஸ்டுடியோ தினசரி இரவு நேரங்களில் பிரகாசமாக இருந்தது. பி. வி. என். புரொடக்ஷன்ஸாரின் ''நாக நந்தினி'' படத்திற்காக பி. எஸ். வீரப்பாவும் சுமார் இரண்டு டஜன் நடனப் பெண்களும் கலந்து கொள்ளும் நடனக்காட்சி ஈஸ்ட்மென் கலரில் படமாக்கப்பட்டது. மின்சார வசதியை உத்தேசித்து வர்ணக் காட்சிகள் இரவு நேரத்தில் தான் படமாக்கப்படுகின்றன. இந்த காட்சி நிர்மாணிப்பதற்குச் சுமார் ஐம்பதினுயிரம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இதற்காகப் பிரமாண்டமான பாம்பு ஒன்றை தயாரிப்பாளர்

1961-ல் என்ன நேர இருக்கிறது?

புத்தாண்டாகிய 1960-61-க்குள் ஏற்படக்கூடிய நன்மை தீமைகளை முன்கூட்டி அறிய விரும்பினால் ஒரு தபால் கார்டில் ஒரு புஷ்பத்தின் பெயரும், முழு விலாசமும் அனுப்பி வையுங்கள். 12 மாதத்திற்குள் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், வியாபாரத்தில் வெற்றி, எந்தவிதத்தில் பணம் கிடைக்கும், உத்தியோகம் எப்பொழுது கிடைக்கும், வழக்கில் வெற்றி, உத்தியோக மாற்றம், தேகாரோக்கியம், மனைவி மக்கள் சுகம், தேக அசௌக்கியம், தூரதேசப் பிரயாணங்கள், பரீக்ஷையில் வெற்றி, கலியாணம், அதைப் பற்றிய பேச்சுக்கள், நிலபுலன்களின் மூலம் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், புதிய நட்பு, அதனால் உண்டாகும் பலன், சூதாட்டத்தின் மூலமாகவும், புலப்படாத இதர வழிகளினால் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்களையும் ஜோதிட முறைப்படி கணித்து அறிவிக்கப்படும். இதற்கு ரூ. 1.25. (வி. பி. மூலம் அனுப்பப்படும்) தபால் செலவு தனி.

• இத்துடன் துரதிருஷ்டத்தை அதிருஷ்ட வழியில் செலுத்தும் உபாயங்களும் அனுப்பப்படும். இதனால் ஏற்படக்கூடிய இன்னல்களில் இருந்து இது தன்னைக் காப்பாற்றிக் கொள்ள உதவும். ஒரு முறை பரீக்ஷித்துப் பார்த்தால் எம்முடைய ஜோதிட அனுபவம் விளங்கும். பொய் என்று நிரூபித்தால் பணம் வாபஸ் செய்யப்படும்.

PT. DEV DUTT SHASTRI, RAJ JYOTISHI,
(PPM - 3) JULLUNDUR CITY. (Punjab.)

இனாம் ! இனாம் !! இனாம் !!!



எமது நெ. 501 கருங்கூந்தல் தைலத்தை (ரிஜிஸ்டர்டு) உபயோகிப்பதன் மூலம் எல்லா விதமான ரோமமும் மைக்கறுப்பாக மாறி, பின்னர் எப்பொழுதுமே கறுப்பாக வளரும். இது முடிகள் உதிர்ந்து போவதைத் தடுத்து, மிகவும் நீண்டதாகவும், பிரகாசமாகவும், சுருண்டதாகவும் வளரச் செய்கிறது.

புட்டி ஒன்றின் விலை ரூ. 1.94.

3 புட்டிகள் (பூராமுறை) ரூ. 5.00.

இந்த அதிசயத் தைலத்தை எங்கும் பரப்ப, ஒவ்வொரு புட்டியுடனும் அழகிய பான்ஸி மியூட் (பொம்மை) வாட்சும், மோதிரமும் (நியூ கோல்டு) அளிக்க நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். வாட்சின் அழகும் உறுதியும் 15 வருஷங்களுக்கு உத்திரவாதம். 3 புட்டிகள் வாங்குவோருக்கு 6 பான்ஸி ரிஸ்ட் வாட்சுகளும், 6 நியூகோல்டு மோதிரங்களும் இனாம். அங்கீகரிக்காமல் போனால் பணம் வாபஸ்.

ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்.

BHARAT PHARMACY (P. P. M.)
Jullundur City.

வள்ளிநாயகம் வாங்கி வந்திருக்கிறார். இத்துடன் இன்னும் நூறு பாம்புகள் நடிக்குமாம்.

ஜி. ஆர். நாதன் டைரக்ஷனில் வளரும் "நாக நந்தினி" யில் பாலாஜி, அஞ்சலிதேவி, நம்பியார், வீரப்பா, தேவிகா, குலதெய்வம் ராஜகோபால் முதலியோர் நடித்து வருகிறார்கள். இம்மாத இறுதியில் இப்படம் திரைக்கு வரும் என்று தெரிகிறது.

* * *

மன்னார் மன்றம் என்ற பெயரில் ஆரம்பமாகி யிருக்கும் அந்தச் சங்கம், சமூக சேவையை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டதாகும். ஆனால் அது இப்போது சூதாட்ட நிலையமாக இருக்கிறது. ஆடலும் பாடலும் சூதாட்டமும் அங்கே அமர்க்களப்படும்போது, அந்த வழியே ஒரு ரிக்ஷாக்காரன் வருகிறான். அவன் வாழ்க்கையை அனுபவித்தவன். எப்படி "எல்லோரும் வாழவேண்டும்" என்பதைப் புரிந்துகொண்டவன். ரிக்ஷா இழுக்கும் தொழில் செய்தாலும் தவறு கண்ட இடத்தில் கண்டிக்கத் தவறாத திறன்.

மன்னார் சங்கத்தில் சீட்டாட்டம் நடப்பதையறிந்த அவன், நேரே அவர்களிடம் சென்று, சமூகசேவை என்ற போர்வையில் அவர்கள் தவறு செய்வதைக் கண்டிக்கிறான்.

இந்தக் காட்சி எஸ். ஆர். எஸ். பிக்சர்ஸாரின் "எல்லோரும் வாழவேண்டும்" படத்திற்காகப் படமாக்கபபட்டது. எம். ஆர். ராதா ரிக்ஷாக்காரனாக நடித்தார். விஸ்வநாத் டைரக்ட் செய்யும் இப்படத்தில் பாலாஜி, அசோகன், கே. கண்ணன், திருவனந்தபுரம் லலிதா முதலியோரும் நடித்து வருகின்றனர். ரவீந்தர் இதன் கதை - வசனங்களை எழுதியிருக்கிறார்.

* * *

நெப்டியூன் ஸ்டுடியோவுக்கு எப்போது சென்றாலும் ராஜாமணி பிக்சர்ஸாரின் 'பாசமலர்' சம்பந்தமான படப்பிடிப்பு வேலைகள் இருந்து கொண்டே யிருக்

தமிழ்ப் படவுலகில் தயாராகி வரும் படங்களில் கதை அம்சம் எவ்வளவு என்று கேட்டால் - அதற்கு விடை இப்படியுமிருக்கலாமல்லவா?

தமிழ்ப் படத்தின் சராசரி நீளம் :	18000 அடி
சர்க்கார் வெட்டச் சொல்வது :	3000 அடி
எனவே படத்தின் நீளம்	15000 அடி
பாட்டுக்கள் வரும் கட்டங்கள்	4000 அடி
மீதியுள்ள படத்தின் நீளம்	11000 அடி
நடனங்கள் வரும் காட்சிகள்	3000 அடி
படத்தின் மீதியுள்ள நீளம்	8000 அடி
ஹாஸ்யக் காட்சிகளின் நீளம்	4000 அடி
மீதியுள்ள படத்தின் நீளம்	4000 அடி
தேவையற்ற, பொருந்தாத காட்சிகள்	2000 அடி
படத்தின் எஞ்சிய நீளம்	2000 அடி
வழக்கமான கதையம்சம் இதில்	1000 அடி
மீதமுள்ளது	1000 அடி
படத்தின் தலைப்புகள், இடைவேளை வணக்கம் - ஆக மொத்த நீளம்	1000 அடி
மீதமுள்ள கதையின் நீளம்!	0 அடி

★ தமிழ்ப் படங்களில் கதை இல்லை என்பதற்கு இதை விட வேறு என்ன புள்ளி விவரம் வேண்டும்?

— ஸா

எஸ். ஆர். எஸ். பிக்சர்ஸ் ''எல்லோரும் வாழவேண்டும்'' வெளிப்புறக் காட்சியில் கே. கண்ணன், சேதுபதி, பாலாஜி.

கின்றன. சமீபத்தில் ஒரு நாள் அங்கே சென்றிருந்தேன்.

செட்டுக்குள்ளிருந்து ''அத்தான் அத்தான்'' என்று ஆரம்பமாகும் பாடலொன்று ஒலித்துக் கொண்டிருந்தது.

சாவித்திரி ஆடிப்பாடிக் கொண்டிருந்தார். ராதையும் ஆனந்தனும் காதலித்தனர். வழக்கம்போல அவர்கள் காதலுக்கு ஏகப்பட்ட இடையூறுகள் நேர்ந்தன. ஆனால் உறுதியுடன் நின்று சமாளித்து வெற்றி பெற்ற அவர்கள் மணந்து கொண்டு ஆனந்த வாழ்வு வாழ்ந்தனர். ஆனந்தன் வீணை இசைக்க, ராதை ஆடுகிறாள்.

இந்தக் காட்சியில் ராதையாக சாவித்திரியும், ஆனந்தனாக ஜெமினி கணேசனும் நடித்தனர். மற்றும் சிவாஜி கணேசன், எம். என். ராஜம், தங்கவேலு, எம். சரோஜா, எம். ஆர். சந்தானம், பி. எஸ். ஞானம் முதலியோர் நடித்துவரும் 'பாசமலர்' படத்தை ஏ. பீம்சிங் டைரக்ட் செய்கிறார். கொட்டாரக்கரா எழுதியுள்ள இக்கதையின் வசனங்களை ஆரூர்தாஸ் எழுதியிருக்கிறார். விஸ்வநாதன் - ராமமூர்த்தி இசையமைத்திருக்கும் இதன் கலைப்பகுதிப் பொறுப்பை, தயாரிப்பாளர்களில் ஒருவரான மோஹன் ஏற்றிருக்கிறார். விரைவில் திரையிடப்படவிருக்கும் படங்களில் ஒன்று ''பாசமலர்''.

* * *

கண்ணாயிரம் ஒரு பெரிய பணக்காரன். அவன் மிகவும் வேகமாக மோட்டார் சைக்கிளில் போகும்போது பொம்மை விற்றுக் கொண்டிருந்த பட்டு என்ற யுவதியின்மேல் சைக்கிள் மோத அவள் பொம்மைகளெல்லாம் உடைந்து விடுகின்றன.

பொம்மைக்கு நஷ்டஈடு கேட்டுக் கலாட்டா செய்கிறாள் பட்டு. அப்போது பட்டறையில் வேலை செய்து கொண்டிருந்த மாடசாமி என்ற வாலிபன் அங்கே வந்து பணக்காரர்களின் குணத்தைப் பற்றி விவரிக்கிறான்.

தாங்கள் தவறு செய்தால், அதை ஏழைகள் தலையில் சுமத்திவிடும் கொடுமைக்காரர்கள் என்று தாக்குகிறான்.

தான் அப்படிப்பட்டவனல்ல என்றும், பிறகு வந்து நஷ்ட ஈடு தருவதாகவும் கண்ணாயிரம் கூறியும் கேளாது அவன் சட்டையைப் பிடிக்கிறாள் பட்டு.

உதயசூரியன் பிக்சர்ஸ் ''எதையும் தாங்கும் இதயம்'' படத்திற்காக மெஜஸ்டிக் ஸ்டுடியோவில் படமாக்கப்பட்ட இக்காட்சியில் கே. ஆர். ராமசாமி கண்ணாயிரமாகவும் சந்திரகாந்தா பட்டுவாகவும் எஸ். எஸ். ஆர். மாடசாமியாகவும் நடித்தனர். ப. நீலகண்டன் டைரக்ட் செய்யும் இப்படத்தின் கதை வசனங்களை அறிஞர் அண்ணா எழுதியிருக்கிறார். டி. ஆர். பாப்பா இசையமைத்திருக்கிறார். விரைவாகத் தயாராகி வருகிறது இப்படம்.

பாமாவும் மாலாவும்

'கலை அரசி' வைஜயந்தி மாலா

கலை உலகின் எல்லா துறைகளிலும்
புகழ்பெற்று விளங்கும் வைஜயந்திமாலா
பற்றி அவரது பால்ய சினேகிதி எழுதும்
மிக அருமையான கட்டுரையாகும் இது...

எழுதுபவர்: பாமா ராமாச்சார்

ஒரு நாள் என் வீட்டு வாயில் முன் ''பேசும் படம்'' காரியாலய கார்வந்து நின்றது. ஒடிந்து விழுந்து விடுபவர் போன்ற ஒருவர் - உதவி ஆசிரியர்களில் ஒருவரான திரு சம்பத்குமார் என்பது பிறகு தெரிந்தது - இறங்கி வந்தார். '' ''பேசும் பட''த்தில் 'என் தோழி' என்ற தலைப்பில், திருமதி வைஜயந்தி மாலாவின் உயிர்த்தோழியான நீங்கள் அவரைப்பற்றி எழுதித் தர முடியுமா?'' என்று கேட்டார். என் உயிருக்குயிரான தோழி பாப்பாவை - அப்படித்தான் யாவருமே அழைப்போம்-பற்றி எழுதக் கசக்குமா என்ன? உடன் ஒப்புதல் தந்து விட்டேன்.

—பாமா.

அமைப்பு.... ரதி-குமார்
ஆர்ட்.... தேவராஜ்
பேட்டி.... சம்பத்து

இன்றைக்குச் சுமார் பத்தொன்பது ஆண்டுகளுக்கு முன் ஒருநாள். யுத்த மேகம் குமுறி இடியும் மழையுமாக உலகையே நாசமாக்கத் துணிந்த நேரம்; 1942-ம் வருஷம், யுத்த பீதி காரணமாக ரங்கூனிலிருந்த எங்கள் குடும்பம் சென்னைக்கு வந்தது. எனக்கு அப்போது பனிரண்டு வயது. பாட்டு, நடனம் என்றால் எனக்கு ஒரே பைத்தியம். அன்று மயிலை ரசிக ரஞ்சனி சபையில் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மியின் கச்சேரி நடைபெற்றது. நான் உட்கார்ந்திருந்த நாற்காலிக்கு அடுத்தபடியாக உட்கார்ந்திருந்தவரைக் கவனித்தேன். ஸ்ரீமதி வசுந்தராதேவிதான் அங்கே இருந்தவர். அவருக்கடுத்து சுமார் எட்டே வயது நிரம்பிய சிறுமி வைஜயந்திமாலா உட்கார்ந்திருந்தாள். எனக்கு அவர்கள் வெகு தூரத்து உறவினர். முதல் பார்வையிலேயே மாலாவிடம் எனக்கு மாறாத - மாளாத அன்பு ஏற்பட்டு விட்டது. வசுந்தராதேவியிடம் கூறி என் ஆசனத்தில் அமரச் செய்து நான் மாலா அருகே உட்கார்ந்தேன். பேசினோம் பேசினோம், அவள் தாயார் முறைத்துப் பார்த்து மௌனமாக இருக்கும்படிக் கூறும் வரை ஓயாது பேசினோம்! கச்சேரி முடிந்ததும் வீடு திரும்பினேன். நேரே மாலாவின் வீட்டுக்குப் போய் விட்டேன். எங்கள் வீட்டுக்கு மூன்றாவது வீட்டில்தானே அவர்கள் இருந்தார்கள்! நாராயணன் கம்பெனி அதிபர் நாராயண அய்யங்காரின் குமாரரும் டைரக்டருமான திரு. பட்டண்ணா, என் சகோதரி சுசிலாவின் கணவர். நானும் என் தாயும் ரங்கூனிலிருந்து வந்தது முதல் அங்கேதான் தங்கியிருந்தோம்.

மாலா அப்போது நடனம் கற்று வந்தாள். நான் அவள் நடனம் கற்கும் போதெல்லாம் கூடவே இருப்பேன். சாப்பாடு கூட அங்கேயே முடிந்து விடும். சிறுமிகளான நாங்கள், புரிகிறதோ இல்லையோ பேசிக்கொண்டே யிருப்போம். ஒரு நிமிஷம் பிரிந்திருக்க நேரிட்டாலும் வேதனையால் தவிப்போம். மாலா சிறு வயதிலேயே ரொம்பவும் குறும்புக்காரி. சில சமயம் இரவு வெகு நேரம் வரை ஆடியும் பாடியும் மகிழ்ந்திருப்போம். நான் அசதியால் தூங்கி விடுவேன். ஈர்க்குச்சி யெடுத்து மூக்கில் விட்டுத் திருகி விட்டு மறுபுறம் திரும்பிப் படுத்து விடுவாள். மூச்சு திணறி பத்து தும்மல் போட்டு விட்டு நான் அவளைப் பார்த்தால் இடி இடி யென்று சிரிப்பாள். மழை பெய்தால் மாலாவுக்குக் கொண்டாட்டம். தோட்டத்திலோ, வாயிலிலோ போய் மழையில் நனைந்து கொண்டிருப்பாள். நானும் கூட நனைந்தாக வேண்டும். அவள் பாட்டியார் யதுகிரி அம்மாள் பார்த்து விட்டாலோ, துடிதுடித்துப் போய், வீட்டிலிருக்கும் எல்லா சலவைத் துணிகளையும் எடுத்து எங்களிருவருக்கும் துடைத்துவிட்டு, அலக்ஷியமாக இருந்ததாக வேலைக்காரர்களைத் திட்டுவார். ஒரு நிமிஷம்தான். மீண்டும் பாட்டி யறியாமல் - வேலையாட்களுக்கும் 'டிமிக்கி' கொடுத்து விட்டு, கிடைக்



கிற எல்லாக் காகிதங்களையும் கிழித்து வெறும் கப்பலும் கத்திக் கப்பலுமாக நூறு கப்பல்கள் செய்து கொண்டு தண்ணீரில் போட்டு அவை மிதப்பதை நனைந்தபடி நின்று ரசிக்க ஆரம்பித்து விடுவாள்.

மாலா எங்கே கிளம்பினாலும் நானில்லாமல் கிளம்ப மாட்டாள். இருவரும் சேர்ந்தே எங்கும் போவதைக் கண்டு "புதுமண ஜோடி போல் சுற்று

கிழதுகள்'' என்று என் வீட்டார் கேலி செய்வார்கள். மாலை வெளியே சென்று வீடு திரும்பியதும் பெரிய கற்பூரக் கட்டியை எடுத்துக் கொளுத்தி திருஷ்டி கழிக்க ஆரம்பித்து விடுவார் யதுகிரி அம்மாள்.

மாலா அந்த வயதிலேயே மிகவும் நன்ருக நடனமாடுவாள். மிக இனிமையாகப் பாடுவாள். அவள் செல்லமாக வளர்ந்தாளே தவிர அசட்டுத்தனம் கிடையாது. எப்போதாவது கொஞ்சம் பிடிவாதம் பிடிப்பாள். அப்போதுகூட அவளைக் கண்டிக்க பாட்டிக்கு மனம் வராது. தாயார் மாலாவைக் கோபித்தால் அவரை பாட்டி திட்ட ஆரம்பித்து விடுவார். சில சமயம் பாட்டி மட்டுமிருக்கும்போது மாலா பிடிவாதம் பிடித்தால் கூட, 'பாமா! நீ பாப்பாவைக் கண்டித்து புத்தி சொல்லு!' என்று என்னிடம் கூறுவாரே தவிர தானுக எதுவுமே சொல்ல மாட்டார்.

மாலாவின் வயது வளர வளர அவள் அறிவும் அழகும் கலைத்திறனும் வளர்ந்து கொண்டே வர ஆரம்பித்தன. அவள் பிறவியிலேயே ஒரு கலா மேதை. நடனம், பாட்டு எல்லாவற்றிலும் சிறந்தவள். வைஜயந்தி மாலா முதல் படத்தின் மூலமே நக்ஷத்திர ஸ்தானம் பெற்று விட்டாள். அவள் நடித்த ''வாழ்க்கை'', படவுலகிலேயே புரட்சிகரமாக அமைந்தது. இப்படி யாவரும் சொன்னுர்கள். எல்லாப் பத்திரிகைகளும் எழுதின. என்னைவிட இதில் மகிழ்ச்சியும் பெருமையும் கொண்டவர்கள் யாருமிருக்க முடியாது. அவளுடன் கணம் பிரியாமல் இருந்த நான் - அவள் திறமை வெளிப்பட சந்தர்ப்பம் கிடைத்ததை நானே பெற்ற பேருகக் கருதினேன். அதைத் தொடர்ந்து பாப்பா நடித்த 'பஹார்' ஹிந்திப்படம் - முதல் ஹிந்திப்படம் - அவளை அகில இந்திய நக்ஷத்திரமாக்கி விட்டது. இன்று உலகிலேயே அவளைப் போல் புகழ்பெற்ற நடிகை கிடையாது.

பாப்பா சின்னஞ்சிறு வயதிலிருந்தே எளிய வாழ்வு வாழ்பவள். செல்வம் நிறைந்த



குடும்பத்தில் செல்லமாகவே - வறுமையின் வாடையே படாது வளர்ந்தாலும், அவள் புத்தரை போல் ஏழை எளியவர்களிடம் மாருத அன்பும் பரிவும் கொண்டவள். 'அம்மா தாயே!' என்று வாசலில் குரல் கேட்டால் போதும்; கையால் எடுத்தால் கொஞ்சம் தானே வரும், என்ற உயர்ந்த பண்போடு கால்படி அளவை நிறைய அரிசி கொண்டு வந்து போட்டு விட்டுப் போவாள். வழியிலே வேலையாள் கேட்டால் கூட அவனிடம் கொடுக்காமல், தானே சென்று போட்டால் தான் அவளுக்குத் திருப்தி.

செல்வம், செல்வாக்கு, புகழ் இதனுலெல்லாம் மாறிவிடாத மனப்பண்பு கொண்டவள் என் உயிர்த் தோழி பாப்பா. யாரிடமும் உயர்வு, தாழ்வு பாராமல் மிகவும் சகஜமாகப் பழகுவாள். அன்பு, அடக்கம், பண்பு கொண்ட அவள் குழந்தையாகவே, இன்றும் கள்ளமில்லாதவளாகவே இருப்பது கண்டு நான் ஆச்சரியப்படுகிறேன். படவுலகில் இவை பலரிடம் காண முடியாதவையல்லவா? என்வரை அவள் ஒரு தெய்வப் பிறவிதான்.

பம்பாயில் படப்பிடிப்பு முடிந்து உடனே சென்னை வருவாள். இங்கே ஓயாத படப்பிடிப்பு வேலைகளிருக்கும். அவை முடிந்து இரவு பத்து மணிக்கு வீடு திரும்புவாள். பிறகு நடனப் பயிற்சி நடக்கும். 'பேசாமெ படுத்துத் தூங்கும்மா' என்று போர்வைக்குள்ளிருந்து பாட்டியின் குரல் கேட்கும். ''இதோ ஐந்து நிமிஷம்தான்'' என்பாள். ஆனுல் இரண்டு மணி நேரமாகும். அதுவும் ஆண்டாள் நடனம் அமைக்க ஆரம்பித்த பின் அவள் தூங்கி நான் பார்த்ததே இல்லை. அதில் சிறு பிழை கண்டாலும் யாரும் விட மாட்டார்கள். ஆகவே ஒவ்வொரு கணமும் அதைப்பற்றியே சிந்தித்து, விஷய மறிந்தோரைக் கேட்டுச் சரிப்படுத்தி, இன்று, கண்டோர் வியக்கும் வண்ணம் ஆடிவருகிருள். ஆண்டாள் நடனம் ஆட ஆரம்பிக்கிருள் என்ருல் அரங்கனே நேரில் வந்து ரசிக்கிருன் என்று மனப்பூர்வமாக நம்புகிறவள் நான்.



அவரது நடனப் பள்ளியில் நான் பார்த்திருக்கிறேன். தன்னைப் போல் தன்னிடம் கற்போரும் வளர வேண்டுமென்ற தூய எண்ணத்துடன் சொல்லித் தருவாள். சிலர் 'நாளை பார்த்துக் கொள்ளலாம்' என்றால் கூட விடமாட்டாள். அப்போதே, இரவு ஒரு மணியானாலும் சரி, சரியாக ஆடிக் காட்டும் வரை விடமாட்டாள். 'நமக்காக நடனக் கலை இல்லை. அதற்காகத்தான் நாம் இருக்கிறோம். நாம் அலுத்துக் கொள்ளக் கூடாது' என்று கூறுவாள். அவள் படும் கஷ்டத்தைப் பார்த்து, 'ஏன் இவள் இப்படிப் பாடுபடுகிறாள்?' என்று வேதனையுடன் நான் கண்ணீர் சிந்தும் நாட்கள் பலவுண்டு. இவளைப்போல் ஓய்வின்றி உழைக்கும் கலைஞரை நான் பார்த்ததே இல்லை.

பாப்பா பாடுவதிலும் தேர்ச்சி பெற்றவள். தன்னை மறந்து மணிக் கணக்காகப்

பாடுவாள். இவள் இந்த நிலைக்கு உயர்ந்ததற்கு யதுகிரி பாட்டிதான் காரணம். கலை என்பது - அதுவும் நடனமும் இசையும் - தெய்வார்ப்பணமானது என்பதை மாலாவின் சின்னஞ்சிறு வயதிலிருந்தே அறிவுறுத்தி வந்திருக்கிறார் அவர்.

பாப்பாவுக்கு தெய்வ பக்தி அதிகம். அவள் கற்ற கலை போதித்தது அப்படி. அதுவும் ஸ்ரீநிவாஸர் என்றால் ஒரு கணம் மெய் மறந்து கண்ணைமூடி நின்றபடி தியானம் செய்ய ஆரம்பித்து விடுவாள். ஒரு சமயம் தசராவை முன்னிட்டு எங்கள் வீட்டில் மிகப் பெரிய ஸ்ரீநிவாஸர் சிலை அமைத்திருந்தோம். அன்று பாப்பா அவசர அவசரமாகப் பம்பாய்க்குக் கிளம்பிக் கொண்டிருந்தாள். விமான நிலையத்திற்கு அவள் கிளம்பியபோதே அதிக நேரமாகி விட்டது. எங்கள் வீட்டில் ஸ்ரீநிவாஸர் சிலை அமைக்கப்பட்டிருப்பதை யறிந்து, ஓடிவந்து சில நிமிஷங்கள் பூஜை செய்து விட்டுப் பறந்து சென்றாள்.

எனக்கு 1950-ம் வருஷம் திருமணமாகி விட்டது. ஒரு நக்ஷத்திரம் என்ற அளவிலில்லாமல் மண ஏற்பாடுகளில் ஒரு சாதாரண ஊழியனைப்போல் கலந்து கொண்டு உழைத்தாள். நான் தனியாகக் குடித்தனம் நடத்தினாலும் பாப்பா சென்னை வந்து விட்டால் நான் பெரும்பாலும் அவள் வீட்டில்தானிருப்பேன். என் கணவரும் நானும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொண்டவர்கள். ஆகவே அவர் எதுவுமே சொல்லமாட்டார். சென்னையிலே படப்பிடிப்பு முடிந்ததும் நான், பாப்பா, யதுகிரி பாட்டி, என் கணவர் நால்வரும் ஏதாவது ஆங்கிலப் படத்துக்கு இரவுக் காட்சிக்குச் சென்று தான் வீடு திரும்புவோம்.

ஸ்டுடியோவிலிருந்து போன் செய்வாள், "இரவு பம்பாய் போகிறேன். ஏரோடிரோமுக்கு வந்து விடு" என்று. அவள் பம்பாய் போகும்போதும் சரி, திரும்பி வரும்போதும் சரி நான் விமான நிலையத்திற்குப் போயாக வேண்டும். விமான நிலைய அதிகாரிகள் நான் அங்கே போகும் போதே பாப்பா வருவாள் என்று தெரிந்து கொள்ளுமளவுக்கு

நான் அங்கே பிரபலமாகிவிட்டேன்.

எனக்கும் பாப்பாவுக்கும் பாட்டி பாட்டு சொல்லிக் கொடுக்க ஆரம்பித்து விடுவார்கள். பெரும்பாலும் பாடல் பக்திரசமான ஸ்லோகங்களுமாகத்தானிருக்கும். பாப்பா மெய்ம் மறந்து பாடுவாள். நான் வாயில் ஈ புகுவது தெரியாமல் ரசித்துக்கொண்டிருப்பேன். எனது



கணவர் நாராயணன் கம்பெனி டைரக்டர்களில் ஒருவர் அவர் அலுவல்கள் முடிந்து இரவு நேரம் சென்ற பிறகே வீடு திரும்புவார். நான் மாலை வீட்டில் இருப்பேன். அங்கே வருவார். கார் ஹாரன் சப்தம் கேட்டுக் கிளம்புவேன். "ராமாச்சார் அண்ணா! மன்னிக்கணும். அக்காவை நான்தான் நிறுத்திக்கொண்டு விட்டேன். பாவம், பசிக்கிறதா?" என்று கேலி செய்து அவருடன் அனுப்பி வைப்பாள். "நீ பாப்பா

வையே கல்யாணம் செய்து கொண்டிருக்கலாமே!'' என்று இவர் என்னைக் கேலி செய்வார்.

சென்னையில் எப்போது படப்பிடிப்பு நடந்தாலும் நானும் உடன் செல்வேன். எல்லோரிடமும் என்னை தன் உயிருக்குயிரான தோழி என்று அறிமுகம்



செய்து வைப்பாள். சமீபத்தில் வீனஸ் பிக்சர்ஸாரின் 'நஸ்ரானு' ஹிந்திப் படத்திற்கான படப்பிடிப்பு வாஹினி ஸ்டுடியோவில் நடைபெற்றபோது நானும் வழக்கம்போல் உடன் சென்றிருந்தேன் அப்போது நல்ல மழை பெய்து கொண்டிருந்தது. மழை என்

னால் அவள் குஷிக்குக்கேட்க வேண்டுமா? சொட்டச் சொட்ட நனைந்து கொண்டிருந்தாள். நான் ஒரு தகரக் கொட்டகையிலே ஒதுங்கி நின்றிருந்தேன். அதைக் கண்ட அவள் என்னை மழையில் இழுத்து கீழே தள்ளி விட்டாள்!

நான் ஒரு மாதிரியாக இருந்தால் கூட என் கணவர், ''பார்ப்பா வரப் போறாளாம்'' என்றால் என் முகம் மலர்ந்துவிடும். ''அடுத்த தடவை அவள் வரும்போது, அவள் உனக்குப் போட்ட சொக்குப்பொடியில் எனக்கும் கொஞ்சம் வாங்கித் தாயேன்'' என்று இவர் கேலி செய்வார்.

நம் அரசியல் தலைவர்கள், கலைஞர்கள், பிரமுகர்கள் யார் வந்தாலும் பண்புடன் உபசரித்துப் பெருமைப் படுத்தி அனுப்புவாள் அவள். பொதுக்காரியங்களுக்காக ஏராளமான நிகழ்ச்சிகளை நடத்திக் கொடுத்திருக்கிறாள்.

அவள் வரும்போது விமான நிலையத்திற்குச் செல்ல முடியாமல் போய் விட்டால் நேரே என் வீட்டுக்கு வந்து விடுவாள். எனக்கு உடல் நலக்குறைவோ என்ற பயம் ஏற்பட்டுவிடும் அவளுக்கு. நான் உடல் நலத்துடனிருந்து, போக முடியாமலிருந்து விட்டால், அவளுக்கு வரும் கோபம் சொல்லி முடியாது.

என் உயிர்த்தோழியிடம் சில குறைகளுண்டு. விமான நிலையத்திற்கு அவள் நேரத்தோடு போய்ச் சேர்ந்த நாளே கிடையாது. எனக்கு 'போன்' வரும். நான் நேரே விமான நிலையத்திற்குச் சென்று காத்திருப்பேன். அவள் படப் பிடிப்பு முடிந்து அவசர அவசரமாக வருவாள் ''ஸாரி! லேட்டாயிடுத்து. பேசக்கூட நேரமில்லை. இனிமே கொஞ்சம் சீக்கிரமே வந்துவிடுகிறேன்'' என்று கூறியபடி ஓடுவாள். ஆனால் ஒவ்வொரு தடவையும் விமானம் கிளம்ப அவளால் தாமதமே ஆகும்.

எளிதில் யாரையும் நம்பி விடுவாள் பாப்பா. அதனால் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு விடுகிறார்கள் சிலர். அவள் ஏமாளியாகிறாள். தன்னைப்போல் எல்லாருமே நல்லவர்கள் அன்று பாவிப்பதால் அவள் அடைந்த நஷ்டம் கொஞ்ச நஞ்சமல்ல.

சில சமயம் தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று வாதிப்பாள். அப்போது அவளிடம் பேசிப்பயனில்லை.

என் கணவருக்குப் போட்டோ பிடிப்பதென்றால் ஒரே பைத்தியம். அதற்காக அவள் அலங்காரத்துடனோ அலங்காரமின்றியோ, தனியாகவும் என்னுடனும் பாட்டியுடனும் நின்று அவரைப் படம் பிடிக்கச் சொல்லுவாள். ''நீங்கள் ஏன் சினிமாவில் நடிக்கக்கூடாது?'' என்று கேட்டு, மேக்-அப் போடச் சொல்லிப் பார்த்து, ''படங்களில் நடிக்க நான் ஏற்பாடு செய்கிறேன்'' என்று அவரிடம் கூறிவிட்டு, ''அவர் உன்னை மறந்துவிடாதபடி நான் 'செக்' பண்றேன்'' என்று என்னையும் கேலி செய்வாள்.

என் இயற்பெயர் பத்மா. ஆனால் பாமா என்றால்தான் யாருக்கும் தெரியும். அந்தப் பெயரே நிலைத்து விட்டது.

கலை, வைஜயந்திமாலாவின்-என் பாப்பாவின் பரம்பரைச் சொத்து. அவள் தாயார் வசுந்தராதேவி சிறந்த நடிகை; புகழ்பெற்ற பாடகி. தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறடி பாயும் என்பார்கள். இப்போது பாப்பா திறமை நிறைந்த தன் தாயையும் மிஞ்சிவிட்டார்.

யதுகிரி அம்மாள், கண்ணை இமை காப்பதுபோல் பாப்பாவைக் காத்து வளர்த்து வருகிறார். தகப்பனார் எம். டி. ராமன் அவர்கள் மகளின் வளர்ச்சியிலே பெரிதும் அக்கறை காட்டி வருகிறார்.

சிற்பி செதுக்காத சிலை பாப்பா, எப்போதும் சிரித்த முகம். அன்பினால் பேசும் அழகிய தாமரைக் கண்கள். இவைகளை யெல்லாம்விட இனிய குணம். மாறாத தெய்வ பக்தி. இவைதான் என் இன்னுயிர்த் தோழி வைஜயந்திமாலாவை உலகம் புகழும் கலையரசியாக்கி விட்டிருக்கின்றன. ★

நவரச நாடகம்

தயாரிப்பு
பேசும் படம்

நடிப்பு
சாவித்திரி

ஆர்ட்
பரணி

புகைப்படம்
பி.கே.நடராஜன்

அமைப்பு
எஸ்.வி.சம்பத்குமார்

நவரச நாடகம் என்ற இந்தக் கட்டுரைத் தொடரில் சாவித்திரி இவ்விதழில் இடம் பெறுகிறார். நமது தென்னிந்திய நடிகையரில் நவரசங்களையும் சித்தரித்துக் காட்டும் பாத்திரங்களை ஏற்று நடித்தவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு. அவர்களில் குறிப்பிடத் தக்கவர்களில் சாவித்திரியும் ஒருவர்.

சாவித்திரி எந்தப் படத்தில் நடித்தாலும் அவர் வரை சிறப்பாக நடித்து ரசிகர்களைக் கவர்ந்து விடுவார். இந்த இதழில் வெளியாகியிருக்கும் படங்கள் எடுப்பதற்காக நான் அவர் வீட்டுக்குப் போயிருந்த போதுதான், அவர் 'அன்பு மகன்' படப்பிடிப்பில் கலந்துகொண்டு அதே மேக்-அப்புடன் சாப்பாட்டுக்காக வீடு திரும்பி யிருந்தார். அந்தப் படத்தில் அவர் ஏற்று நடிப்பது ஒரு விதவையின் பாத்திரம் ஆகவே கறுப்பு புடவை, கறுப்பு சோளியணிந்து,நெற்றியில் பொட்டின்றிக் காட்சி யளித்தார். அவரது நக்ஷத்திரக் கணவர் ஜெமினி கணேசனும் அங்கு இருந்தார். ''எப்படியிருந்தாலும் நீங்கள் இங்கே இருப்பதால் 'சிருங்கார ரசம்' பிரமாதமாக இருக்கும்'' என்று நான் கணேசனிடம்

கூறிவிட்டு வரவும், சாவித்திரி ஒரு பொட்டு வைத்துக்கொண்டு வரவும் சரியாக இருந்தது. நீங்கள் இங்கே பார்க்கும் படங்கள் சுமார் ஆறே நிமிஷங்களுக்குள் எடுக்கப் பட்டவை; பாவங்களை எவ்வளவு விரைவாகப் பிரதிபலித்துக் காட்டு கிருர் சாவித்திரி!

அற்புதம் : "குணசுந்தரி"

செவிடு - ஊமை - குருடு - முட வன், இப்படி ஒருவனை - தெய்வா தினம் என்பவனை, குணசுந்தரி மணக் கிருள். தாலி கட்டியவனைத் தெய்வ மென மதிக்கிருள். தெய்வாதினம் காமரூப வித்தையினுல் பார்வை பெறுவதோடு பேசவும் செய்கிருன். அது கண்டு மற்றவர்கள் வெறுப் படைய குணசுந்தரி ஆச்சரியப் படுகிருள்! குணசுந்தரியின் முன் தெய்வாதினம் ஆணைப்போலவும், பெண்ணைப்போலவும் பாடி ஆடு கிருன். அவளைப்போலவே அருமை யாகச் சித்திரம் வரைகிருன். ஆச்ச ரியப்படுகிருள் குணசுந்தரி. தன் கணவன் அங்கஹீனன் அல்ல, என் றறியும்போது அவளுக்கு ஆச்சரி யம் தாங்க முடியவில்லை. தன் ஆத் திரத்தால் கணவன் கரடியான தறிந்து துடிதுடித்த குணசுந்தரி அவன் வீரசேனனுக சுய உருவெடுத் ததும் ஆச்சரியம், ஆனந்தம், வேதனை இவற்ருல் கட்டுண்டு அவன் காலில் விழுகிருள்.

கோபம் : "அன்னையின் ஆணை"

கணவன் கணேஷின் மேஜை அறை யில் தன் சகப்பனுரின் போட்டு இருப்பதைப் பார்த்து விடுகிருள் பிரேமா. கணேஷ் அப்போது வெளியே சென்றிருக்கிருன். அவன் திரும்பியவுடன் அவனைக்காணும் பிரேமாவுக்குக் கோபம் பொங்கி யெழுகிறது. அதை அடக்கிக் கொண்டு தந்தையைப்பற்றிக் கேட் கிருள். அவன் எதுவும் தெரியா தென்று சொன்னவுடனே அவரது கோட்டைக் கொண்டுவந்து காட்டி பத்திரகாளியைப்போன்ற தோற் றத்துடன் கனல் கக்குகிருள். அத்துடன் அவள் ஆவேசம் நிற்க வில்லை. அவன் தன் கணவனென் றும் பாராது மேலே விழுந்து வெறி யால் அவன் மார்பிலெல்லாம் கீறி விடுகிருள்.

கருணை : "பெண்ணின் பெருமை"

அசடு என்று யாவராலும் கேலி செய்யப்பட்ட ரகுவை பத்மா மணக்க நேரிடுகிறது. தன் கணவன் என்ற ஸ்தானத்தில் அவன் வந்து விட்டதற்காக அவள் வருந்தினுலும் பிறகு திருந்தி அவனிடம் அளவிட முடியாத அன்பு காட்டுகிருள் பத்மா. அவன் ஒரு அப்பாவி. அவன் தன் தம்பியிடம் படும்பாடு கண்டு அவனிடம் அவளுக்குக் கருணை பிறக்கிறது. அவனுக்காக - அவன் நல்லபடி உடல்நலம்பெற்று நாலுபேருடன் சகஜமாகப் பழக வேண்டும் என்பதற்காக, இரவு, பகல் எந்நேரமும் அவனுக்காக உழைக்கிருள்; பாடம் சொல்லித் தந்து அறிவாளியாக்குகிருள். அவ னிடம் கருணைகொண்டு நல்லபடி ஆக்கியும் விடுகிருள்.

தங்கள் குடும்பத்துக்குத் துரோகம் செய்ததை எண்ணி வேதனைப்பட்டு மன்னிப்பு கோரும் மைத்துனன் நாகுவை அவன்தாய் ராஜேஸ்வரியே சுட முயலும்போது அவனிடம் கூடக் கருணைகாட்டி அவன் சாவதைத்தடுக்கிருள் பத்மா.

வெறுப்பு : "மிஸ்ஸியம்மா"

தன் பெற்ருேருக்குக் கடன் கொடுத்ததற்காகத் தன்னையே பணயமாகப் பெறவிரும்பும் டேவிட் மீது தாங்க முடியாத வெறுப்பு மேரி என்ற யுவதிக்கு. அவன் தன் வீட்டுக்கு வருவதை வெறுக்கிருள். அவனைப் பார்த்தால், அவன் பேச்சைக் கேட்டால் அவளுக்கு ஏற் படும் வெறுப்பு சொல்லி முடியாது. வேலை கேட்கப்போகும் மேரியிடம் முதலாளி அசடு வழிந்து பேசவே, வெறுத்துப் பேசி வெளியே வந்து விடுகிருள். தானும் அவளும் உத்தியோக வசதியை முன்னிட்டு கணவன் - மனைவியாக நடிக்கலாம் என்று பானு கூறும்போது, 'ராஸ்கல். ஆண்களெல்லாம் ஒரே ரகம்' என்று கூறிப்போகிருள்.

சாந்தம் : "எங்கள் வீட்டு மகாலக்ஷ்மி"

சுசீலா கோபுவின் மனைவி. தன் மைத்துனர் கணபதி, அவர் மனைவி

அன்னபூரணி இருவருடனும் அமைதியாக வாழுகிருள். சாந்தம் ததும்பிய அவளது முகத்திலே பொறுமையெல்லையற்றுக் காணப்படுகிறது. கண்ணுக்கு இமைபோல சுசிலா இருப்பதாகவும் அவளில்லாவிடில் அது வீடாக இருக்காது என்றும் கூறுகிருள் அன்னபூரணி. அவ்வளவு பொறுமையுடனும் சாந்தத்துடனும் அக் குடும்பத்தை நிர்வகித்து வருகிருள் சுசிலா. அனசூயாவும், சுப்புவும் வந்தபின் அக் குடும்பத்திலே புயல் வீசுகிறது. ஆனல் சாந்தஸ்வரூபியான சுசிலா விவரமறிந்தும்கூட யாரிடம் எதுவும் கூருமல் கருமமே கண்ணுகி அமைதி சேர்க்கிருள். வீட்டைவிட்டே போகலாம் என்கிருன் கோபி பதட்டடத்துடன். 'அவசரம் கூடாது. வேண்டியவர்களை விட்டு விலகுவது தகாது. வீட்டுப் பெரியவர்கள் தாய், தகப்பன் போல. ஆவேசத்திலே அவர்கள் ஏதேனும் கூறினல் கூட பொறுமையாகவே இருக்க வேண்டும். கோபத்தை அடக்க வேண்டும்'. என்று சாந்தமாகக் கூறுகிருள் சுசிலா.

சிருங்காரம்: "யார் பையன்?"

லதாவும் சுந்தராஜனும் காதலர்கள். இருவரது பிணைப்பும் உள்ளத்தால் ஏற்பட்ட தூய்மை நிறைந்ததாகும். அவனின்றேல் தான் இல்லை என்று அவள் கருதுவது போலவே அவனும் கருதுகிருன். பூரி என்ற ஊர் பேர் தெரியாத சிறுவன் சுந்தரை அப்பா என்றழைத்து ஒட்டிக்கொள்ள, தன் காதலனுக்காக அந்தப் பூரியின் தாயாக லதா நடிக்க ஒப்புக்கொள்ளுகிருள். மணமாகாத அவள் ஒரு குழந்தைக்குத் தாய் என்ருல் ஊர் சும்மாயிருக்குமா? இருந்தாலும் சுந்தரிடம் கொண்ட காதல் காரணமாத அவள் எதையும் தாங்கும் இதயம் கொண்டவளாகிருள்.

சாவித்திரி "யார் பையன்?" படத்தில் லதாவாக நடித்தார். சிருங்கார ரசம் இப்படத்தில் அவரிடம் மிகச் சிறப்பாக இருந்தது.

பயம்: "பானை பிடித்தவள் பாக்கியசாலி"

கிளி யூர் மீனு ஒரு அப்பாவிப் பெண். பட்டிக்காட்டுப் பெண்ணை அவளை மூனு செட்டியார் வீட்டு சமையல்காரன் அவர் பங்களாவுக்கு அழைத்துப் போகிருன். அந்தச் சூழ்நிலையைக் கண்டு நடுங்குகிருள் அவள் பின்னர் செட்டியார் தனியறையில் கொஞ்ச முற்படும்போது நடுங்கிச் சாகிருள் அவள். பிறகு மாரப்பனும் வீரய்யனும் மாறி மாறித் துரத்துகிருர்கள். ஒரு அபலை தன்னைக்கொல்ல வருபவன், தன் கற்பைக் களவாட வரும் ஒருவன் இந்த இருவரிடமும் தப்பிக்க ஓடுகிருள்; எங்கே செல்வது, என்ன செய்வது என்று புரியாமல் ஓடிக்கொண்டேயிருக்கிருள். உலகை விட்டே ஓடத்துணிகிருள்.

ஹாஸ்யம்: "மாயாபஜார்"

வத்ஸலை மிகவும் நல்லவள். தன் உறவினனும் தன்னை மணக்க வேண்டியவனுமான அபிமன்யுவிடம் உயிரையே வைத்திருக்கிருள். ஆனல் துரியோதனனின் மகன் லக்கணனுக்கு மணமுடிக்க ஏற்பாடு செய்கிருர் பலராமர். கிருஷ்ணன் வத்ஸலையை கடோத்கஜன் மூலமாகக் கடத்திச் சென்று அபிமன்யுவுக்கு மணமுடித்து வைக்கிருர். அதற்குப் பதிலாக கடோத்கஜன் மாய வத்ஸலையாக இங்கே நடிக்கிருன். அவன் செய்யும் குறும்புத்தனங்களுக்கு அளவில்லை. எல்லோரையும் கேலி செய்து இஷ்டப்படி விளையாடுகிருன்.

வீரம்: "மகாதேவி"

மகாதேவி ஒரு வீரமங்கை. தன் கணவன் வல்லபன் கொடுமைகளுக்குள்ளாக்கப்பட்டபோது கூட அவன் சொல்படி உறுதி குன்ருமலிருக்கிருள். கருணாகரன் அவளை அடையப்படாத பாடுபடுகிருன். ஆனல் அவள் பணியாததுடன், போர்க்கோலமிட்டு வாள்முனையில் அவனைச் சந்திக்கிருள். தான் பெற்ற குழந்தையை - அவள் அப்படித்தான் நினைத்தாள்-கருணாகரன் கொன்றுவிட முடிவு செய்துவிடும்போது கூட அவள் உறுதி குன்ருமலிருக்கிருள்.

அற்புதம் : விஜயா புரொடக்ஷன்ஸாரின் 'குணசுந்தரி' தமிழ்ப் படத்தில் சாவித்திரி 'குணசுந்தரி'யாக நடித்தார். உத்தமியான அவள்முன் ஒவ்வொரு கணமும் பல அற்புதங்கள் நிகழுகின்றன. சாவித்திரி இந்தப் படத்தில் அற்புத ரசத்தைச் சிறப்பாகப் பிரதிபலித்தார்.

கோபம் : பாரகன் பிக்சர்ஸ் 'அன்னையின் ஆணை'யில் பிரேமா அடிக்கடி ஏமாற்றப்படுகிறுள். இதனுல் அவளுக்கு அடிக்கடி எல்லோரிடமும் கோபம் வருகிறது. சாவித்திரி கோப ரசத்தை இதில் சிறப்பாகப் பிரதிபலித்திருந்தார்.

கருணை : தன் அப்பாவிக் கணவன் ரகுவிடம் பத்மாவுக்கு கருணை பிறக்கிறது. ராகினி பிலிம்ஸ் ‘பெண்ணின் பெருமை’யில் சாவித்திரி கருணா ரசத்தை நன்கு பிரதிபலிக்கும் காட்சிகளில் அருமையாக நடித்தார்.

வெறுப்பு : மேரி தன்மானமுள்ள நல்ல யுவதி. தன்னைப் பணத்தைக் காட்டிப் பலியாக்க முற்படும் டேவிட், தனக்குப் போட்டியாக வரும் (அவள் நினைக்கிறாள் அப்படி) சீதா, அவளுடன் சகஜமாகப் பேசும் பாலு யாவரையும் வெறுக்கிறாள். விஜயாவின் ‘மிஸ்ஸியம்மா’வில் சாவித்திரியின் வெறுப்பு ரசம் பிரமாதம்.

சாந்தம்; சுசிலா வயதில் சிறியவளானாலும் பொறுமையின் பூஷணமாக இருக்கிறாள். அவளிருக்குமிடமெல்லாம் சாந்தம் நிலவுகிறது. அன்னபூர்ணாவின் 'எங்கள் வீட்டு மகாலக்ஷ்மி' படத்தில் சாவித்திரி சாந்த ரசத்தைச் சிறப்பாகப் பிரதிபலித்தார்.

சிருங்காரம்: சுந்தரராஜனை காதலிக்கிறாள் லதா. அவனுக்காக எதையும் செய்து முடிக்கும் உறுதிகொண்டிருக்கிறாள் அவள். விஜயா பிக்சர்ஸ் "யார் பையன்?" படத்தில் சாவித்திரி சிருங்கார ரசத்தை அழகுறப் பிரதிபலித்திருந்தார்.

பயம்: கிளியூர் மீனு இயற்கையிலே பயந்த சுபாவமுள்ள கிராமப்பெண். அண்ணனைப் பிரிந்து, ஆடவர் பலரிடமிருந்து தப்பிப் பிழைப்பதற்கு அவள் ஒவ்வொரு விநாடியும் பயந்து சாகவேண்டியிருந்தது. மரகதா பிக்சர்ஸ் ''பானை பிடித்தவள் பாக்கியசாலி''யில் சாவித்திரி பயரசத்தை அழகாகப் பிரதிபலித்தார்.

ஹாஸ்யம்: மாய வத்சலையாக இருக்கும் கடோத்கஜன் பணா வீட்டிலே ஒரே கலாட்டா செய்கிறன். சாவித்திரி மாய வத்சலையாக நடிக்கும்போது ஹாஸ்ய பாகம் சிறப்பாகச் சோபித்தது. 'மாயா பஜார்' விஜயா புரொடக்ஷன்ஸ் தயாரிப்பு.

வீரம்: மகாதேவி ஒரு வீரமங்கை. அவள் இயற்கையிலே வீரமிக்கவள். வீரவல்லபனை விரும்பி மணந்தாள். கருணாகரனை எதிர்த்தாள். சாவித்திரி ஸ்ரீ கணேஷ் மூவிடோனின் 'மகாதேவி''யில் மகாதேவியாக வந்து ஒரு வீராங்கனையின் பாத்திரத்தை மிகச் சிறப்பாகச் சித்தரித்திருந்தார். அதுவும் கடைசியில் தன் குழந்தையை (அவள் நம்பியது அப்படித்தானே) கருணாகரன் கொல்ல முடிவு செய்து கெடுவிட்டும் கூட உறுதியுடனிருக்கிறாள். தன் பெண்மை காரணமாக பாசம் மேலிட்டு வீரம் விழுந்துவிடுமே என்பதற்காக, வீர வரலாறு கேட்கும் கட்டத்தில் சாவித்திரியின் வீரபாவம் மிகச் சிறப்பாக இருந்தது.

காதல்.... காதல்.... காதல்.... காதல்....
மனம் இசை பாட
கண் தினம் தேட
இமை ஊஞ்சல் ஆட
விழி நாணி உருள
மோகன உருவத்துடன்
இளமைப் பருவத்தில்
மலரும் இன்பவாழ்வின்
நினைவினுல் நிலைதவறி
தன்னையும் அறியாமலே
காதல் வலையில் கட்டுப்படும்
உத்தம குலத்தில் உதித்த
யௌவனப் பெண்மடந்தை...
காதல் கட்டிய கணவனிடமா?
காதல் காக்கும் கடவுளிடமா?
ஸ்ரீ வரதராஜா பிலிம்ஸ் அளிக்கும்
மடாதிபதி மகள்
உண்மையை உலகத்தாருக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல்
எளிய வசனத்துடன் எடுத்துக்காட்ட தென்னக-வெள்ளித்திரையினில்
விரைவினில் வெளிவரும் பிலிம்ஸ்தானின் தெகட்டாத தமிழ்ப்படம்
எவ்வயதுள்ளவரையும் எவ்வகையிலும் வசியப்படுத்தும்
பூரண உரிமையாளர்:
ஸ்ரீ வரதராஜா பிலிம்ஸ்
44-மவுண்ட்ரோடு-கிண்டி-
....சென்னை-15
G.H. RAO

புறப்படலாம் என்பதற்கு அறிகுறியாக, கண்டக்டர் பஸ்ஸில் தாவி ஏறி, வாயில் "ஷ்ஷ்ஷ்..." என்று விரலை வைத்து நீண்ட விசில் அடித்தார்.

கோடம்பாக்கம் கலைக்கூடங்களில் பணியாற்றும் பலதரப்பட்ட கலைஞர்களும் பணியாட்களும் மற்ற பிரயாணிகளுடன் அந்தப் பஸ்ஸின் கடைசிப் படிவரை நின்று, நிறைந்து கொண்டிருந்தார்கள்.

ஒரு பெரிய புகை மண்டலத்தையும், கோரமான சப்தத்தையும் எழுப்பிவிட்டு, அந்த நெடிய 'லேலண்ட் பஸ்' மெல்ல ஊர்ந்து செல்ல ஆரம்பித்தது.

பஸ்ஸில் நிறைந்திருந்த பிரயாணிகளையும், அவர்களுடன் அவர்கள் பேசிய வம்புப் பேச்சையும் சுமந்த அந்த பஸ், கோடம்பாக்கம் பஸ் நிலையத்திலிருந்து புறப்பட்டுத் திரும்பியபோது, தலைதெறிக்க ஓடி வந்து கொண்டிருந்தார் ஒருவர். அவருக்கு நன்றாகத் தெரியும், கோடம்பாக்கத்தில் பஸ் கிடைப்பதென்பது மணிக்கணக்கில் ஆகும் என்று. வேகமாக ஏற வந்த நபரை வண்டியிலிருந்த அவரது நண்பர்களில் சிலர், "வா மாப்பிள்ளே! வா! ஓடி வா!" என்று உற்சாகமாக வரவேற்றார்கள்.

ஓடி வந்தவர் பஸ்ஸின் கடைசிப் படியில் காலை வைத்து, ஒரே தாவாகத் தாவித் தொத்திக்கொண்டபோது, "சபாஷ் மாப்பிள்ளே!" என்று சிலர் கூவினார்கள்.

"சபாஷ் மாப்பிள்ளே!" என்ற குரலைக் கேட்டதும், "என்னண்ணே! நம்ப எம். ஜி. ஆர். புதுசா நடிச்சிட்டு வராரே காமெடிப் படம், அதுவா?" என்று கேட்டுக்கொண்டே, சீட்டில் திரும்பி உட்கார்ந்து கொண்டு, வௌவாலைப் போல வாரைப் பிடித்துத் தொங்கிக்கொண்டிருந்த நபரைப் பார்த்து சம்பந்தா சம்பந்தமில்லாமல் கேட்டார் ஒருவர்.

"அதன் பேரு சபாஷ் மாப்பிள்ளே இல்லே!" என்று குறுக்கிட்டார் ஒருவர்.

"பின்னே என்னவாம்?" என்றார் மற்றொருவர்.

"சபாஷ் மாப்பிளே!"

"என்னய்யா? 'நடிகவேள்' பேசறதுமாதிரி பேசறியே!" என்றார் முதல்வர்.

"இல்லே! சபாஷ் மாப்பிளேதான்! தலைப்பிலே 'ள்'ளன்னு இருந்தது உண்மைதான். ஆனா அது இருந்தா எட்டு எழுத்து ஆவுதாம். அது படத்துக்கு ஆவாதாம். அதனாலே 'மாப்பிளே! பண்ணிட்டாங்க!" என்றார் விளக்கம் தந்தவர்.

கோடம்பாக்கம்

சென்னை, கோடம்பாக்கம் இரண்டு விஷயங்களுக்குப் பிரபலமானது. ஒன்று வடபழனி கோயில்; அடுத்தது அதன் ஸ்டுடியோக்கள். கோடம்பாக்கம் வரும் ப ஸ் க ளி ல் வடடழனி முருகனை வேண்டி அருள் பெறுவதற்து வருபவர்களை விட, இங்துள்ள கலைக்கூடங்களைக் காணவும், கலைக்கூடங்களில் பணியாற்றவும் வருபவர்களின் தொகையே அதிகம். எனவே கோடம்பாக்கம் பஸ்ஸில் வரும் பிரயாணிகளில் பெரும்பாலோரது பே ச் சு கலைக்கூடங்களையும், அங்கு ந டை பெ று ம் சம்பவங்களையும், கலைஞர்களையும் பற்றியதாகவுமே இருக்கும். இவற்றில் பல உண்மையாக இருப்பதும், சில திரித்துக் கூறப்பட்டதாகவும் இநப்பது உண்டு. எது உண்மை என்று படுகிறதோ அதை இத் தலைப்பின் கீழ் தருகிறோம். மாதமொரு முறை இனி 'பேசும் படம்' வாசகர்கள் நமது கோடம்பாக்கம் பஸ்ஸில் இலவசமாக ஏறி, கலையுலகைப் பற்றிய சேதிகளை அறிய பவனி வரலாம்.

பஸ்

"ஆனால், நம்ப 'புரட்சி நடிகர்' எம். ஜி. ஆரு. இதெல்லாம் பாக்க மாட்டாரே!" என்றார் முதல்வர்.

"இது அவரு நடிக்கிற படம் தானே? சொந்தப் படம் இல்லையே. தயாரிப்பாளர் ராகவனுக்கு 'எட்டு' பிடிக்காது! சில பேருக்கு 'ஏழு' பிடிக்காது தெரியுமா?" என்றார் 'மாப்பிள்ளை' பட்டம் பெற்று, பஸ்ஸில் தாவித் தொத்தி முன்னுக்கு வந்தவர். பஸ்ஸில் முன்னேறுவது போல வேறு எங்கு முன்னேற முடியும்?

"அப்படிச் சொல்லாதீங்க! எனக்குத் தெரிஞ்சு டைரக்டர் டி. ஆர். ரகுநாத் ஸார் இருக்காரே, அவருக்கு ஏழுன்னுதான் 'லக்'வருமாம்"

"அதென்னது, அப்படி?" என்றார் பேச்சில் புதிதாகக் கலந்து கொண்டவர்.

"சாதாரணமா அவரு - அதான் டைரக்டரு - புதிதாகப் படத்தை டைரக்ட் செய்ய வந்தா இருபத்தஞ்சாவது ஸீனைத்தான் முதல்லே படம் எடுக்கச் சொல்வாரு. இரண்டும் அஞ்சும் ஏழு இல்லையா, அதனாலே தான்!

"ஏன், பதினேழுவது, அல்லது அறுபத்தி ஒன்றாவது காட்சியை எடுக்க மாட்டாரோ?"

"கூட்டினா ஏழு வந்தா சரி! விடு ஆளை!" என்றார் புதிதாகப் பேச்சில் கலந்து கொண்டவர்.

"அதுமட்டுமில்லே. அவர் கார் நம்பர், வீட்டு போன் நெம்பர் எல்லாம் கூட்டிப் பார்த்தா ஏழுதான் வரும். தவிர, அவர் வீட்டு நம்பர் கூட ஏழு தான் வாத்தியாரே!" என்று 'ரகுநாத் புராண'த்தை முடித்தார் அந்த நண்பர்.

இதற்குள்ளாக 'ஜெமினிப் பிரியர்' ஒருவர் வந்து சேர்ந்தார். நம்ம வாசன் கூட இப்படித்தான். அவர் கார் நெம்பரை யெல்லாம் கூட்டினா ஒன்பது தான். வரும். அதுமட்டுமில்லே, அவருக்கு கறுத்த பச்சை வர்ணம்னாலே 'லக்கி' என்று நினைப்பாராம். இதனாலேதான் அவர் சொந்த லெட்டர் பேப்பர்லெ கூட அந்த வர்ணத்தை அச்சடிச்சிருக்காராம்! என்றார் அவர்

"ஜெமினி ஸ்டுடியோஸ் என்று இரவில் எரியும் அவரது ஸ்டுடியோ முகப்பிலுள்ள ஜெமினி முத்திரையில் மட்டும் என்ன வராம்? அதே பச்சை நிறம் தான்! ஏன் முன்பு அவர் வைத்திருந்த பழைய மெர்க்குரி கார், அது கூட இதே கலர் தானே!" என்று முடித்தார் இரண்டாவது 'ஜெமினிப் பிரியர்'.

நகர சபையின் புண்ணியத்தினால் நடு வீதியில் வாயைப் பிளந்து கொண்டிருந்த பள்ளத்தில் பஸ் ஏறி இறங்கியது. அந்தக் குலுக்கலில் வாரைப் பிடித்துக் கொண்டிருந்தவரின் இடுப்பைச்சுற்றி தன் கையை வளைத்துப் பிடித்துக் கொண்டார் 'மாப்பிள்ளை' பிரயாணி! இல்லாவிடில் அவர் விழுந்திருப்பார்!

இதைக் கவனியாத ஜெமினிப் பிரியர், "என்னய்யா, பால் ரூம் டான்ஸ் பஸ்லே ஆடறியா?" என்றார்.

"பால்ரூம் டான்ஸா! அது என்ன? நம்ப படத்திலே வந்திருக்கா ஏதாவது?" என்றார் ஒருவர்.

"படத்திலே முழுசா வந்ததா நினைவில்லே. ஆனால் படத்திலே நடிக்கிறவங்க சிலர் இந்த மேல் நாட்டு நடனத்திலே, முழுமூச்சா ஈடுபட்டுக் கத்துக்கிட்டு வர்றாங்க!" என்று குண்டைத் தூக்கிப் போட்டார் 'மாப்பிள்ளை' நபர்.

"பாலாஜி கத்துக்கிட்டு வர்றதாக ஒரு சினிமாப் பத்திரிகையில் நான்கூடப் படித்திருக்கிறேன்" என்றார் முதல்வர்.

"இப்ப சௌகார் ஜானகியும் கத்துக்கிட்டு வராங்களாம்! என்றார் இந்தப் பேச்சை ஆரம்பித்தவர்.

"பாலாஜி கிட்டவா?" என்றார்.

"என்னண்ணே! நம்மகிட்டயே கிண்டல் பண்றயே! பாலாஜியே இப்பத்தானே கத்துக்கறாரு. அதுவும் பம்பாய்க்கு அசோக்குமாரைப் பார்க்க அடிக்கடிப் போய் இந்த நடன ஆசை வந்து விட்டதாம். அசோக்குமார் இந்த ஆட்டத்திலே

(113-ம் பக்கம் பார்க்க)

பிரபுராம் பிக்சர்ஸ்
விடிவெள்ளி
காட்சிகள்





பிரபுராம் பிக்சர்ஸின் முதல் தமிழ்ப் படம் "விடிவெள்ளி".

சிவாஜி கணேசனும் சரோஜா தேவியும் ஒரு ஜோடி.

பாலாஜியும் எம். என். ராஜமும் ஒரு ஜோடி.

ரங்கராவ் செல்வந்தரான தகப்பனார் வேடத்தில் நடித்திருக்கிறார்.

நாட்டு மக்கள் நல்ல கதையை விரும்புகிறார்கள். ஆகவே நல்ல கதையைப் படமாக்கினால்தான் அது வெற்றி பெறும் என்பதற்காக, கதையைப் பிரதானமாகக் கொண்டு தயாரிக்கப்பட்டிருக்கும் படம் "விடிவெள்ளி".

தன் சகோதரியின் நல்வாழ்வுக்காக சர்வபரித்தியாகம் செய்யத் துணியும் ஒரு உத்தம வாலிபனை மையமாகக் கொண்டு பின்னப்பட்டுள்ள இதன் கதையையும் வசனங்

களையும் ஸ்ரீதர் எழுதியிருக்கிறார். தான் பிறப்பித்த கதா பாத்திரங்களை ஆட்டி வைக்கும் டைரக்டர் பொறுப்பையும் ஸ்ரீதர் ஏற்றிருக்கிறார்.

இப்படத்தின் இசை அமைப்பாளர் ஏ. எம். ராஜா.

இப்படத்தின் ஒளிப்பதிவாளர் வின்சென்ட்.

இப்படத்தின் ஹாஸ்ய பாகத்தில் டி. ஆர். ராமச்சந்திரனும் பத்மினி பிரியதர்சினியும் நடித்திருக்கிறார்கள்.

சிவாஜி கணேசனும் எம். என். ராஜமும் நம் உள்ளத்தைத் தூண்டி உணர்ச்சி வசப்படுத்தும் வகையில் நடித்திருக்கிறார்கள்.

டி. ஆர். ராமச்சந்திரனும் பத்மினி பிரியதர்சினியும் நம்மைச் சிரிக்கச் செய்து வேதனையை மறக்கடிக்கிறார்கள்.



பாலாஜி புது மாதிரியான பாத்திரமேற்று கச்சிதமாகத் தன் திறமையை வெளிப்படுத்தியிருக்கிறார்.

பிரபுராம் பிக்சர்ஸின் "விடிவெள்ளி"யில் சிவாஜி கணேசன், சரோஜா தேவி இருவரும் காதல் காட்சிகளில் மிகவும் தத்ரூபமாக நடித்திருக்கிறார்கள்.

நல்ல கதை, இனிய இசை, கண்ணுக்குக் குளிர்ச்சியான படப்பிடிப்பு, சிறந்த நடிப்பு, வயிறு வலிக்கச் சிரிக்கச் செய்யும் ஹாஸ்யம், சரளமும் கருத்தாழமும் கொண்ட சுவையான வசனம், திறமை மிக்க டைரக்ஷன் ஆகியவை கொண்ட "விடிவெள்ளி" முதல்தரமான படம்.

கேள்வி பதில்

எஸ். எஸ். கே. மூர்த்தி, கிருஷ்ணன், புது டில்லி

நம் படாதிபதிகள் ஏன் துப்பறியும் கதைகளைப் படமாக்குவதில்லை?

கதையின் முடிவிலே வெளியாக வேண்டிய 'சஸ்பென்ஸ்' ஆரம்பக் காட்சியிலேயே தெரிந்துவிடுமே!

மேலைநாட்டு நடிகைகள் போல் நம் நடிகைகள் நடிக்க ஆரம்பித்தால்?

கனம் குறைந்துவிடும்! உண்மை வெளியாகிவிடும்!!

மன்சூர் ஏ. காதர், வத்தளை, இலங்கை

சிவாஜி கணேசன்தான் உலகிலேயே சிறந்த நடிகர் என்பதை அகில உலக படரசிகர்களும் ஏற்றுக் கொள்வார்களா?

அவர்கள் கணேசனின் நடிப்பைக் கண்டால் ஏற்றுக்கொள்ளலாம். நாம் குறிப்பிட்டிருப்பது, நாமறிந்த நடிகர்களிலேதானே! அதைத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறோமே. பாரதியார் உலக மொழிகள் முழுதும் கற்றுணர்ந்தவரல்ல. ஆகவேதான் 'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்' என்று எச்சரிக்கையுடன் பாடினர்.

எஸ். பிரபாகரன், விருத்தாசலம்

டைரக்டர் ஸ்ரீதர் இப்போது எந்தெந்த படங்களை டைரக்ட் செய்கிறர்?

வீனஸின் நஸ்ரானு (ஹிந்தி) ஸ்வதந்திரா மூவீஸின் 'சியாமளி'

ஜெமினி கணேசன் பற்றிச் சில வரிகள்......?

அன்றுபோல் இன்றும் மிகச் சரளமாக யாவருடனும் பழகுகிறர். படித்தவர். கட்சிச் சிக்கலில் மாட்டிக் கொள்ளாதவர். புகழேணியின் உச்சியிலிருப்பதால் மனமாற்றம் கொண்டுவிடாத-எளிமை நிரம்பியவர். தன்னைப்போல் யாவரும் முன்னணிக்கு வரவேண்டுமென்று விரும்புகிறவர். சுமார் இருபது ஆண்டுகளுக்குப் பின், வெள்ளி விழாக் கொண்டாடிய படத்தின் கதாநாயகர். சாவித்திரிக்குப் பின்னல் போய் விட்டவர். சாவித்திரி கையெழுத்திடும்போது சாவித்திரி கணேஷ் என்று பின்னல் தள்ளுகிறாரல்லவா? வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்ய செஞ்சிலுவைச் சங்கத்தாரைப் பிடித்த புத்திசாலி. போதுமா?

வெள்ள நிவாரண நிதிக்கு சிவாஜி கணேசன் எவ்வளவு உதவினர்?

கணக்குப் பார்த்துச் செய்யவில்லை. ஆனல் அவரது கணக்கர் எழுதிக் கொண்டிருக்கலாம். செலவானது சுமார் எழுபதாயிரம் ரூபாய்.

ஆர். ராக்கியப்பன், கோவை

சென்ற வருட சிறந்த படம் எது?

இவ்வளவு கலபமாகக் கேட்டு விட்டீர்களே! தமிழ்ப் புத்தாண்டு மலரில் பாருங்கள். எல்லா விவரமும் கிடைக்கும்.

'மாயா மச்சேந்திரா'வில் நிருபாராய்.

கே. வி. பரமேஸ்வரன்,
பெருந்துறை

ஜலந்தரில் ஒரு படக் கம்பெனிக்கு நடிக, நடிகையர் தேவை என்று விளம்பரம் வந்திருக்கிறதே, விண்ணப்பிக்கலாமா?

எண்ணித் துணிக கருமம்!

பி. ராமராஜ், ஸ்ரீவில்லிபுத்தூர்

தன் சொந்தத் தயாரிப்பான ''யானைப் பாகன்'' படத்தில் சண்டைக் காட்சிகள் பல இருந்தும் சாண்டோ சின்னப்பா தேவர் ஏன் கலந்துகொள்ளவில்லை?

பெரும்பாலான காட்சிகளில் மிருகங்கள் சண்டை போடுவதால், அவர் கலந்து கொள்ளவில்லை போலும்!

ஆர். இந்திரா, கமுதி

ஹிந்தியில் லட்கி, ராஜ்திலக், பைகாம் முதலியவை ஓடிய அளவுக்கு இங்கே பெண், வஞ்சிக்கோட்டை வாலிபன், இரும்புத்திரை ஆகியவை ஓடவில்லையே, ஏன்?

தமிழர்கள் புத்திசாலிகள்!

மாடர்ன் தியேட்டர்ஸாரின் 'சர்ப்பத் தீவு', 'ராஜகட்டளை' எப்போது வரும்?

இன்னும் ஆரம்பமாகவே இல்லையே. இதற்குள் திரையீடு பற்றிக் கவலை ஏன்?

சி. கணேசன், ஓங்கோல்

ஹிந்தி 'கல்யாண பரிசில்' நடிப்பது ஜெமினி கணேசனா, ராஜ்கபூரா?

இருவருந்தான். கணேசன் கௌரவ நடிகராக வருகிறார். ராஜ்கபூர் கதாநாயகன்.

சம்பு-ராது, பம்பாய்

'ராக்-என்-ரோல்' படத்திற்கு ஆதரவு கிட்டுமா?

படம் வரட்டும். எந்தப் புற்றில் எந்தப் பாம்பிருக்குமோ?

டி. கே. ஷண்முகம் ஏன் படங்களில் நடிப்பதில்லை?

கடவுளின் குழந்தை இப்போதுதான் வெளியாகியது. கப்பலோட்டிய தமிழ’னில் நடிக்கிறார். நடிக்கவில்லை என்று யார் சொன்னது?

டி.கே. பகவதி சிவாஜி கணேசனுடன் நடித்தால்?

சம்பூர்ண ராமாயணம் படத்தில் நடித்திருக்கிறாரே!

மூனுஸின் பஞ்சமொழிப் படமான 'தேவசுந்தரி' எந்த 'டெண்ட் சினிமா'வில் வந்து போனாள்?

மலையாள தேவசுந்தரி தியேட்டருக்கு வந்து ஓடிவிட்டாள்! இப்போது அரை அங்குலத்தில் ஆரம்பமாகி ஐந்தாறு அங்குலம் வரை (விளம்பர மூலம்) வளர்ந்து வருகிறாள்.

ஜானகிராமின் ''ராக்-என்-ரோல்'' தமிழ்ப் படத்தில் எகிப்து நாட்டிய நடிகை லைலா ஜஸா இரியா.

வேலவன் புரொடக்ஷன்ஸ் ''குலமங்கை''யில் ஜமுனு.

எஸ். சியாம், மாத்தளை-இலங்கை

1960-ம் ஆண்டு நீங்கள் இரண்டு முறை பார்தத தமிழ்ப் படம் எது?

1960-ம் ஆண்டின் சிறந்த படம் எது என்பதைத் தெரிந்து கொண்டு விடவிரும்புகிறீர், அப்படித்தானே?

1960-ம் ஆண்டு வெளி வந்த படங்களில் இசையமைப்பில் உங்களைக் கவர்ந்த படம் எது?

படிக்காத மேதை.

எஸ். என். கோபாலசாமி,
சத்தியமங்கலம்

பானுமதி இரு வேடங்களில் நடிப்பதாக இருந்த 'கலை அரசி' என்ன வாயிற்று?

இப்போது வளர ஆரம்பித்திருக்கிறது.

எம். ஜி ஆர். நடிக்கும் ''விக்கிரமாதித்தன்'' படத்திற்கு கதை, வசனமெழுதியவர் யார்?

திரைக் கதை - வசனம் எழுதியிருப்பவர் 'என் தங்கை' நடராஜன்.

வி. கே. மூர்த்தி, திருச்சி

'பெற்றமனம்' தோல்வி யடைவானேன்?

பல வருஷங்களாக 'இழுத்து'க் கொண்டிருந்தது, இப்போது போய் விட்டது!

தீபாவளிப் படங்களில் சிறந்தது எது?

கைராசி, மன்னாதி மன்னன் இரண்டும் வெற்றிகரமாக ஓடுகின்றன.

ஓரியண்டலின் 'தியாகதீபம்' படத்தில் பத்மினி நடிக்காவிடில் வேறு யார் நடிப்பார்?

தயாரிப்பாளர் படவேண்டிய கவலைதானே இது?

கைராசியில் ஜெமினி கணேசனின் நடிப்புப்பற்றித் தங்கள் அபிப்பிராயமென்ன?

காதல் மன்னன் என்ற பெயர் அவருக்கு நிச்சயம் பொருந்தும்!

பா. ராமகிருஷ்ணன்,
பெங்களூர்

மனிதனுடைய வாழ்க்கைப் பாதையில் இன்பம் ஆரம்பமாகி துன்பமும் தொடர்கிறது என்ருல் அவன் சிந்தனை எப்படி யிருக்கும்?

இன்பம் நிலைக்க வேண்டுமென்பதாகத்தான் இருக்கும். ஆனுல் எல்லாவற்றையும் சரிசமமாகப் பார்ப்பதானுல் துன்பம் தனியாகத் தெரியாது.

ஜுபிடரின் பிரம்மாண்ட தயாரிப்பான ''அரசிளங்குமரி''யில் ராஜசுலோசனு.

ஜெய்குமார் பிக்சர்ஸ் ''மகாவீரபீமன்'' படத்தில டி. கே. பகவதி.

தமிழ் நடிகர்களில் விலையுயர்ந்த கார் யாரிடமிருக்கிறது?

சிவாஜி கணேசனிடம் சமீபத்திய சவர்லெட்கார் இருக்கிறது.

வி. சண்முகம், பதுளை, இலங்கை

விஜயபுரிவீரன் ஆனந்தன் இப்போது எத்தனை படங்களில் நடிக்கிறார்?

சுமார் ஒரு டஜன் படங்களில். 'மகளே உன் சமத்து' அவர் நடித்து விரைவில் வரவிருக்கும் படமாகும்.

பி. முத்துகிருஷ்ணன், திருச்சி

சினிமா மனிதனுக்கு அவசியமா?

இன்றைய நிலை அப்படித்தானிருக்கிறது.

கே. பாஸ்கர், பொன்னேரி

சரோஜாதேவி 'திருமணம் செய்து கொள்ள ஏழு வருடங்களாகும்' என்று ஒரு பேட்டியில் கூறியுள்ளார் இதைப் பற்றி உங்கள் கருத்து என்ன?

மண வயது வரவில்லை அவருக்கு. அல்லது மணந்து கொண்டதும் லலிதாவைப்போல் விலகிவிடுவார். இரண்டில் ஒன்றாக இருக்கலாம்.

சீதாபதி, திருச்சி

வாசு பிலிம்ஸ் ''பாலும் தேனும்'' படத்தில் யார் யார் நடிக்கிறார்கள்?

ஜெமினி கணேசன், சரோஜாதேவி, சகஸ்ரநாமம், தங்கவேலு முதலியோர்.

ஜெமினி கணேசனின் விலாசமென்ன?

2-A, நுங்கம்பாக்கம் ஹைரோடு, சென்னை-6.

ஞா. சந்திரசேகரம், இலங்கை

'விஜயபுரி வீரன்' ஆனந்தன் பற்றிச் சிலவரிகள்...?

அந்தப் படத்தில் நடித்து வெற்றி பெற வேண்டுமென்பதற்காக உயிருக்குத் துணிந்து பல சாகஸச் செயல்களிலும் தைரியமாக ஈடுபட்டார். பழகுவதற்கு ரொம்பவும் ஏற்ற நண்பர். யாவருக்கும் எளியவர். இப்போது நடிக்கும் படங்களிலும் சாகஸ காட்சிகளில், தானே நடிக்கிறார்.

டி. எம். ரெட்டி உரிமை பெற்றுள்ள அஸ்வராஜின் ''தீபாவளி'' தமிழ்ப் படத்தில் என். டி. ராமராவ்.



வேலவன் புரொடக்ஷன்ஸ் "குல மங்கை"யில் கும்மிடி.

கே. பி. எஸ். மணி,
மடுவின்கரை

ஹிந்திப் படம் தமிழ் நாட்டில் பல வாரங்கள் ஓடுகின்றன. தமிழ்ப் படங்கள் வடநாட்டில் ஒருவாரம்தான் ஓடுகிறது. காரணம் என்ன?

அவர்கள் ஒரு கதையை படமாக ஒருதரம் தான் பார்ப்பார்கள்! அவர்களுக்கு மொழி இனபக்தியுண்டு; அது வெறியாகக்கூட உருவெடுக்கும்.

லாபிர் ஏ. மஜீத், மாத்தறை,
இலங்கை

கலைஞர்கள் சினிமாவுக்காக உழைக்கிறார்களா, அல்லது சினிமாவினால் பிழைக்கிறார்களா?

தாங்கள் பிழைப்பதற்காக சினிமாவுக்கு உழைக்கிறார்கள்!

செல்லப்பா, சென்னை

'மூட்' என்று அடிக்கடி கலை உலகினர் கூறுகிறார்களே, எதைக் குறிப்பிடுகிறார்கள்?

கலை உலகில் பெரும்பாலோரின் அபிப்பிராயப்படி 'மூட்' என்றால் பெங்களூர் அல்லது புதுச்சேரி என்று அர்த்தம்!

நீங்கள் சினிமா நடிகையைக் காதலித்ததுண்டா?

எனக்கு அப்படியெல்லாம் நடிக்கத் தெரியாதே!

நீங்கள் வெறும் வாய்ச்சொல் வீரரா, செயல் வீரரா?

ஏன், எழுத்து வீரனும்கூடத்தான்.

இந்திராதேவி, திருச்சி

பெண்களின் நகை ஆசை எப்போது ஒழியும்?

இன்னும் இருக்கிறதா என்ன?

சி. சிதம்பரம், சென்னை

வாழும் பெண்கள் மூக்குத்தி போடாத காரணமென்ன?

கடிவாளமில்லாத குதிரையாக இருக்க!

டி. எம். ரெட்டி உரிமை பெற்றுள்ள அஸ்வராஜின் "தீபாவளி" என்ற தமிழ்ப் படத்தில் சாவித்திரி.

டி. பாஸ்கரன், பெங்களூர்

புனர் ஜென்மம், செந்தாமரை, வடிவுக்கு வளைகாப்பு இம்மூன்று படங்களில் எது முதலில் வரும்?

வடிவுக்கு வளைகாப்பு.

ஒரு மனிதன் அதிகமாக எதை விரும்புகிருன்?

பணத்தை. அது இருந்தால் எதையும் சாதிக்கலாமே இப்போது!

மதுவைச் சிலர் அதிகம் விரும்பி அருந்துவதேன்?

சிலர் உள்ளே கிடக்கும் 'மூட்' இருக்கிறதே. அதை வெளியே கொண்டு வருவதற்காக அருந்துகிருர்கள்! கவலை இல்லாத மனிதனாக இருக்க முடியுமல்லவா? அதற்காகவும் தான்!

வேப்பங்காய்க்கும் நம் வாழ்க்கைக்குமுள்ள வித்தியாசமென்ன?

அது நம் வாழ்க்கையில் சிலர் உருவில் குறுக்கிடுகிறது. நாம் அப்படிச் செய்வதில்லை.

எஸ். வைத்தியநாதன், சென்னை

அசோகன் எத்தனை படங்களில் நடிக்கிருர்?

சுமார் முப்பது படங்களில் நடித்து வருகிருர்.

செ. தம்பிராசா, கண்டி,
இலங்கை

படித்தவரான வைஜயந்திமாலா, சிவாஜி கணேசன் அதிகம் படிக்காதவர் என்பதால் அவருடன் நடிக்க மறுக்கிருராமே, உண்மையா?

தவறு. வைஜயந்திமாலா அப்படியெல்லாம் கற்பனைகூட செய்யத் தெரியாத உள்ளம் கொண்டவர். படிப்புக்கும் நடிப்புக்கும் சம்பந்தமில்லை. அவர்கள் இருவரும் ராஜபக்தியில் நடித்தார்கள். இரும்புத்திரையில் நடித்தார்கள். சித்தூர் ராணி பத்மினியில் நடிக்கிருர்கள். வைஜயந்திமாலா, சிவாஜி கணேசன் படிக்காத மேதை என்பதை நன்குணர்ந்தவர்.

எம். எஸ். எம். வுகாரி,
கல்முனைக்குல்

மேல்நாட்டு ஹாஸ்ய நடிகர்களான சார்லி சாப்ளின், லாரல்-ஹார்டிக்கு ஒப்பான தமிழ் ஹாஸ்ய நடிகர்கள் யார்?

யாருமில்லை. நம்மவர்கள் அவர்களைவிடச் சிறந்தவர்கள்.

ம. து. கோபாலன், சென்னை

பெண்கள் சிரிப்பதை எப்போது நம்பக்கூடாது?

நம்மிடம் பொருளிருக்கும்போது!

பெண்ணின் இதயவீணையை மீட்டுவது எது?

ஆணின் அன்பு.

வாழ்க்கை என்ற பெண் மலருக்கு நறுமணம் தருவது எது?

கணவன் என்ற தூய இணைப்பு!

இன்றைய முன்னணி நட்சத்திரங்கள் தாங்கள் நடித்த பழைய படங்களைப் பார்க்க நேரிட்டால் என்ன நினைப்பார்கள்?

'முன்பு நாம் எவ்வளவு அழகோடும் திறமையுடனும் விளங்கியிருக்கிரேம்' என்று.

ஏ. எல். அப்துல் ஹலீம்,
கடுவெல, இலங்கை

தங்கவேலுவுக்கு பின்னணி பாடலில் யார் குரல் பொருந்துகிறது?

எஸ். ஸி. கிருஷ்ணன்.

எஸ். சிவசாமி, தெனியாய,
இலங்கை

ஜெமினி கணேசனும் சரோஜாதேவியும் சேர்ந்து நடித்த முதல் படம் எது?

பார்த்திபன் கனவு. முதலில் வெளி வந்தது 'கல்யாண பரிசு'.

இ. சாமிநாதன், தெலிவலை,
இலங்கை

பெண்களுக்கு எது முக்கியம்?

அச்சம், படம், நாணம், பயிர்ப்பு என்று முன்புகூறி வந்தார்கள். இப்போது முக்கியமாகக் கருதப்படுவது கவர்ச்சி!

விஜய சாமுண்டீஸ்வரிக்குப் பிறகு...?

கணேசன், சாவித்திரியுடன் நான் பேசிக்கொண்டிருந்தபோது, 'அடுத்தபடி உனக்கு 1962-ல் தான் குழந்தை பிறக்குப்' என்று கணேசன் சிரித்தபடி சாவித்திரியை கேலி செய்தார்.

க. ஆ. முருகேசன், பவானிசாகர்

மன்னாதி மன்னன், கைராசி, பாவை விளக்கு, பெற்ற மனம் இவற்றில் சிறந்தது எது?

நான்கும் வெவ்வேறு அமைப்பு கொண்டவை. ஆகவே சிறந்தது என்று கூற இவற்றை ஒப்பிடக்கூடாது. வசூலில் கைராசி, மன்னாதி மன்னன், பாவை விளக்கு, பெற்ற மனம் இப்படியாக வரிசைப்படுத்தலாம்.

பி. பத்மராஜு, நெல்லூர்

சினிமாப் பத்திரிகை நடத்தும் நீங்கள் 'குடிப்ப' துண்டா'?

ஓ... சோடா, காபி, டீ போன்றவற்றைக் குடிப்பது உண்டு!

கே. எஸ். வெங்கடாசலம், திண்டுக்கல்

எஸ். பாலசந்தர் டைரக்ட் செய்யும் 'ஓடாதே நில்!' எப்போது திரைக்கு வரும்?

'ஓடாதே நில்!' என்று பெயர் வைத்ததாலோ என்னமோ, ஓடாமல் நின்று விட்டிருக்கிறது. 'பெட்ரோல்' கிடைத்தால் ஓடும்.

எஸ். பாலகிருஷ்ணன், வாலிபாளையம்

அருணா பிலிம்ஸ் 'சிவகாமியின் சபதம்' என்னவாயிற்று?

அறிவிப்புடன் நின்றிருக்கிறது.

தனம், சூசையபுரம்

நடிகை சாவித்திரி ஏன் தன் குழந்தையை வெளியே எடுத்துச் செல்லுவதில்லை?

கார் இருக்கிறதல்லவா? அதனால் அதில் அழைத்து வருகிறார்!

பி. எஸ். கே. சாமி, சென்னை

நடிகையின் குடும்ப வாழ்வில் நடக்கும் தவறுகள்பற்றி 'பேசும் படம்' கண்டிக்காதது ஏன்?

நமக்கு அவர்கள் கலைவாழ்வைப் பற்றித்தான் அக்கறை. அவர்கள் குடும்ப வாழ்வுபற்றிக் குறைகூற நாம் யார்?

ச. ந. தர்மலிங்கம், சத்தியமங்கலம்

'சாக்ரடீஸ்' தங்கராசு படங்களில் நடிப்பதற்கு முன் என்ன செய்து கொண்டிருந்தார்?

நாடகங்களில் நடித்து வந்தார். மோட்டார் சம்பந்தப்பட்ட தொழில் செய்து வருகிறார்.

பண்பில்லாத நடிகன்...?

கலையுலகிற்குத் தேவையற்றவன்.

எம். டி. கே., சென்னை

காதலனிருக்கும் பெண் மற்றொருவனை நாடுவதேன்?

இதற்குப் பெயர் காதலா? அவன் காதலனா?

வி. எஸ். தியாகராஜன், மதுரை

ஒரு பெண்ணின் வாழ்வில் திருப்தி ஏற்படுவது எப்போது?

கண் நிறைந்த கணவன் கிடைத்து, இன்பவாழ்வு நடத்த மாமி, நாத்தியின் தொந்தரவில்லாதபோது ஒரு மகவும் பிறந்து விட்டால் அவள் அடையும் இன்பம் வர்ணிக்க முடியாதது.

சித்திரக் கதை!

சோவியத் சுற்றுப் பயணத்தின்போது கலைவாணருக்கு ஒரு அனுபவம் ஏற்பட்டது. அவர்களது மொழி தெரியாத காரணத்தால் அவருக்கேற்பட்ட அனுபவம் சுவையானது. 'கோழி முட்டை வேண்டும்' என்று அவர் பல வகைகளில் ஜாடை செய்து கேட்டும், அவர்களுக்குப் புரியவில்லை. கடைசியில் ஒரு காகிதத்தில் பெட்டைக்கோழி ஒன்றைப் போட்டு அதனடியில் முட்டைப் படமொன்றை எழுதி, ஆறு விரல்களைக் காட்டி "இவ்வளவு கொண்டு வா!" என்று கலைவாணர் சொன்னதும் தான் அவர்களுக்குப் புரிந்தது! ஆறு முட்டைகள் அடுத்த கணமே வந்து விட்டன! மொழி தெரியாத இடத்திலும் கலைவாணர் தன் காரியங்களை தடங்கலில்லாமல் நிறைவேற்றி வந்தார்!

அசுரன் என்று வர்ணிக்கப்படும் ராவணனை ஒருத்தி-மண்டோதரி - மணக்கிருள். பதிவிரதா சிரோமணியாகத் திகழுகிருள். ஆம், அவன் இராவணேஸ்வரன் அல்லவா? வைதேகி பிக்சர்ஸ் அளிக்கும் என். ஏ. டி. யின் "சீதாராம கல்யாணம்" படத்தில் மண்டோதரியாக சரோஜாதேவி.

வெட்டுங்கள்! வெட்டுங்கள்!!

கைராசி

படகோட்டி மனைவி மோகனிடம் பேசுவதாக ஒரு வசனம் வருகிறது. ''அவரு அப்படித்தான்; பொம்பளைங்களைக் கண்டுகிட்டா, ஏத்திக்கிட்டுப் போயிடுவாரு. நீங்க வாங்க நான் ஏத்திக்கிட்டுப் போகிறேன்'' என்று கூறுகிறாள் அவள். இது மிக மிக ஆபாசமான வசனம் என்பதுடன்; ஆண் தவறு செய்தால் அதைத் தானும் செயல்படுவது போல் ஒரு பெண் கூறுவதாகக் காட்டுவது, தவறு மிகுந்த செயலாகும். இக்காட்சியை - குறிப்பாக இரு பொருள் வசனத்தை வெட்டி விடலாம்.

கோ. பெ. வேங்கடாசலம்,
கோவை.

திலகம்

சாம்பசிவம் வீட்டிற்கு பிள்ளை பார்க்க வருகிறார் ஒருவர், தன் மனைவியுடன். தன் மனைவியைப் பற்றித் 'திருப்புகழ்' பாடுகிறார். அதைக் கேட்ட சாம்பசிவமும் ''ஹா...ஹா...உங்க சம்சாரம்தான் என் சம்சாரம்'' என்கிறார். தவறான கருத்தைப் பிரதிபலிக்கும் இக்காட்சியை வெட்டி விடலாம். சாம்பசிவம் கொடியவன் தான். அதை நிரூபிக்க இதுவா கிடைத்தது?

வேங்கை மார்பன்,
கோவை.

சுதர்சனம் பிக்சர்ஸ் ''ஹல்லோ, மிஸ்டர் ஜமீந்தார்'' படத்தில் கோபாலகிருஷ்ணன் - டி. எஸ். பாலையா.

கைராசி

மருத்துவமனை என்பது அமைதியின் இருப்பிடமாகத் திகழவேண்டும். இப்போது மருத்துவ மனைகளருகே எவ்வித இரைச்சலும் இல்லாதபடி தடுத்தும் வருகிறார்கள். ஆனால் அமைதி காக்க வேண்டிய நர்ஸ், தான் தவறு செய்வது மன்னியில் மற்ற நர்சுகளையும் கூட்டிக் கொண்டு ஆடிப்பாடி விளையாடுகிறாள். இது மருத்துவ மனைகளின் முறையைக் கேலிசெய்கிறது. மோகனும் சுமதியும் அங்கே பழகும் விதம் தவறான எண்ணத்தை ஏற்படுத்துகிறது. ஆகவே மருத்துவமனை நடைமுறை விதிகளுக்கு மாறாக இருக்கும் இக்காட்சிகளை வெட்டிவிடலாம்.

குமாரி ஸ்டெல்லா,
பாளையங்கோட்டை.

கைராசி

சங்கர் நர்சிங்ஹோம் ஒரு தனிப்பட்டவரின் மருத்துவ விடுதி. அங்கே கூடியவரை வசதியுள்ளோர்தான் வைத்தியத்திற்குப் போக முடியும். அது அரசாங்க இலவச மருத்துவ சாலையல்ல. உணவு வசதிகள்கூட செய்து தரப்பட மாட்டாது சாதாரணமாக நர்சிங்ஹோம் என்று குறிப்பிட்டாலே பணவசதி படைத்தோர் பற்றிய நினைவுதான் வருமே தவிர ஏழைகள் சகஜமாக வந்து போகக்

கூடிய இடமென்று நினைக்க முடியாது. அப்படியிருக்க சங்கர் நர்சிங் ஹோமுக்கு வரும ஒரு வயிற்று வலிக்காரனிடம், "ஒருமாதம் இலவசமாக ரொட்டி தின்னலாம் என்று வந்தாயா?" என்று சுமதி கேட்கிருள். அவன் ஆம் என்பதுபோல் தலையசைக்கிருன். இது பொருந்தாதது. வெட்டித் தள்ளலாம்.

பி. வி. அசலம்,
கோயம்புத்தூர்.

கைராசி

போலீஸார் பிடிக்க வரும்போது தன் மனைவி பச்சைக் குழந்தையுடனிருப்பதையும் லட்சியம் செய்யாது அதைப் பார்க்கக்கூட நேரமின்றி ஓடி விடுகிருன் குமார். பதினறு வருடங்களுக்குப்பின் தாய்நாடு திரும்பி லக்ஷ்மியையும் சுமதியையும் சந்திக்கிருன். அத்தனை வருஷங்களுக்குமுன் தன் குழந்தையையும் மனைவியையும் பிரிந்ததைப் பற்றிக் கூறுகிருன். அத்துடன் தானும் மனைவியும் குழந்தையும் உள்ள புகைப்படத்தைக் காட்டுகிருன். இதை வெட்டிவிட வேண்டும். குழந்தை முகத்தைக்கூடப் பார்க்க நேரமில்லாமல் தப்பியவர் எப்படிப் புகைப்பட மெடுத்துக் கொண்டிருக்க முடியும்?

ஆர். எஸ். கமலம்,
கொச்சி.

புதிய பாதை

ஆரணங்கு என்பது பற்றி இப்படத்தில் வர்ணிக்கும்போது 'ஐரோப்பிய மாதின் உடற்கட்டு' என்று சொல்லிவிட்டு, "அப்படியானல் ஒரு திராவிட மங்கையை மணக்கப் போகிருயா?" என்று கேட்கப்படுகிறது. திராவிட நாட்டில் ஐரோப்பிய மாது எப்படி முளைக்க முடியும்? பொருந்தாத இந்த வாதத்தை எப்படி ஏற்கமுடியும்? இதை வெட்டிவிடலாம்.

சிரங்கன்,
சென்னை

திலகம்

படத்தின் ஆரம்பத்தில் வரும் ஹெலன் நடனம் ஓரளவுக்கு தமிழ் நாட்டு பண்புக்கு மீறியதாக இருக்கிறது. இது இல்லாமலேயே படம் நன்ருக இருக்குமே!

சரஸ்வதி,
சேலம்.

ஆங்கில அதிர்ச்சி!

என். எஸ். கிருஷ்ணன் சோவியத் ரஷ்யாவுக்குச் சென்றபோது ஒரு விருந்தில் கலந்து கொண்டார். அவருடன் டைரக்டர் கே. சுப்பிரமணியமும் சென்றிருந்தார். விருந்தில் மது வகைகளும் பறிமாறப்பட்டன. 'கலைவாணர்' அரை கிளாஸ் மது அருந்தி விட்டுப் பாராட்டுக்கு நன்றி தெரிவித்துப் பேச எழுந்தார். வழக்கமாக அவர் தமிழில் தான் பேசுவார்; சுப்பிரமணியம் அதை ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பார். ஆனல் கலைவாணர் எடுத்த எடுப்பிலேயே ஆங்கிலத்தில் பிரமாதமாகப் பேச ஆரம்பித்து விட்டார். அவர் பேசி முடித்ததும் சுப்பிரமணியத்தைப் பார்த்து, "நான் இப்போது பேசியதை அப்படியே ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துச் சொல்லுங்கள்" என்று சொல்லிவிட்டு உட்கார்ந்து விட்டார். ஆங்கிலம் கற்காத கலைவாணர் அன்று ஆங்கிலத்திலேயே அதியற்புதமாகப் பேசியது சுப்பிரமணியத்திற்கே ஆச்சர்யத்தைக் கொடுத்தது. அவர் எப்படிப் பேசினர் என்பதும் இன்று வரை புரியாத மர்மமாக இருக்கிறது!

நான் ரசித்த காட்சி

வீரக்கனல்

வேழநாட்டு துன்மந்திரி ரணதீரன், ராஜாத்தியை வஞ்சகமாக கடத்தி வந்து, அவளை அடைய முயற்சிக்கிறான். ராஜாத்தி 'வஞ்சகனை வஞ்சகத்தாலேயே வெல்ல வேண்டும்' என்று தீர்மானித்து பைத்தியம்போல நடிக்கிறாள். ரணதீரன் முயற்சி தோல்வியடைய, வெட்கித் திரும்புகிறான். அஞ்சலிதேவி ராஜாத்தியாக வந்து பைத்தியம்போல் நடிக்கும் இக்காட்சி படத்தின் சிறப்பான கட்டமாகும்.

பி. ரமா,
சென்னை.

மனம் திருந்திய வேழநாட்டு மன்னன், ஆண்டவன் என்ற பெயரில் மாறுவேடத்தில் நகரைச்சுற்றி வரும்போது, ராஜாத்தியின் தந்தையைச் சந்திக்கிறார். அவர்தான் தன் முன்னாள் அமைச்சர் என்றறிந்ததும் அப்படியே தழுவிக் கொள்ளுகிறார். இருவரது உண்மையான அன்பைப் பிரதிபலிக்கும் இக்காட்சியை வீரக்கனலில் நான் மறக்கவே மாட்டேன்.

வி. சிவசங்கரன்.
திருச்சி.

ராஜாத்தி, மன்னன் மகள் என்ற விவரத்தை அவளிடம் சொல்லாமல் அவளது தந்தை "அரண்மனைக்குப் போகவேண்டும் நீ" என்று சொல்லுகிறார் அப்போதுதான் மந்திரி ரணதீரனின் கொடுமையிலிருந்து தப்பி வந்த ராஜாத்தி, தன் தந்தையின் ஆணையைக் கேட்டு, திகைக்கிறாள். அவளுடன் சேர்ந்து அந்தக் கட்டத்தில் நாமும் திகைக்கிறோம். பின்னர் ராஜாத்தி யார் என்பது தெரிந்ததும் நாமும் அவளைப்போல் மகிழ்ச்சி அடைகிறோம். நல்ல ரசமான காட்சிகள்!

நா. விஸ்வநாதன்.
காஞ்சிபுரம்

பரந்தாமன் ஏழைப் பங்காளன்; பரந்த மனம் கொண்டவன். தன் தோழர்களை கைதாக்கிச் சிறையில் வைத்திருப்பதறிந்த அவன், அரசவைக்குச் செல்லுகிறான். "நிரபராதியான என் தோழர்களை விடுதலை செய்ய வேண்டும்!" என்று அரசனிடம் கேட்கிறான். "விடுதலை செய்வதாகத்தான் என் எண்ணம். நீ போகலாம்" என்று மன்னன்



ஜெய்குமார் பிக்சர்ஸார் தயாரித்துவரும் "மகா வீர பீமன்" படத்தில் ஜெயஸ்ரீ பாஞ்சாலியாகத் தோன்றி நடித்து வருகிறார்.

பதில் தருகிறான். மன்னன் மனம் திருந்தியது பற்றி பரந்தாமன் அறியா விட்டாலும், அவரது வாக்கை நம்பித் திரும்புகிறான். முடிவில் அம்மாதிரியே மன்னன் செய்து விட்டது கண்டு பரந்தாமன், தன் தோழர்களுடன் ஆடிப்பாடுகிறான். நான் இதை மிகவும் ரசித்தேன்.

மனோகரன்,
தஞ்சை.

நேர்மையற்ற முறையில் சிறைப்படுத்தி வந்த மக்களை தண்டிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அரசனிடம் வந்து, அவனது கட்டளையைப் பெற வருகிறான் மந்திரி ரணதீரன். ஆனால் உண்மை அறிந்த மன்னன், கட்டளையை மாற்றி, விடுதலை செய்யும்படி உத்தரவிடுகிறான். இதை அறியாத மந்திரி, சிறைக் காவலனிடம் உத்தரவைக் கொடுத்து, எல்லோர் காதிலும் விழும்படி உரக்கப் படிக்குமாறு அகம்பாவத்துடன் உத்தர விடுகிறான். கட்டளையைப் பிரித்துப் பார்த்த சிறைக் காவலன், திகைப்புடன் "அமைச்சரே;..." என்று இழுக்கும்போது, "உத்தரவு எதுவானாலும் அதை நிறைவேற்று' என்று சொல்லி விட்டுப் போய் விடுகிறான் மந்திரி. எண்ணம் நிறைவேறுமல், ஏமாந்து போகும் மந்திரியைக் கண்டு நம் உள்ளம் துள்ளுகிறது ஆனந்தத்தில். அருமையான காட்சி.

சிதலைச் செல்வன்,
மதுரை.

மன்னனிடம், மந்திரியின் ஆளாக வந்து, தன் நடனத்தால் அவனை மயக்கி, அவனையே கொல்லத் துணிகிறாள் தேன்மொழி. இதை அறிந்த மந்திரியின் சகோதரி பொற்கொடி அவளது செய்கை எவ்வளவு தவறானது என்பதைக் கண்டித்து, அவளைத் திருத்தி விடுகிறாள். பொற்கொடியின் போதனை நிரம்பிய இக்காட்சி தவறு செய்பவர்கள் எல்லோருக்குமே தரப்படும் சிறந்த பாடமாகும்.

செல்வி ராணி,
சென்னை.

தேன்மொழி தன் கபட நாடகத்துக்கு எதிரியாக மாறிவிட்டதை அறிந்த மந்திரி, அவளை பலிப்பள்ளத்தாக்குக்கு அழைத்துச் சென்று கொன்றுவிட நினைக்கிறான். அச்சமயம் ஆண்டவன் என்பவன் அங்கு தோன்றி, மந்திரியிடம் தானே அவனது கட்டளையை நிறைவேற்றுவதாக வாக்களித்து, தேன்மொழியை அழைத்துச் சென்று, ரத்தக்கறை படிந்த வாளை மந்திரியிடம் காட்டுகிறான். மந்திரி சென்று விடுகிறான். பிறகு தேன்மொழியை மறைத்து வைத்திருந்த இடத்திற்கு வந்து, அவளை அழைக்கிறான். ரத்தக் கறையை எப்படிக் காட்டினீர்கள்

ஜெய்குமார் பிக்சர்ஸ் "மகாவீர பீமன்" படத்தில் நாகையாவும், டி. கே. பகவதியும்.

கன்னி பிலிம்ஸார் தயாரித்து வரும் "அதிருஷ்டக்காரி" படத்தில் பிரேம் நவாஸ், அசோகன், கிருஷ்ணகுமாரி.



என்று கேட்க, கையில் அறுத்துக் கொண்டதைக் காட்டுகிறான்; தவிர ஆண்டவன் என்ற உருவில் வந்திருப்பது மன்னனே என்பதையும் அவள் அறியும்போது, தேன்மொழி அடையும் இன்ப வேதனையை நாமும் அடைகிறோம்.

பாண்டுரங்கன்.
சிதம்பரம்.

கைதி கண்ணாயிரம்

ஜெயிலரின் மகன் குமரன் காணாமல் போய் விடுகிறான். அவன்மேல பாசம்கொண்ட கைதி கண்ணாயிரம், தனக்கு இரண்டுநாள் வெளியே செல்ல அனுமதி தந்தால் குமரனை எப்படியும் கண்டுபிடித்துக்கொண்டு வருவதாக அவரிடம் கூறுகிறான். ஆனால் ஜெயிலர் அவனை வெளியனுப்பத் தனக்கு அதிகாரமில்லையென்றும் சட்டத்தை மீற தன்னால் முடியாதென்றும் கூறுகிறார். "தங்களுக்குப் பெற்ற பாசமில்லையா? தங்கள் மனம் என்ன, கல்லா?" என்று கேட்டுத் துடிக்கிறான் கண்ணாயிரம். குமரனிடம் அவன் கொண்ட அன்பு அளவற்றது. ஆனால் ஜெயிலர், "எனக்கும் இதயம் உண்டு. ஆனால் கடமை உணர்ச்சி என் ரத்தத்தோடு இரண்டறக் கலந்து விட்டது" என்கிறார். மகனைவிடக் கடமைதான் முக்கியம் என்பதை விளக்கும் அருமையான காட்சி இது. மனோகரும் ஜாவரும் சிறப்பாக நடித்திருக்கிறார்கள்.

ஆர். ஆஸ். நாகேஸ்வரன்,
திருநெல்வேலி.

சுகீபவா புரொடக்ஷன்ஸ் "பக்த சபரி"யில் எல். விஜயலக்ஷ்மி.

புதிய பாதை

சிறுவன் ராஜா வழக்கப்போல் சைக்கிள் மணி அடிக்க, மாலதி இரு டிபன் டப்பாக்களுடன் வெளியே ஓடிவருகிறாள். ஒரு டப்பாவை ராஜாவிடமும் மற்றொன்றை பிரகாஷிடமும் கொடுக்கப் போகிறாள். அப்போதுதான் அவள் பிரமை நீங்குகிறது. கணவன் குமாருக்கும் டிபன் கொடுத்தனுப்பும் பழக்கம் உண்டல்லவா? பிரமை நீங்கிய அவள் அங்கே பிரகாஷ் நிற்பதுகண்டு, டிபன் டப்பாவைக் கீழே போட்டு விட்டு உள்ளே போய்க் கதறுகிறாள். கணவனிடம் தூய அன்புகொண்ட உத்தமப் பெண்மணியின் மனோ

விவேகா பிலிம்ஸ் படத்தில் விஜயலக்ஷ்மி, பாலையா, சந்திரகாந்தா, சந்திரபாபு.

நன்ருக, நடித்து நம்மை உள்ளம் கலங்க வைக்கிருர். நாமொன்று நினைக்க தெய்வமொன்று நினைக்கும் என்பதை விளக்கும் அருமையான சோகக்காட்சி இது.

ஆர். ரகு,
திருச்சி.

நிலையைப் பிரதிபலிக்கும் இக்காட்சி நம் உள்ளத்தை உலுப்பி விடுகிறது. சாவித்திரி மிகச் சிறப்பாக நடித்திருக்கிருர்.

டி. துரை,
சென்னை.

மாலதி ராஜாவின் பிறந்தநாளைக் கொண்டாடுகிருள். தோரண மெல்லாம் கட்டி அமர்க்களமாக ஏற்பாடெல்லாம் செய்கிருள். குமார் தன் மகன் ராஜாவுக்காக நிறைய விளையாட்டுச் சாமான்கள் வாங்கிவர, சைக்கிளில் கடைக்குக் கிளம்பிப் போகிருன். போகும்போது வஞ்சகனை வீராசாமியால் கொல்லப் படுகிருன். இதையறிந்த மாலதி பிரமை பிடித்து நிற்கிருள். பின் விம்முகிருள். சாவித்திரி மிகவும்

திலகம்

திலகம் தன் மாமனையே மணக்க விரும்புகிருள். அவள் அதைப்பற்றி நினைக்கும்போது தன்னையே மறந்து விடுகிருள். அவள் கற்பனையில் அவள் வாழ்க்கைபற்றிய எண்ணங்கள் அலை மோதுகின்றன. கனவு காண்கிருள் அவள். 'தன் மனதுக்கிசைந்தவனை மணக்கிருள், இன்பத்தின் எல்லையை அடைகிருள். குழந்தைகள் பிறக்கின்றன. பாலூட்டித் தாலாட்டிச் சீராட்டி வளர்க்கிருள். அவளுக்கு வயதாகி விடுகிறது. பாட்டியாக இருந்து பெருமகிழ்ச்சி கொள்ளுகிருள்'. இந்தக் கனவுக் காட்சியை ரசிக்காதவர் இருக்க முடியாது. தமிழ்ப்படங்களில் வந்த

வாணி தமிழ்-இங்கிலீஷ் போதினி

தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் இந்தப் புத்தகத்தின் மூலம் பிறருடைய உதவி இல்லாமல், இங்கிலீஷ் சுலபமாகப் படிக்கவும் பேசவும் கடிதங்கள் எழுதவும் கற்றுக் கொள்ளலாம். 704 பக்கங்கள் கொண்ட பெரிய பைண்டு புத்தகம், விலை ரூ. 5. வி. பி. பி., செலவு ரூ. 1-4-0.

வாணி தமிழ்-இந்தி ஆசான்: தமிழைக் கொண்டுபிறர் உதவியின்றி தானே சுலபமாக ஹிந்தி படிக்கவும் பேசவும் கற்றுக் கொள்ளலாம். விலை ரூ. 2-4-0. வி.பி. செலவு 0-12-0

ஐசுவரியம் (குடிசைக் கைத்தொழில்) சோப், இங்கி, ஊதுபத்தி, வாசனைத் தைலம், ஸ்னோ, பேஸ்பவுடர், சாம்பிராணி போன்ற 200 கைத்தொழில்கள் கொண்டது. ரூ 3. வி.பி. செலவு ரூ. 1.

வாணி புக் டிப்போ. (P. B. 239). 3, மலையபெருமாள் தெரு, சென்னை-1.

சுதர்சனம் பிக்சர்ஸ் "ஹலோ, மிஸ்டர் ஜமீந்தார்!" படத்தில் கோபால கிருஷ்ணன்.

புதுமையான கனவுக் காட்சி இது. ராஜம் முகபாவங்களை மிகச் சிறப்பாகப் பிரதிபலித்துக் காட்டியிருக்கிருர். மணவாழ்க்கையில் ஈடுபடப் போகும் பெண்களுக்கு, வாழ்ந்து அனுபவித்தவர்களுக்கு, மிக மிக மகிழ்ச்சி தரும் காட்சி இது.

கி. ச. சகுந்தலா,
தூத்துக்குடி.

சாம்பசிவத்தின் மகன் குணசேகரன் பட்டணத்தில் படித்து விட்டு ஊருக்கு வருகிருன். சாம்பசிவம் அவனைப் பார்த்து, "இந்த வருஷம் பாஸ் பண்ணுவியாடா?" என்று கேட்கிருர். "நீங்க உண்மையா சம்பாதிச்சுப் பணத்தைக் கொடுத்தால்தானே பாஸ் பண்ணுவேன்? ஊரிலுள்ள ஏழைகளிடம் அதிக வட்டிவாங்கி சேர்த்தபணமல்லவா? நான் எங்கே பாஸ் பண்ணப் போறேன்?" என்கிருன். தவருன முறையில், ஏழைகளை வாட்டி வதைத்துப் பணம் சேர்ப்போருக்குச் சவுக்கடி தரும் இந்தக் காட்சியை நான் வெகுவாக ரசித்தேன்.

அ. இராயப்பன்,
மஞ்சை நகர்.

பாவை விளக்கு

குளித்து விட்டுக் கரை ஏறும் தணிகாசலத்திடம் குளத்தின் நடுவிலுள்ள தாமரை மலரை கொண்டு வந்து தரும்படிக் கேட்கிருள் செங்கமலம். 'அங்கே ஆழமதிகம்' என்கிருன். 'மூச்சுப் பிடித்து நீச்சலடித்துக் கொண்டு வாருங்கள்' என்கிருள். 'அழகான மலரை ஏன்பறிக்க வேண்டும்? அதுபாவம்' என்கிருன். 'உங்களுக்குப் புண்ணியம். கொண்டு வாருங்கள்' என்கிருள். 'இது குத்தகைக்கு விடப்பட்டுள்ளது' என்று

சேவல் மார்க்கு உயர்தர ஊதுவத்திகள், வாசனைகள், கஸ்தூரி பத்தி, கதம்ப அத்தர், சுத்த சந்தன முகப்பவுடர், மட்டிப்பால் பத்தி, புனுகு, அரகஜா, வாசனை சந்தனப்பவுடர், ப்ளவர் டஸ்டு பாக்கெட் (ஆடைப்பெட்டியில் வைக்க).

கூந்தல் செழிக்க நீலா இளநரை தடுக்க

"நஞ்சன்கூடு பல்பொடி" பாக்டெரி தயாரிப்பு

பல விருத்திக்கு: ஆல்மன்டைன், ஓஜோலா.

சோல் ஏஜண்டு: யுனைடெட் கன்ஸர்ன்,
54, பந்தர் தெரு, சென்னை-1.

கூறிச் சமாளிக்கப் பார்க்கிறான். 'நான் சமாளிக்கிறேன். கொண்டு வாருங்கள்' என்கிறாள். அவன் தடுமாறுகிறான். அவள் நீந்திச் சென்று பூவைப் பறித்து வந்து விடுகிறாள். அவள் தீரத்தைப் பாராட்டி விட்டு, 'செங்கமலம்!' என்கிறான். 'கூப்டீங்களா?' என்கிறாள் அவள். 'செந்தாமரைக்கு செங்கமலம் என்ற பெயருண்டல்லவா?' என்று கேட்கிறான். அவள் விருப்பத்துக்கேற்ப வர்ணிக்கிறான். இந்தக் காட்சியில் சிவாஜி கணேசன் நிறம்பட நடித்திருக்கிறார். வசனமும் காட்சி அமைப்பும் சிறப்பாக இருக்கின்றன.

க. திருமணி,
அய்யனார்.

தணிகாசலம் நகரத்திற்குக் கிளம்பும்போது, தன் காதலி கௌரி வீட்டுக்கு விடைபெற வருகிறான். அப்போது அவள் மகிழ்ச்சியின் எல்லையில் துள்ளிக் குதித்தபடி, 'அத்தான் வந்து விட்டார்' என்று பலமுறை சொல்லி வெட்கப்பட்டு ஓடுகிறாள். இந்தக் காட்சி இயற்கையான கிராமீய குடும்பச் சூழ்நிலையை விளக்குகிறது. சௌகார் ஜானகி மிகவும் இயற்கையாக நடித்திருக்கிறார்.

ஏ. காசிவிஸ்வநாதன்,
திருச்சி.

உமா டில்லிக்குக் கிளம்புகிறாள். தணிகாசலமும் அவளைப் பின் தொடருகிறான். இப்போது அவள் மனதில் அமைதி இல்லை. வேதனையால் உருகுகிறாள். அவளுக்குத் தன் துக்கத்தை யாரிடமாவது சொல்லித் தீர்த்துக் கொள்ளலாம் போலிருக்கிறது. அவனிடமே கூறுகிறாள். ''அத்தான்! நான் முன்பு எவ்வளவு மகிழ்ச்சியுடனிருந்தேன்? இப்போது எவ்வளவு வேதனைப்படுகிறேன் பார்த்தீர்களா?'' என்று கூறி விம்முகிறாள். இந்தக் காட்சியில் எம். என். ராஜத்தின் தோற்றமும் நடிப்பும் நம் உள்ளத்தைத் தொடுகின்றன. இந்தக் கட்டத்தில் இதைப் போல் சிறப்பாக நடிக்க எம். என். ராஜத்தை தவிர, வேறு யாரிருக்கிறார்கள்?

பி. ராமதுரை,
மேலமையூர்.

தணிகாசலம் ஒரு சிறந்த எழுத்தாளன். உள்ளத்தைத் தொடும் உயரிய காவியங்களை வடிக்கக்கூடிய அவன், ஹாஸ்ய உணர்ச்சிகளைப் பிரதிபலிப்பதிலும் சிறந்தவன் தான். சந்தர்ப்ப சூழ்நிலைகளால் கௌரியை மணக்கிறான் அவன். உமா அவளைச் சந்திக்கிறாள். 'கௌரியக்கா, கௌரியக்கா' என்று அடிக்கடி கூறுகிறாள். ''இவ்வளவு சிறந்த எழுத்தாளரை மணந்த நீங்கள் மிக மிக பாக்கியம் செய்தவர். நீங்களும் அவரைப்போல் எழுதுவீர்களா?'' என்று கேட்கிறாள். தணிகாசலம் சிரிக்கிறான். அவனுக்குத் தெரியும், கௌரி ஒரு அப்பாவி; கணவன் தவிர ஏதுமறியாத நாட்டுப்புறம், என்று. ஆகவே உமாவிடம், ''அது நாட்டு...அதற்கு எதுவும் வராது!'' என்று கிண்டல் செய்கிறான். கௌரி வெட்கப்படுகிறாள். அப்பாவித்தனமும் கிண்டலும் நிறைந்த இக்காட்சி மகிழ்ச்சி தருகிறது.

எம். கருப்பையா,
சென்னை.

செங்கமலம் ஜமீன்தாரால் நிராகரிக்கப்பட்டவள். தன்னால் தணிகாசலத்தின் முன் ஆடமுடியாது என்று அவள் கூறியதும் அவன் கோபத்தோடு வெளியேறுகிறான். காதலித்தவன் கிடைக்கவில்லை. ஜமீன்தார் உதறிவிட்டார். என் செய்வாள் அவள்? அவன் போவதைக் கண்டதும் ஆவேசம் கொண்டவள்போல் ''சிதறிய சலங்கைகள் போல சிதறின என் எண்ணங்கள் மண்மேலே'' என்று பாடி ஆடுகிறாள். இந்தக் காட்சியில் பொங்கிவரும் அழுகையைத் தடுக்க முடியவில்லை. வாழ்வில் ஏமாற்றம் கண்ட பெண்ணின் மனநிலையைச் சித்தரிக்கும் இக்காட்சியில் கமலா லக்ஷ்மணனும் சிவாஜி கணேசனும் சிறப்பாக நடித்துள்ளனர்.

ஜி. சுவாமிநாதன்,
சத்தியமங்கலம்.


பிரகதி ஆர்ட் புரொடக்ஷன்ஸ்
அன்புமகள்
காட்சிகள்



பிரகதி ஆர்ட் புரொடக்ஷன்ஸாரின் "அன்பு மகன்" உணர்ச்சி வசப்படுத்தும் ஒரு அருமையான குடும்ப சித்திரம். பாசத்தை அடிப்படையாகக் கொண்ட இக் கதை, ஒரு குழந்தையை மையமாக வைத்துப் பின்னப்பட்டுள்ளது. இப்படத்தை டி. பிரகாஷ் ராவ் டைரக்ட் செய்து வருகிறார்





அந்த மருத்துவமனையிலே ஒருத்தி ஒரு மகவை ஈன்றெடுக்கிறாள். அது மாண்டு போகிறது.

அதே மருத்துவமனையில் டாக்டரின் மனைவியும் ஒரு குழந்தையை ஈன்றெடுக்கிறாள். ஆனால் அவள் மாண்டு போகிறாள்.

டாக்டர், கடமையுடன் மனிதப் பண்பு நிறைந்தவர். மனைவி போய் விட்டாள். குழந்தை இருக்கிறது. மற்றொருத்தியின் உறவினரிடம் மட்டும் கூறிவிட்டு, தன் குழந்தையை அவளறியாமல் அவளிடம் விட்டு விடுகிறார்.

அவள் துரதிருஷ்டசாலி. கணவனை இழந்தவள். விதவையாகி விட்ட அவள் யாரோ பெற்ற குழந்தையைத் தன்னுடையது என்று நினைத்து வளர்க்கிறாள்.

டாக்டர் தன் குழந்தையைப் பார்க்க அடிக்கடி அவள் வீட்டுக்குப் போகிறார். ஊர், வம்பு பேசுகிறது. இடையிலே வந்த ஒருத்தி தான் இதற்குக் காரணமாகி நிற்கிறாள்.

குழந்தை தன்னுடையதல்ல என்று அறிகிறாள், வளர்த்தவள்.

டாக்டருக்கு பிள்ளைப் பாசம்.

அவளுக்கு வளர்த்த பாசம்.

முடிவு? அந்தப் பிள்ளை இப்போது யாருக்கு 'அன்பு மகன்'?



சாவித்திரி கதா நாயகி. நாகேஸ்வர ராவ் கதா நாயகன். எம். என். ராஜம் குறுக்காரி. ஹரி - இராணி அன்பு மகன். இவர்களுடன் நாகை யா, கண்ணாம்பா, முத்தையா முதலியோரும் சிறப்பாக நடித்து வருகிறார்கள்.

தங்கவேலு, எம். சரோஜா, சாரங்கபாணி, எம். என். கிருஷ்ணன் முதலியோர் நகைச்சுவை பாகங்களில் நடிக்கிறார்கள். வேதனையால் கமலா உள்ளம் விம்மி கண்களில் நீர் வழியும் போது, அதை ஆனந்தக் கண்ணீராக்கும் பொறுப்பு இவர்களுடையது.



இப்படத்தின் ஜீவநாடி இருவர். சாவித்திரியும் ஹனி இராணியும்தான். சாவித்திரி தோன்றும் கட்டங்களி லெல்லாம் நாம் உள்ள முருகிக் கண்ணீர் வடித்து வேதனையால் உருகப் போகிறோம். அவ்வளவு சிறப்பாக நடித்திருக்கிறார் அவர்.

"அன்பு மகன்" பொங்கல் வெளியீடு. பெண்கள் விரும் பிப் பார்க்கக் கூடிய நல்ல படம்.

ராஜசேகர் புரொடக்ஷன்ஸாரின் "அன்னபூர்ணு" தமிழ்ப் படம் விரைவில் திரைக்கு வரவிருக்கிறது. எஸ். எம். சந்தானம் தமிழ் வசனங்களை எழுதியிருக்கிருர்.



தபால் பெட்டி

* தெரியாத விஷயமல்ல!

நம் நாட்டைவிட மிகச் சிறியதான ஜப்பான், உலகிலே இரண்டாவது படத்தயாரிப்பு நாடாக வளர்ந்து விட்டது காரணம்? நமக்குத் தெரியாத விஷயமல்ல. சிக்கனத் தயாரிப்பு, போட்டி இல்லாமை, நீளக்கட்டுப்பாடு இது நம்மவர்களிடம் கடுகளவு இல்லையே! ஹாலிவுட்டில் கோடிக்கணக்காகச் செலவு செய்து படம் தயாரிக்கிறார்கள் என்றால், உலக முழுதும் அவர்களது படங்கள் ஓடுகின்றன. நம் படங்களை வடநாட்டில் கூட ஓட்ட முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறதே! நீளமான படங்கள் தயாரிப்பதில் நாம்தான் உலகிலேயே முதன்மையாக நிற்கிறோம். இந்த நிலையில் போட்டி மனப்பான்மை வேறு பேயாட்டம் ஆடுகிறது. ஜப்பான் படங்கள் மூன்றுவாரங்களில், குறைந்த செலவில் தயாராகின்றன. போட்டியின்றி திரையிடப்படுகின்றன. மூன்று வாரம் ஓடினால்கூட முதலீடு திரும்பிவந்துவிடும். ஆனால் இங்கே நூறு நாள் ஓடினாலும் நஷ்டம் வருகிறது என்கிறார்களே! விவசாயத்தைப்போல படத்தயாரிப்பிலும் ஜப்பானிய முறையைப் பின்பற்றினால் என்ன?

ஆர். இந்திரா,
கமுதி.

புகை பிடிக்காதே! **

சமீப காலமாக சினிமா கொட்டகைகளில் பீடி, சிகரெட், சுருட்டு போன்றவைகளை உபயோகிக்கக் கூடாது என்று தடை உத்தரவை போட்டிருக்கிறார்கள் சர்க்கார்.

முக்கியமாக படத்தொழில்சம்பந்தப்பட்டவரை ஒரு உண்மை பளிச்சென்று விளங்குகிறது படம் ஓடிக்கொண்டிருக்கையிலேயே, இடைவேளைக்கு முன்னாலேயே, பீடி, சிகரெட், உபயோகிக்க சமயத்தை எதிர்பார்த்திருந்தவர்கள் எழுந்து போய்க் கொண்டே இருக்கிறார்கள். இது ஏன்? நல்ல பாட்டு-டான்ஸ் நடந்துகொண்டிருக்கையிலா போகிறார்கள்? அப்படி என்றால்??? சிந்தனை செய்ய வேண்டிய விஷயம். மிகமிக முக்கியமான விஷயம். காலத்திற்கேற்ப மக்களின் அறிவும் வளர்ச்சி அடைந்து கொண்டே போகிறது. பல வருடங்களுக்கு முன்னால் "பராசக்தி" படம் வந்ததும் மக்கள் அமோக ஆதரவைத் தந்தார்கள். காரணம் முதன் முதலாக திரையில் பேசப்படும் வசனங்கள் அடுக்காக மிடுக்காக அனலைக் கக்கிக்கொண்டு, எளிய தமிழ் துள்ளி விளையாட்டுக் காட்டியது.

அதற்கு பிறகு அடுத்தடுத்த வந்த படங்களும் பராசக்தி வசனபாணியிலே வந்து போயின. மக்கள் அலுத்தார்கள். அது ஒரு காலம். அதற்கு பிறகு நாட்டுப் பாடல்களுக்கும், டப்பாங்குத்து நடனங்களுக்கும் ஆதரவு அளித்தார்கள். அது மற்றொரு காலம். இன்று இப்போது முக்கியமாக கதையை பார்க்கிறார்கள்.

தேவையற்ற இடங்களில் பாட்டு, நடனம், ஹாஸ்யம் இம்மூன்றில் ஏதாவது ஒன்று வந்து கதையை ஓடாமல் தேங்கவைக்கிறது என்று பட்டால் உடனே சிகரட் பாக்கட்டுகளுடன் வெளியே விரையும் நபர்களிலிருந்து இதை நாம் தெரிந்து கொள்ளலாம்.

இந்த அவல நிலை மாறவேண்டுமானால் நம் தயாரிப்பாளர்கள், திரைக்கதை எழுத்தாளர்கள்-நல்ல கதைகளைப் பொறுக்கி எடுப்பதில் நாட்டம் செலுத்தி ஓட்டத்தை துரிதப்படுத்த வேண்டும்.

தேவைக்குமீறி பாட்டுக்களையோ, கனவு காட்சிகளையோ போடுவதை தவிர்த்து வேகமாக நகரும் வண்ணம் கதையை கொண்டுபோக வேண்டும். அதில் வரும் பாத்திரங்களையும், அவற்றின் குணாதிசயங்களையும் தெளிவாக விளக்க வேண்டும். குழப்பம் ஏற்படாத

---

* முதற் பரிசு ரூ. 15

** இரண்டாவது பரிசு ரூ. 10

வகையில், அடுத்து வருவது என்ன என்பதை மக்கள் ஊகிக்கமுடியாத அளவுக்கு, சாமார்த்தியமாக கொண்டு போகவேண்டுப். இப்படிச் செய்வதால் புகைபிடிக்கும் பழக்கத்தில் உள்ளவர்கள் தங்கள் முழு கவனத்தையும் திரையிலேயே வைத்திருக்க முடியும் என்பது என் எண்ணம்.

சினிமா கொட்டகையில் ''புகைபிடிக்காதே'' என்று தடை உத்தரவைப் பிறப்பித்து, அமுலுக்குக் கொண்டுவந்த அதிகாரிகளுக்கு, திரை உலக சம்மந்தப்பட்ட அனைவரும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

நாதன்,
சென்னை.

காப்பது கடமை

மக்களால் மதிப்பிடப்படுபவை இரண்டு. ஒன்று அரசியல்; மற்றது கலை. சமீபமாக கலையின் பருமை காரணமாக அரசியல் பாழடைந்த மண்டபமாகக் காட்சி யளிக்கிறது. கலைஞன் ஒரு புறமும் அரசியல்வாதி ஒருபுறமும் பேசினால், கூட்டம் அதிகமாக இருப்பது கலைஞன் பக்கம்தான். இதனால் கலையின் பெருமை தெரிகிறது. மக்களால் நடத்தப்படுவது அரசியல்; ஆதரிக்கப்படுவது கலை. இதனால் இவற்றுக்கிடையேயுள்ள வேறுபாடு நன்கு தெரிகிறது. வளரும் கலை அரசியலைக் குழப்பக்கூடாது. அப்படிச் செய்தால் அந்தத் தவறை கலை செய்ததாக ஆகும். இரு கண்களில் ஒன்றை ஒன்று பாழடிக்கலாமா? 'கட்சிக்காகப் படம் ஓடுகிறது' என்று சிலர் சொல்லக் கேட்கிறோம். அது தவறு. 'ஆம்' என்றாலும் அங்கே கலை மதிப்பற்றதாக்கப்பட்டுப் பின்னே தள்ளப்படுகின்றது. ஆனால் உண்மை என்ன? கலையில்தான் கட்சியைச் சேர்க்கிறார்கள். கலைஞனுக்குக் கிடைக்கும் பெருமை அவனிடமுள்ள கலைத்திறனுக்காகத்தான்; அரசியல்வாதி என்பதால் அல்ல. ஆகவே தங்களை வளர்க்கும் கலை

'ஆயிரங்காலத்துப் பயிர்', 'திருடாதே' முதலிய படங்களில் நடித்து வருகிறுர் இளம் நடிகை விமலா.

யைக் காப்பதே கலைஞர்களின் கடமை.

வெ. ராதாகிருட்டினன்,
சிவனுயக்கம்பட்டி.

பாராட்டுகிறேம்

சமீபமாகப் புயலும் மழையும் சேர்ந்து தென்னகத்தின் அமைதியைக் குலைத்து விட்டுப் போய் விட்டன. மக்கள் துயர்போக்க முனைந்தனர் கலைஞர்கள். மக்கள் சமுதாயத்திலிருந்து ஒதுங்கி சொர்க்கலோக வாசிகளாக இருப்பவர்களே கலைஞர் எனப்படுவோர், என்ற கூற்றைப் பொய்யாக்கி துயர் நீர்க்கும் தெய்வங்களாகக் காட்சி தந்தனர் கலைஞர்கள். தாய் துயருறும்போது மகன் ஆற்றும் கடமையாக அவர்கள் செயல் அமைந்தது. 'பேசும் படம்' குறிப்பிட்டதுபோல் அவர்களை வாழ்த்துகிறேம்; அவர்கள் நற்பணிக்காகத் தலைவணங்குகிறேம்.

பி. ஏகாம்பரம்,
சென்னை.

[இதைப்போல் நூற்றுக் கணக்கான கடிதங்கள் நமக்கு வந்திருக்கின்றன.
ஆ-ர்]

வேண்டாம் வம்பு

அரசியல் வாதிகள் பரஸ்பரம் மேடைகளில் தாக்கிப் பேசி வருகின்றனர். கட்சிச் சார்புள்ள ஏடுகளும் இந்த விரோதத்திற்குத் தூபம் போட்டு வருகின்றன. கொள்கை மாற்றம் மனிதனுக்கு மனிதனை விரோதியாக்கி விடுகிறது. ஆனல் இந்த நிலை கலைஉலகிற்கும் ஏற்பட்டு விட்டது வருந்தத்தக்கது. கலைஞர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். கலைவளர்ச்சியில் யாவரும் கைகோர்த்து உழைக்க வேண்டும். ஆனல் தனக்குப்பிடித்த நடிகரைப் பாராட்டும் ஏடுகள், வீணாக மற்ற கலைஞரைத் தாக்குகின்றன. இதனுல் அந்தக் குறிப்பிட்ட கலைஞர்களிடையேயுள்ள நட்பு குறைவதோடன்றி விரோதமாகவும் உருவெடுக்கிறது. ஆகவே தயவு செய்து யாரை வேண்டுமானுலும் பாராட்டுங்கள், தூற்றுங்கள். ஆனல் ஒருவரைப் பாராட்டும்போது மற்றவரைத் தூற்ருதீர்கள்' என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

சிந்தயன்,
சென்னை.

கதை தேவை

படவுலகின் இன்றைய குறை கதைதான். இப்போதுள்ளவர்கள் சுவரில்லாமல் சித்திரமெழுத முற்படுகிறுர்கள். முன்பெல்லாம் செவிக்கினிய 69 பாடல்கள் நிறைந்த படம் தேவைப்பட்டது. பிறகு புராணத்திலிருந்து சமூகக் கதைகளுக்கு மக்கள் வந்தார்கள். பிறகு ஹாஸ்யக் காட்சிகளை விரும்பினுர்கள். அதைத் தொடர்ந்து பிரமாண்டமான காட்சி ஜோடனைகளை விரும்பினுர்கள். அதற்கும் பிறகு வசனப் படங்களை விரும்பினுர்கள். கத்திச் சண்டையை ஆதரித்தார்கள். இந்தக் காலங்களிலெல்லாம் பாடத் தெரிந்தோரால் படம் ஓட அவர்களுக்குமட்டும் புகழ் கிடைத்தது; புரான படங்களுக்கு வருவாய் கிடைத்தது. சமூகப் படங்கள் வெற்றி பெற்றன; ஹாஸ்ய நடிகர்களுக்கு மட்டும் மவுசு இருந்தது; காட்சி ஜோடனைப் படங்களுக்கு ஆதரவிருந்தது; வசனப் படங்கள் புரட்சிகரமாக வசூல் தந்தன. கத்திச் சண்டைக்கும் ஆதரவிருந்தது. இத்தனையிலும் கதை இருந்தது. மற்றவை சுவை கூட்டின. இன்

றைய நிலை கதையில்லாத மற்ற அயிட்டங்கள் உள்ள படங்கள் தயாராவதே. நல்ல கதையைப் படமாக்குங்கள். மற்றவைகளைப் பிறகு சேர்த்துக் கொள்ளுங்கள். சுவரில்லாது சித்திரமா? சோறில்லாது சாம்பார், ரசம், மோரா??

பி. வரதராஜன்,
ஹைதராபாத்.

வடநாடு......?

'சிங்கப்பூர்' ஹிந்திப்படம் பார்த்தோம். ஒரு விஷயம் நமக்கு நிச்சயமாகத் தெரிகிறது. அவர்கள் ஹிந்திப்படத் தயாரிப்பின்போது, தென்னிந்தியாவைக் கேலி செய்யும் அயிட்டம் இல்லாமல் ஈடுபடுவதில்லை. தென்னகத்தின் மிகத் தூய்மையான-தெய்விக வாத்தியங்களில் ஒன்று நாதஸ்வரம். அது ஒன்றைத்தான் மங்கள வாத்தியம் என்கிறார்கள். ஆனால் சிங்கப்பூர் படத்திலே, மட்டமானதொரு நடனத்திற்கு வேண்டுமென்றே நாதஸ்வரம், தவில் இரண்டையும் பயன்படுத்தியிருக்கிறார்கள். அந்த வாத்தியங்களை உபயோகிக்கும் முறை தெரியாத - தெரிந்து கொள்ள முடியாத அவர்கள், அவற்றை வைத்துக்கொண்டு குதிக்கிறார்கள். துரதிருஷ்டவசமாக பத்மினியும் அந்த ஆட்டக்காரர்களில் ஒருவராக ஆடுகிறார். வேதனை தருகிறது அவரது செயல். நமது நடிகையரை வட இந்தியர்கள் பயன்படுத்துகிறார்கள் என்றால் அது பணவசூலுக்காக. ஆகவே இனியாவது வடக்கே செல்வோர், தென்னிந்தியாவைக் கேலி செய்யும் காட்சிகளில் நடிக்க மறுப்பார்கள் என்று நம்பலாமா?

பாலகிருஷ்ணன்,
ஆனந்த கிருஷ்ணன்,
பெங்களூர்.2.

ஐயோ, சரித்திரமே!

இப்போதுள்ள படங்களில், சரித்திர வரலாறுகூட, சிலரது விருப்பப்படி மாற்றப்பட்டுவிடுகிறது. ராஜா தேசிங்கு ஒரு சாட்சியம். மஹமத்கான் ஒரு சிறந்த வீரன்; சிறந்த நண்பன்; தேசத்தியாகி. ஆனால் அதற்காக பழைய சேனாதிபதி யூசப்கானை மட்டமான முறையில் சித்திரித்திருப்பானேன்? தோன்றமல்லன் ஒரு மாவீரன். அவனை ஒரு கோமாளியாக்கி விட்டிருக்கிறார்கள். அவனை வீரனாகவே காட்டி, தாதுவனை மன்னிக்கும் தமிழ்ப் பண்பை உயர்த்தியிருக்கலாமே! சன்னியாசி



மோகேஷ்ஸ்வர் சித்ராவின் 'தியாகம் தந்த பரிசு'' படத்தில் சாக்ரடீஸ் தங்கராசு, பேபி உமா, நாகேஸ்வரராவ்.



எஸ். ஆர். எஸ். பிக்சர்ஸ் ''எல்லோரும் வாழ வேண்டும்'' படத்தில் 'நடிகவேள்' எம். ஆர். ராதா, கே. கண்ணன்.

யாக்கி, உயிர் பிச்சை கேட்கச் செய்வானேன்? இதிலே சரித்திரத்திலில்லாத பாத்திரங்களும் உண்டு. சரித்திரம் மாற்றப்படுகிறது. மதம் இழிவு படுத்தப்படுகிறது. ஆயினும் திரையிடப்பட்டது. படங்களில் சட்டத்துக்குட்பட்ட எதுவும் இடம் பெறட்டும். ஆனால் அசலையே - வரலாற்றையே மாற்றிக் காட்டும் சம்பவங்களோ, பாத்திரங்களோ தேவையில்லை.

பி. பி. வேணுகோபாலன்,
எஸ். வி. நகரம்.

உணரட்டும்

நடிப்புக் கலையில் சிறந்தவராக சிவாஜி கணேசன் பாராட்டப்படுகிறார். சிவாஜி கணேசன் குறிப்பிட்ட கட்சியிலிருந்து ஒதுங்கி வந்து விட்டதாகப் பலர் பல விதமாகத் தூற்றுகிறார்கள். அவர் காங்கிரஸில் சேர்ந்து விட்டதாகச் சிலர் கருதிக் கடுமையாகத் தாக்குகிறார்கள். இதிலிருந்து ஒரு விஷயம் நன்றாகப் புலனாகிறது. கலைஞர்களுக்கு அரசியல் தேவையில்லை என்பதுதான் அது. கலைஞன் கலைப்பணியோடு நின்று கொண்டால் அவனுக்கு என்றும் நிலையான புகழுண்டு. அரசியல் ஒரு சூதாட்டம். அதில் போட்டியிடும் கட்சியைச் சார்ந்தவனாக நடிகன் இருந்தால் கட்சியோடு அவனும் வீழ்ந்து விடுவான். இது சூதாட்டம் என்பதைப் புரிந்து கட்சியற்றவராகக் கலைத்தொண்டாற்றும் ஜெமினி கணேசனை மற்ற கலைஞர்கள் பின்பற்றுவார்களா?

எச். கே. ராதா,
செவ்வை நகர்சேலம்.

படிக்கலாம்;
பார்க்கமுடியாது!

நம் தென்னிந்திய பிரபல கதாசிரியர்களின் கதைகள் படமாக்கப்படும் போது தோல்வியுறுகின்றன. சில கதைகளைப் படித்துமட்டுமே ரசிக்க முடியும். கல்கியின் 'பார்த்திபன் கனவு' கதையில் மிக முக்கியமான ரகசியம் சிவனடியார். 'அது யார்?' என்ற ரகசியத்தை கல்கி காப்பாற்றினார். மக்கள் ரசித்தார்கள். படத்தில் முதல் காட்சியிலேயே ரகசியம் அம்பலமாகி விட்டது. மக்களால் ரசிக்க முடியவில்லை. மு. வ. அவர்களின் 'பெற்றமனம்' படித்துப் பரவசமடையக் கூடிய கதை படத்தில் வரும் அந்த வறுமைப்பேய் காட்சி..., அப்பப்பா தலைவலி. பாவை விளக்கிலும் இப்படித்தான். கதையைப் படித்தபின் படத்தைப் பார்ப்போர், படத்திற்காகச் செய்யும் மாறுதலை, ரகசியம் அம்பலமாகி விடுவதை கண்டால், ரசிக்க முடியாமல் ஏமாற்றமடைகிறார்கள். படிக்கமட்டும் முடியும் என்ற கதைகள் படமாக்கப்படக்கூடாது. படமாக்கி விட்டுத் தோல்வி கண்டபின், தமிழில் நல்ல கதை இல்லை என்று குறைகூறி வங்கத்திற்கும் ஹாலிவுட்டிற்கும் போய்விடுகிறார்கள் தயாரிப்பாளர்கள்! படமாக்கப்படவென்றே கதையெழுதித் தருமாறு நம் கதாசிரியர்களைக் கேட்டுப் பெறலாம். அதைச் செய்வார்களா?

சி. அரங்கநாதன்,
ஆடுதுறை.

அன்பர்களுக்கு எமது பொங்கல் நல் வாழ்த்துக்கள்!

இன்றல்ல! நேற்றல்ல!

51 ஆண்டுகளாகப் புகழ் பெற்றது

ஆர். எஸ். பதி மருந்து (REGD.)

தலைவலி, ஜலதோஷம், கைகால் வலி, ஜுரம் முதலிய வியாதிகளுக்குக் கைகண்ட மருந்து

புட்டி 1-க்கு விலை 75 காசுகள்

எங்கள் இதர தயாரிப்புகளுக்கு விரிவான இலவச கேட்லாக் வேண்டுவோர் எழுதவும்

தயாரிப்பாளர்கள் :

ஆர். எஸ். பதி அண்டு கோ.,

(ஸ்தாபிதம் : 1909)

த. பெ. எண் 99, 214 & 215, மேலமாசி வீதி

மதுரை-1.

திருச்சி, தஞ்சை இவ்விரு ஜில்லாக்களில் உள்ளவர்கள் மட்டும் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுக :

மெஸர்ஸ் சுகுமாரி ஏஜன்ஸீஸ்

213, மேல மாசி வீதி, தபால் பை எண் 172, மதுரை-1.

ராம்தீர்த் பிரம்மி ஆயில்

ஸ்பெஷல் நெ. 1 — ரிஜிஸ்டர்டு

கூந்தல் உதிர்வதையும், பொடுகையும் தடுத்து கேசத்திற்கு கருநிறத்தையும் பளபளப்பையும் அளிக்கும் ஓர் ஒப்பற்ற கூந்தல் தைலம். பல உயர்ந்த மூலிகைகளைக்கொண்டு தயாரிக்கப் பட்டது. மூளைக்கு குளிர்ச்சி அளித்து, ஞாபக சக்தியை அதிகரித்து, கண் எரிச்சலையும் அடிக்கடி ஏற்படும் தலைவலியையும் போக்கி நிம்மதியான நித்திரையை அளிக்கிறது.

யோகாசனப் படம்

எங்கள் யோகாசனப் படத்தில் காட்டியுள்ளபடி ஆசனங்களை முறைப்படி செய்து வந்தால் நீங்கள் உடல் வலிவு பெற்று ஆரோக்யமாக வாழ்வீர்கள்.

விலை ரூ. 3/- (தபால் செலவு உள்பட)

SHRI RAMTIRTH YOGASHRAM

DADAR — BOMBAY - 14.

மதராஸ் டிப்போ 25, நைனியப்ப நாயக்கன் தெரு, மதராஸ்-3.

சுதர்சனம்
பிக்சர்ஸ்
ஹல்லோ, மிஸ்டர்
ஜமீந்தார்!

சுதர்சனம் பிக்சர்ஸாரின் இரண்டாவது படம் ''ஹல்லோ, மிஸ்டர் ஜமீந்தார்!''. கே ஜெ. மகாதேவன் டைரக்ட் செய்துவரும் இந்த முழு நீள ஹாஸ்யப் படம் மிக வேகமாக வளர்ந்து வருகிறது.

பிரபல நடிக நடிகையருடன் புது முகங்களும் நடிக்கும் இப்படம் விரைவில் திரைக்கு வரவிருக்கிறது.

எங்கள் ஊரில் நடந்தது

பாலய்யாவும் போட்டியும்

1959-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஒரு நாள். கருவையம்பதி என்ற எங்கள் ஊரில் நடைபெற்ற பிரபலஸ்தர் ஒருவர் வீட்டு கல்யாணத்திற்கு நடிகர் சிவாஜி கணேசன், பாலய்யா, எஸ். எஸ். ஆர்,. வசன கர்த்தா ஏ. பி. நாகராஜன் முதலியோர் வந்திருந்தார்கள். எல்லோரும் மகிழ்ச்சியுடன் பேசிக்கொண்டிருக்கும்போது பாலய்யாவும் சிவாஜியும் ஒரு போட்டியில் ஈடுபட்டனர். போட்டியில் சிவாஜி வெற்றி பெறவே, பாலய்யா இரண்டாவதாக ஒரு போட்டியை ஏற்படுத்தி, அதன் விவரங்களை சிவாஜியிடம் எடுத்துச் சொன்னார். அதாவது ஒரு பெரிய வட்டம் போட்டு, அதில் சிவாஜியின் கையை வைக்கச் செய்து, தான் அவரது கையில் மூன்று அடிகள் அடித்த பின்னரே அவ்விடத்திலிருந்து கையை எடுக்க வேண்டும் என்று பாலய்யா சொன்னார். கணேசனும் பந்தயத்திற்கு சம்மதித்து, வட்டத்தில் கையை வைத்து உட்கார்ந்து கொண்டார். பாலய்யா, ஒரு அடி அடித்து விட்டு பிறகு, "நாளை வந்து மீதி இரண்டு அடிகளை அடிக்கிறேன்" என்று சொல்லி விட்டு, அவ்விடத்திலிருந்து சற்று அப்பால் தள்ளி உட்கார்ந்து கொண்டார்! பாலய்யா மீதி இரண்டு அடிகள் அடிக்காமல் கணேசன் கையை எடுக்கமுடியாது; நாளை வரை கணேசனும் அங்கு உட்கார்ந்திருக்க முடியாது! எனவே அவர் பாலய்யாவின் திறமையை வியந்து தனது தோல்வியை ஒப்புக் கொண்டார். கூடியிருந்தவர்களும் இவர்களது செய்கையைக் கண்டு மகிழ்ந்தார்கள்.

வ. சு. சாரதா,
கரிவலம் வந்த நல்லூர்.

வாங்காதே, ஆனால் போடு!

நான்கைந்து வருஷங்களுக்கு முன்பு மதுரைக்கு கலைவாணரும் அவரது மனைவியார் மதுரமும் வந்திருந்தார்கள். எங்கள் வீட்டுக்கு மிக அருகில் இருந்த ஓட்டலில் அவர்கள் தங்கியிருப்பதை அறிந்த நான், என் நண்பனுடன் அவரைக் காணச் சென்றேன். மிகவும கஷ்டப்பட்டு, இறுதியில் அவரைச் சந்தித்தேன். அவரது கார் டிரைவர் அவரிடம் எங்களை அழைத்துச்சென்றார். எங்களைப் பார்த்து உட்காரச் சொல்லி விட்டு சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தார். பிறகு என்னிடம் இருந்த கையெழுத்துப் புத்தகத்தை வாங்கி, அதில் "கையெழுத்து வாங்குபவன் ஆக இராதே! கையெழுத்துப் போடுபவனாக மாறு" என்று எழுதி, "இதையே உன் வாழ்வின் வழி விளக்காக மேற்கொள்" என்று புத்திமதியும் கூறினார். அவரது பரந்த அறிவையும் நோக்கத்தையும் கண்டு பூரிப்புடன் திரும்பினோம்.

டி. எஸ். ராமன்,
மதுரை.

காதல் பாதை

'வீரக்கனல்' படத்திற்காக சில காட்சிகளைப் படம் பிடிக்க எங்கள் ஊருக்கு சில மாதங்களுக்கு முன்பு அதன் நடிகர்களும் தயாரிப்பாளரும் கலைஞர்களும் வந்திருந்தார்கள். மக்கள், திருவிழாக் காணப் புறப்படுவது போல, படப்பிடிப்பைக் காணக் கூடியிருந்தாகள். அன்று மாலை கோட்டை மதில் மேல் ஜெமினி கணேசன் அஞ்சலியை அழைத்து ஓடுவதாக படம் எடுக்கப் போவதாக திட்டமிட்டிருந்தது அதற்கேற்ப ஜெமினி கணேசன், மதிலின் மீது ஓட முயற்சித்த போது, அவர்து காலில் ஒரு பெரிய முள் தைத்து விட்டது. மிக்க சிரமப்பட்டு முள்ளை எடுக்கப் போராட்ட கணேசன், பக்கத்திலிருந்த ரசிகர்களைப் பார்த்து, "பார்த்தீர்களா, காதலியை கள்ளத்தனமாக அழைத்துப் போனால் எவ்வளவு

கஷ்டப்பட வேண்டி யிருக்கிறது!'' என்று சொன்னவுடனே எல்லோரும் 'கொல்' என்று சிரித்து விட்டோம். மதில்சுவர்மீது அவர் கயிறு போட்டு ஏற முயற்சித்தபோது அவர் பட்ட கஷ்டம், அம்மம்மா! நம்மால் கூற முடியாது. கையில் காயம், காலில் காயம், மூக்கில் அடி! பாவம் கணேஷ்! அப்போது தான் நடிகர் படும்பாட்டை அறிந்தோம். ஆனால் அவரோ, மக்கள் திரளின் அன்பான உபசரிப்பில் எல்லாவற்றையும் மறந்து விட்டார்!

கோகுலன்,
வேலூர்.

இனிய போதனை!

எங்கள் ஊரில் சென்ற ஜனவரியில் நடைபெற்ற முத்தமிழ் கலை விழாவில் கலந்து கொள்வதற்காக பின்னணிப் பாடகர் செளந்தரராஜன், சூர்யகலா, தங்கவேலு முதலியோர் வந்திருந்தார்கள். சூர்யகலா ஒரு நாடகத்திற்கு தலைமை வகிக்க வந்திருந்தார், எங்கள் வீட்டருகில் அவர் தங்கியிருந்தார். நானும் எனது சிநேகிதியும் அவரை நேரில் காணச் சென்றோம். அப்போதுதான் அவர் நாடகத்திற்கு தலைமை வகித்துவிட்டு காரில் வந்து இறங்கினார். நானும் என் சிநேகிதியும் சூர்யகலாவின் நீண்ட பின்னலைக் கண்டு வியந்தோம். சிறிது நேரத்தில் எல்லோரும் உள்ளே சென்றோம். அவர் உடனே தன் முடியை (டூப்ளிகேட்) இழுத்தார். தன் கையோடு வந்த அந்த முடியை ஓரிடத்தில் மாட்டினார். எங்களுக்கு ஒரே ஆச்சர்யம்! நிஜமென்று நாங்கள் நினைத்தது எவ்வளவு தவறு! அடுத்து அவர் தன் கம்மல், நெக்லேஸ் முதலியவைகளைக் கழற்றிவிட்டு ''எனக்கு நகைகள் என்றால் பிடிப்பதில்லை. பெண்களுக்குப் பொட்டுதான் முக்கியம்'' என்றார்.

விழாவின் கடைசி நாளன்று தங்கவேலு கலந்து கொண்டார். அவரிடம் ஒரு சிறுவன், ''நீங்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்?'' என்று கேட்டான். ''முன்பு முட்டாள்தனமாக நான் ஒரு கட்சியில் இருந்தேன். இப்போது எந்தக் கட்சியிலும் இல்லை.'' என்று சொல்லிவிட்டு. ''நாம் தாயை தெய்வமாக மதிக்கவேண்டும். நான் என் தாயிடம் ஒரு அடிகூட வாங்கியதில்லை'' என்றார்.

நெற்றிக்குப் பொட்டும் தெய்வத்திற்குச் சமம் தாய் என்றும் கேட்ட இந்த அறிவுரைகள் இனியபோதனைகள் தானே?

என். விஜயலக்ஷ்மி.
வேலூர்.

ட்விங்கிள் ட்விங்கிள்!

நான் தாம்பரத்திலுள்ள கிறிஸ்துவக் கல்லூரியில் படித்து வருகிறேன். எங்கள் கல்லூரியின் 'கதம்ப நிகழ்ச்சி' ஒன்று சென்ற

''அம்மாவிடம் நான் அடிபட்டதே இல்லை...'' — தங்கவேலு.

ஆண்டு, ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்றது. அதற்குத் தலைமை தாங்க, எங்கள் கல்லூரியின் பழைய மாணவரான ஜெமினி கணேசன், சாவித்திரியுடன் வந்திருந்தார்.

திரு. கணேஷ் பேசும்போது நிகழ்ச்சிகளில் ஒன்றைப் பற்றி குறிப்பிட்டு, "ட்விங்கிள் ட்விங்கிள் லிட்டில் ஸ்டார்" என்ற ஆங்கிலப்பாடலை 'கல்யாணி' ராகத்தில் பாடிக்காட்டினார். மறந்து போய் விட்ட அதை அவர் நடுவில் நிறுத்தவே, அதை அறியாத மாணவர்கள், "தொடர்ந்து பாடுங்கள்" என்று கத்தினோம்.

நினைவில் இருந்தால் தானே அவர் பாடுவார்?

இதைக்கண்ட சாவித்திரி தலை குனிந்த வண்ணம், வெட்கத்துடன், தனது இடது கையால் மெல்ல நெற்றியில் அடித்துக் கொண்டார். அவரது இந்தச் செய்கை எங்களுக்கு, "இவர் ஏன் இப்படி ஏதாவது வம்பு செய்து, தகராறில் மாட்டிக் கொள்ளுகிறார்" என்று கவலைப் படுவதுபோல், இருந்தது. இதை மாணவர்களாகிய நாங்கள் மிகவும் ரசித்தோம். சபையில் சப்தம் அடங்க பத்து நிமிஷங்கள் பிடித்தன!

ஆர். எஸ். ராமச்சந்திரன்,
தாம்பரம்.

மாலை மரியாதை!

அன்று 'வீரபாண்டிய கட்டபொம்மன்' 153-வது நாள் விழா. அன்றைய விழாவுக்கு 'நடிகர் திலகம்' கணேசன், பி. ஆர். பந்துலு, சந்தானம் ஆகியோர் வந்திருந்தனர். மதுரை மாநகர் கண்டிராத

"நாளை வந்து மீதி இரண்டு அடி அடிக்கிறேன்"-பாலய்யா.

அளவு கூட்டம் கூடியிருந்தது. மாலை நான்கு மணி அளவுக்கு தாரை, தப்பட்டைகள் முழங்க ஊர்வலம் தொடங்கியது. எங்கும் மக்கள் கூட்டம். ஒவ்வொரு வீட்டின் மாடியிலும் மக்கள் கூட்டம். அப்போது மாடியிலிருந்த ஒரு ரசிகர், தன் கையில் அழகான ரோஜா மாலை ஒன்றை வைத்துக் கொண்டு, "நான் நடிகர் திலகத்தின் ரசிகன் என்பது உண்மையானல், நான் எறியும் இந்த மாலை அவர் கழுத்தில் விழுவதாக" என்று கூறிக்கொண்டே. விசினர். என்ன ஆச்சர்யம்! அந்த மாலை நேராக 'நடிகர் திலக'த்தின் கழுத்தில் போய் விழுந்தது. ரசிகர்கள் ஒரே கரகோஷம் செய்து, தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

தி. கண்ணன்,
மதுரை.

தமிழகத்தில் ஒரு அந்தோனி!

எங்களூராகிய நாகப்பட்டினத்தில் சுமார் எட்டு வருடங்களுக்கு முன்பு ஒரு பொதுக்கூட்டத்தில் பேச கலைஞர் மு. கருணாநிதியும், 'புரட்சி நடிகர்' எம். ஜி. ராமச்சந்திரனும் வந்திருந்தார்கள். அன்று நாகையே கண்டிராத கூட்டம். கலைஞர் பேச ஆரம்பித்தார்; பேசினர்; முடித்தார். அடுத்து புரட்சி நடிகர் பேச எழுந்தார். அவர் பேச ஆரம்பித்து பத்து நிமிஷங்கள் சென்றிருக்கும். இரவு ஒன்பது மணிக்கு ஒலிக்கும் சங்கு ஊதியதால் வந்திருந்த எல்லோரும் நேரமாகி விட்டதென்று தத்தம் வீடு போக எழுந்தனர்.

உடனே புரட்சி நடிகரின் பேச்சில் ஒரு திடீர் மாற்றம் ஏற்பட்டது. "நீங்கள் என்னைப் பார்ப்பதற்காக

வந்திருப்பின் பார்த்த உடனேயே சென்றிருக்க வேண்டும். அன்றி கலைஞரின் பேச்சைக் கேட்க வந்திருப்பின், அவர் பேசி முடித்ததும் போயிருக்க வேண்டும். அதை விடுத்து நீங்கள் இவ்வாறு எழுவது தவறு'' எனச் சுட்டிக்காட்டி, மேலும், ''ராமச்சந்திரன் சொல்கிறார் என்பதற்காக எதையும் கேட்க வேண்டாம். எதையும் சிந்தியுங்கள். சிந்தித்து, கொள்ள வேண்டியது; தள்ள வேண்டியது, எது என்ற முடிவுக்கு வாருங்கள்'' என்றார். எழுந்த மக்கள் வெள்ளம், எழுந்து அடங்கும் கடல் அலையைப் போலவே அடங்கிற்று.

ஷேக்ஸ்பியரின் 'ஜூலியஸ் சீசர்' நாடகத்தில் அந்தோனி தன் பேச்சின் வன்மையால் மக்கள் கூட்டத்தை தன் பக்கம் இழுத்தான் எனப் படித்திருக்கிறேன். நேரில் பார்த்ததில்லை. அன்று நான் அந்தோனியையே காண முடிந்தது - எம். ஜி. ஆர். உருவில்!

நாகை வே. ஜெகந்நாதன்,
பெரியகுளம்.

எடைக்குத் தடையா?

நான் திருச்சி ராஜாஜி ஸானடோரியத்தில், நோயாளியாக படுக்கையில் படுத்திருந்தேன். அப்போது ஸானடோரியத்தில் ஒரு வார்டு கட்டுவதற்காக பத்மினி - ராகினி சகோதரிகளின் நிதி நடனக் கச்சேரி நடக்கப்போவதாகக் கூறினார்கள். நடனமாட வரும்போது சகோதரிகள் ஸானடோரியத்தில் உள்ள வார்டுகளைப் பார்க்க வருவதாகவும் கூறியிருந்தார்கள். நாங்கள் அனைவரும் அந்த நாளை எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம்.

''ட்விங்கிள் ட்விங்கிள் லிட்டில் ஸ்டார்!''
ஜெமினி கணேசன்

அந்த நாளும் வந்தது. பத்மினியும் ராகினியும் ஒவ்வொரு வார்டாகப் பார்த்துக் கொண்டே வந்தார்கள். எங்கள் வார்டுக்கு வந்தவுடன் தலைமை டாக்டர் பத்மினியிடம் ஒரு நோயாளியைச் சுட்டிக்காண்பித்து, ''இவர் ஒரே வாரத்தில் பத்து பவுண்டு எடை கூடியுள்ளார். இது வரை யாரும் எங்கள் ஸானடோரியத்தில் இவ்வளவு விரைவாக எடையில் கூடியதில்லை'' என்று கூறினார். உடனே ராகினி, ''வாரத்திற்கு பத்து பவுண்ட் வீதம் இவர் கூடிக் கொண்டே போனால், உங்கள் ஸானடோரியத்தில் உள்ள படுக்கை தாங்காது போய்விடுமே!'' என்று கூறியதும் எல்லோரும் சிரித்தோம். உண்மையிலேயே ராகினி குறும்புக்காரி தான்!

89702
ஆர். பால்,
திருச்சி.

விநாயகர் வந்தார்!

நரசு ஸ்டுடியோவினர் தயாரித்து வரும் 'ஸ்ரீவள்ளி' படத்திற்கான சில வெளிப்புறக் காட்சிகள் எங்கள் ஊரை அடுத்துள்ள 'அமர்தி' என்ற காட்டில் படமாக்கப்பட்டன. அது சமயம் நடிகர்கள் சிவாஜி கணேசன், டி. ஆர். மகாலிங்கம், ஈ. ஆர். சகாதேவன், பத்மினி, ராகினி, சட்டாம்பிள்ளை வெங்கட்ராமன், 'குலதெய்வம்' ராஜகோபால், சி. எஸ். பாண்டியன் முதலியோர் வந்திருந்தார்கள். இவர்களுக்கும், மற்றும் இதர கலைஞர்களுக்கும் வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கும் பொறுப்பு எங்கள் ஊரில் உள்ள நரசுஸ் காபி விற்பனை நிலையத்தின் மானேஜரிடம் விடப்பட்டிருந்தது. அவர் எனக்கு மிகவும் தெரிந்தவராதலால் நானும் அவருடன்

சென்றிருந்தேன். உணவு விடுதிக்கு வேண்டிய பொருள்கள் வாங்கும் பொறுப்பு என்னிடம் விடப்பட்டது.

அன்று விநாயகர் சதுர்த்தி. மாலை படப்பிடிப்பு முடிந்ததும் சிவாஜி கணேசன் குளித்துவிட்டு, பட்டை பட்டையாக திருநீறு பூசிக்கொண்டு மற்ற நடிகர்களை அழைத்துக் கொண்டு தன் விடுதிக்குச் சென்றார். அங்கு விநாயகர் சிலைக்கு அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. நாங்கள் யாவரும் உட்கார்ந்து கொண்டோம். சிவாஜி கணேசன் ஆண்டவன் மீது மிகவும் பக்தியுடன் பாடினார். கடைசியில் திபாராதனை செய்தார்.

வெளியில் பெரிய சப்தம் கேட்டது. நாங்கள் வெளியே வந்து பார்த்து, பேராச்சர்யத்தில் மூழ்கினோம். சமயத்திற்கென்று வந்தது போல், உண்மையிலேயே விநாயகர் துதிக்கையை ஆட்டிக் கொண்டு அங்கே நின்றிருந்தார். படப்பிடிப்புக்கு வந்திருந்த யானை தான் அது! கணேசன் அதற்கு உடனே பழம், சுண்டல், கொழுக்கட்டை முதலியவைகளைக் கொடுத்தார். ஒரு கையில் கொழுக்கட்டையைத் தின்ற

“ஏழைகளுக்காகவே டிராமா போடப்போறேன்” ‘நடிக வேள்’ எம். ஆர். ராதா.

படி இதை அப்படியே படம் பிடித்தார் ராகினி.

து. சூரியநாராயணன்,
வேலூர்.

பயந்தோம்! பாராட்டினார்!!

பொள்ளாச்சி வடுகபாளையம் முத்தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் அதன் ஆண்டு விழாவை முன்னிட்டு ‘மலர்க்கொடி’ என்ற நாடகத்தை நடத்தினோம். மறுநாள் ‘நடிகவேள்’ எம்.ஆர். ராதாவின் ‘இழந்த காதல்’ நடைபெற இருந்தது. எங்கள் குழு உறுப்பினரில் சிலருக்கு அவருடன் சேர்ந்து நடிக்க வேண்டும் என்ற ஆர்வம் நீண்ட நாட்களாக உண்டு. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, அவரிடம் போய்க் கேட்பதென்று கிளம்பினார்கள். இவர்கள் போன சமயம், ராதாவுடன் வந்திருந்த சில நடிகர்களுக்கு உடல்நலம் சரியில்லாமல் போனதால், அவர்களது ஆவலும் உடனடியாக நிறைவேறியது. அன்றிரவு நாடகத்தில் ராதாவுடன் சேர்ந்து நடிக்கும்போது சில சில காட்சிகளில் வாய்குழறி ராதா என்ன சொல்வாரோ என்று பயப்பட்டுக் கொண்டிருந்தபோது, ராதா அவர்களைப் பாராட்டிப் பேசியது பெரும் வியப்பையே அவர்களுக்குத் தந்தது.

‘இளங்கதிர்’
பொள்ளாச்சி.

டாக்டரின் கதை

ஆறாண்டுகளுக்கு முன்பு நடந்த சம்பவம் இது. எங்கள் ஊரில் மாடர்ன்

தியேட்டர்ஸ் இருந்ததால் சினிமா நடிக, நடிகையரை பலமுறை, காரிலே போகும்போது காண முடிவதுண்டு. எனவே அவர்களைப் பார்க்கும்போது அதிக பரபரப்பேற்படுவதில்லை. இருந்தாலும் கூட இன்று புகழேணியின் உச்சியில் இருக்கும் ஒரு நடிகையுடன் ஒரு நாளிரவு 9½ மணி முதல் 11½ மணி வரை, அருகருகே உரையாடிய நினைவு கொஞ்சம் எழுச்சியை உண்டாக்காமலில்லை.

அப்போது நான் இன்டர்வ்யூவுக்காக சேலத்தினின்று சென்னை புறப்பட்டவள், சில தோழியரின் வரவிற்காக சேலம் ஜங்ஷனில் வெயிட்டிங் ஹாலில் காத்திருந்தேன். திடீரென உள்ளே அப்போது வந்தார் ஒருவர். என் கண்களை குளமாக்கி உள்ளத்தை சல்லடைக் கண்ணாகத் துளைத்து ஒரு வாரம் உறக்கம் கெடக்காரணமாக இருந்த 'பார்வதி' சாவித்திரிதான் அவர்.

சில வினாடிகள் கழிந்தன. "அப்பப்பா! என்ன கொசு...மூட்டைப் பூச்சி வேறு" என்ற குரலைக் கேட்டுத் திரும்பினேன். புன்னகையுடன் அவர், "இங்கு மின்சார விசிறியின் 'ஸ்விட்ச்' எங்கே?" என்று வினவினார், அசட்டுச் சிரிப்புடன் மின் விசிறியை சுழலவிட்ட நான், "நீங்கள் சாவித்திரி தானே?" என்று மெதுவாகக் கேட்டேன்.

"ம்"...மீண்டும் ஒரு இளநகை.

"இங்கே இன்னும் பெயர் வைக்கப்படாத ஒரு சோஷியல் பிக்சருக்காக வந்தேன். (சுகம் எங்கே? அது) கே. ஆர். ராமசாமிதான் ஹீரோ ... நீங்கள்?" என்றார். நான் மருத்துவக் கல்லூரியில் விண்ணப்பித்திருப்பதையும், அதற்கான தேர்வுக்காகச் சென்னைக்குப் போவது பற்றியும் கூறினேன்.

"இங்கு எங்கள் ஊர் ரசிகர்கள் எப்படி?" என்ற என் கேள்விக்குப் பதிலாக, 'இப்படித்தான் இருப்பார்கள்' என்பது போல, வெளியே ஒரே கோஷம் 'சாவித்திரி சாவித்திரி' என்று. அந்தக் கும்பலிலிருந்து தப்பித்து அவர் ரயில் ஏறியதும் பெரிய காரியம்தான்.

"எல்லோரும் வாழவேண்டும்"
— ஜெமினி கணேசன்.

இன்றும் சாவித்திரி தன் குழந்தை விஜயசாமுண்டீஸ்வரியை டாக்டருக்குப் படிக்க வைக்கப்போவதாக யாராவது கூறினால் அந்த 'ஓரிரவு' என் நினைவில் இரண்டொரு நிமிஷங்கள் தோன்றி மறைகிறது.

திலகவதி,
சென்னை.

சத்திய சோதனை!

எங்கள் ஊரில் நாடகமொன்று நடத்துவதற்காக 14-5-55-ல் ஹாஸ்ய நடிகர் தங்கவேலு வந்திருந்தார். 'வழிப்போக்கர் விடுதி'யில் தங்கியிருந்த அவரை, நானும், எனது நண்பர்கள் சிலரும் சந்தித்தோம். நான் பல கேள்விகளை அவரிடம் கேட்டு, பதில்களை குறித்து வந்தேன். கடைசியாக, "மாணவர்களுக்கு என்ன அறிவுரை தருகிறீர்கள்?" என்று கேட்டபோது, "ஒழுக்கமுடன் நன்கு படிக்க வேண்டும். ஆசிரியர் சொல்படி நடக்கவேண்டும்" என்று கூறினார். அப்போது அவரது கோஷ்டியைச்

சேர்ந்த ஒருவர் சிகரெட் டின்னும் தீப்பெட்டியும் அவரிடம் கொண்டு வந்து நீட்டினுர். சிகரெட்டை என்னிடம் நீட்டிய போது, 'நான் பிடிப்பதில்லை' என்று சொன்னேன். என்னுடன் வந்த மூவரும் ஆளுக்கொன்ருக சிகரெட்டை எடுத்துக் கொண்டனர், உடனே தங்கவேலு, ''பள்ளியில் படிக்கும் நீங்கள் மிகவும் ஒழுக்கமுடன் இருப்பீர்கள் என்று நினைத்தேன். ஒழுக்கத்தைப்பற்றி இப்போது நான் எடுத்துக் கூறியும் கூட, உங்களை சோதிக்க எண்ணி சிகரெட்டை நீட்டினுல் எடுத்துக்கொள்வதா? உங்கள் ஒழுக்கம் இதுதானு? மரியாதையுடன் சிகரெட்டைத் திருப்பிக் கொடுத்துவிட்டு, இனி புகை பிடிப்பதில்லை என்று சத்தியம் செய்து கொடுங்கள்'' என்று கூறினுர். அவர்களும் தங்கள் தவறை ஒப்புக்கொண்டுசத்தியம் செய்தனர். தங்கவேலு மகிழ்ந்து, தன் கையெழுத்தைப் போட்டுக் கொடுத்து, வணக்கமும் வாழ்த்தும் தெரிவித்து, வழியனுப்பினுர்.

அசு. அப்துல்ஹை,
அரகண்டநல்லூர்.

ஏழைக்கு இடம்!

'ரத்தக்கண்ணீர்' நாடகத்திற்காக 1955-ல் கோலாருக்கு வந்திருந்தார் எம்.ஆர் ராதா. 'அவர் கோபக்காரர்' என்றெல்லாம் தவருன வதந்திகளைப் பரப்பிக் கொண்டிருந்தார்கள். எனவே பயமுடன் தான் அவரைக் காண நண்பர்களுடன் சென்றேன். அவரோ மிக்க அன்புடன் பழகி, 'ஆட்டோகிராப்' புத்தகம் இல்லாதபோது, ஒரு காகிதத்தில் தன் கையெழுத்தைப் போட்டுக் கொடுத்தார். அவருடன் பேசியதில் ஒரு விஷயம் மட்டும் நன்ருக நினைவிருக்கிறது. 'நான் ஏழைக்களுக்காகவே நாடகம் நடத்துகிறேன். ஆனுல் என்ன செய்வது? பணக்காரர்கள் பார்க்கும் நாடகமாகி விட்டது. முழுவசதி கிடைத்ததும், இரண்டணு, நான்கணு டிக்கெட்டுக்கு மேல் போடாமல், எல்லா ஏழைகளும் பார்க்கும்படி வைப்போம்'' என்ருர்.

அவரது நல்லெண்ணத்தை நினைவாக்கப் போகும் அந்தநாள் என்று வரப்போகிறதோ?

அ. பாண்டுரங்கன்,
சென்னை.

எல்லோரும் வாழ வேண்டும்

இரண்டொரு வருடங்களுக்கு முன் செங்கற்பட்டிலே கலைஞர் திலகம் ஸ்ரீதருக்கு பாராட்டுவிழா நடைபெற்றது. அன்று வந்திருந்த விருந்தினர்களை எங்கள் வீட்டில் சிற்றுண்டி யருந்த அழைத்திருந்தோம். ஜெமினி கணேசன், வீனஸ் கிருஷ்ணமூர்த்தி, கோவிந்தராஜன், பிரபுராம் பிக்சர்ஸ் முத்துமாணிக்கம், சிவாஜியின் சகோதரர் ஷண்முகம் முதலியோர் வந்திருந்தனர். ஜெமினிகணேசனுடன் சில நிமிஷங்கள் பேசிக்கொண்டிருந்தேன். பேச்சுக்கிடையே அவரது காரியதரிசியும் நாடக நடிகருமான மஹாலிங்கம் பற்றிப் பேசினேன் கணேசன் தன் காரியதரிசி மஹாலிங்கம் படங்களில் நடித்துவர வழி செய்வதுடன் தானே சிபாரிசும் செய்கிருர். அத்துடன் தனக்கு வரும் சந்தர்ப்பங்களையும் மற்றவர்களுக்கு வாங்கிக் கொடுக்கிருர். இது பாராட்டப்பட வேண்டிய விஷயமல்லவா?

''புகழேணியின் உச்சியிலுள்ள தாங்கள் காரியதரிசியையும் நடிக்கச் சிபாரிசு செய்கிறீர்கள், பாலாஜி போன்ருேருக்கு தங்களுக்குப் பதில் சந்தர்ப்பம் தருகிறீர்கள். இது பாராட்டப்பட வேண்டியதாகும்'' என்றேன். 'இதில் பாராட்டுவதற்கொன்றுமில்லை. நான் எப்படி முன்னுக்கு வந்தேனே அதேபோல மற்றவர்கள் வருவதற்கும் நான் வழி விடுகிறேன்- எல்லோரும் வாழ வேண்டுமல்லவா?'' என்ருர். அவரது பெருந்தன்மை குறித்துப் பாராட்டாதவர் இல்லை.

பி. எஸ். கிருஷ்ணசாமி,
'யூரேகா', செங்கற்பட்டு.

கையை முகவாயில் ஊன்றி விட்டாலே பெண்களுக்குக் கவர்ச்சி ஏற்பட்டுவிடும் போலிருக்கிறது! இவள் கவர்ச்சியில் மயங்குபவன் யாராக இருக்கும்? எம். ஏ. வி. பிக்சர்ஸ் "பணம் பந்தியிலே" படத்தில் விஜயகுமாரி இப்படி கவர்ச்சிகரமாகத் தோன்றுகிறார்

அதிக ஆடையணிகளில்லாத இவள் கவர்ச்சிகரமாகத் தோன்ற விரலை கன்னத்தில் வைத்துப் புன்முறுவல் பூக்கிருள். இவள் நாகரீக மங்கை என்பது, பார்த்தாலே தெரியவில்லையா? புத்தா பிக்சர்ஸின் "பக்திவழி" தமிழ்ப் படத்தில் இளம் நடி தேவிகா.

இவள் வெட்கப்படுகிறுள் போலும்! ராஜவம்சத்தைச் சேர்ந்தவ ளென்பது, பார்த்தவுடனேயே தெரிகிறதே! இவள் ராவணேஸ்வரனின் பத்தினி மண்டோதரி. வைதேகி பிக்சர்ஸ் அளிக்கும் என். ஏ. டி. யின் "சீதாராம கல்யாணம்" படத்தில் சரோஜாதேவி.

ஆடையணிகளின் ஆடம்பரத்தை விடப் பொட்டும் பூவும் இருந்து விட்டால் பெண்களுக்குத் தனிக்கவர்ச்சி ஏற்படத்தான் செய்கிறது. சரவணபவா — யூனிடி பிக்சர் ஸாரின் "எல்லாம் உனக்காக" தமிழ்ப் படத்தில் சாவித்திரி இப்படிக் கவர்ச்சிகரமாகத் தோன்றி நடித்து வருகிறார்.


வைதேகி பிக்சர்ஸ் அளிக்கும்
N.A.T. யின்
சீதாராமகல்யாணம்
காட்சிகள்





என். ஏ. டி. யின் "சீதாராம கல்யாணம்" தெலுங்குப் படத்தை வைதேகி பிக்சர்ஸார் தமிழில் திரையிடப் போகிறார்கள். ஏராளமான பொருட் செலவில் பல பௌராணிக மேதைகளின் யோசனைக்கிணங்க தயாரிக்கப்பட்டு வரும் இந்த பிரம்மாண்டமான படம் இம்மாத மத்தியில் திரைக்கு வருகிறது.

(56-ம் பக்கத் தொடர்ச்சி)

இல்லாடியாம். அதுபோல வரனும்னு பாலாஜி நினைக்கிருரு. ஹிந்திப் படங்கள்ளே நடிக்கப் போற அவருக்கு இது தேவையோ, என்னவோ?''

''அப்ப சௌகாரும் படத்துக் காகத்தான் கத்துக்குருங்களா?''

''இல்லையாண்ணே! சிங்கப்பூரிலே ஒரு சினிமா விழா நடக்கப் போகுதாம். அங்கே இந்த மாதிரி நடனங்கள்தான் பாபுலராம்! அத்தோட ஜப்பானுக்கும் அவர் போருப்போல தெரியுது! எல்லாத்துக்கும் இது உதவுமில்லே''...

ரயில் குறுக்கே வந்ததால் சாலையில் பிரயாணத்தைத் தொடர முடியாத பஸ் நின்றது. அங்கே புதிதாக வந்து ஏறிக் கொண்டார் ஒருவர்!

''அடடே! வாய்யா வா! எங்கே போன ஞாயிற்றுக்கிழமை ஆளையே காணோம்!'' என்று அவரை வரவேற்ருர்கள், வண்டியிலிருந்த சில பிரயாணிகள்.

''லண்டன்லேந்து யாரோ டைரக்டர் வந்தாரில்லே! அவருக்கு நம்ம நடிகர் சங்கம் ஒரு வரவேற்பு கொடுத்தது......''

''ஆமாமா; யாரோ க்வின் என்பவராம். பிரிட்டிஷ் பிலிம் சங்கத்தின் டைரக்டராம். ஆமா! அவரெப் பாத்து நம்ம ஹீரோங்கள்ளாம் அசந்து போயிட்டாங்களாமே! நாற்பத்தோரு வயசாகியும் ஹீரோ மாதிரி இருக்கிருராமே!''

''இது என்னங்க! நாற்பத்திமூணு வயசாகியும் நம்ப அண்ணன் எம். ஜி. ஆரு. இல்லீங்களா அப்படி?''

''வரவேற்பு எங்கே நடந்தது?...''

''ராயப்பேட்டை உட்லண்ட்ஸ்லே! ஆனா பெரும்பாலானவங்க வரவே இல்லீங்க. தங்கவேலுகூட பேசறபோது இதைக் குத்திச் சொன்னரு. அவரு சொன்னது நியாயமான பேச்சுதான்னு எல்லாருமே பேசிக்கிட்டாங்க''...

''மேலே என்ன நடந்தது?''

''என்ன நடந்தது? இந்த விழாவே சரியா நடந்ததா சொல்ல முடியலே! பாருங்க, நம்ப எஸ். எஸ். ஆரு., தங்கவேலு, குலதெய்வம், ராஜசுலோசனு, எஸ். பாலசந்தர், கே. ஜே. மகாதேவன் எல்லாரும் வந்திருந்தாங்க. ஆனா க்வின்னுக்கு இவங்க யாருன்னு அறிமுகப் படுத்தவே இல்லை. இது என்ன விழாங்க! அவங்கவங்களா போயி இடத்தைத்தேடி உட்கார்ந்துகிட்டாங்க. ஆனா அந்த வட இந்திய நடிகர் - அவர் தாங்க நம்ம ஊர் ஹிந்திப் படங்கள்ளே துண்டு வேஷத்துலே நடிப்பாரே டேவிட் - அவரை விழுந்து விழுந்து வரவேற்ருங்க. அந்த ஆளைப்பிடிச்சு க்வின்னுக்குப் பக்கத்திலே உட்கார வச்சிட்டாங்க வயத்தெரிச்சலா இருந்ததுங்க இது. நம்ம ஹீரோங்களை உட்காரவைக்கலேன்னலும், சங்கத் தலைவர் நாகேந்திரராவை யாவது உட்கார வச்சிருக்கலாம்!'' - ஆசாமி நிறுத்தினர்.

''விழாவிலே எஸ். எஸ். ஆர், தங்கவேலு, டேவிட் எல்லாரும் பேசினங்க. நம்ப டைரக்டர் சுப்பிரமணியமும் பேசினரு. ஆனா குலதெய்வத்தைக் கூப்பிடலே. டைரக்டர் பாலசந்தரை பேசச்சொல்லலே. பொதுவாவே நடிகைங்கள்ளே நல்லா பேசக்கூடிய ராஜசுலோசனவை கூடப் பேசச் சொல்லலே! நேரமாயிடும்னு இருந்திருக்கலாம்னு நினைக்கிறேன்! ஆனா பொதுவா இந்தக் குறையை பல பேர் சொல்லிக்கிட்டாங்க!''

''ஆமாண்ணே! குலதெய்வம்கூட ஒரு பத்திரிகைக்காரருகிட்டெ இதைச் சொல்லிக்கிட்டாராம்! ''உங்கநாட்டு அளவுக்கு நாங்க உயரமுடியாது! உங்ககிட்டே இருக்கிற அரிய குணங்களும் எங்களுக்கு வராது! நீங்களும் வந்து போயிக்கிட்டிருங்க நாங்களும் உங்க பேச்சைக்கேட்டுக்கிட்டுப் போருேம். ஆனா உங்களை மாதிரி நடப்போம்னு எதிர்பார்க்காதீங்க'' என்று, என்னைப் பேசச் சொல்லியிருந்தா, சொல்லியிருப்பேன்னு குலதெய்வம் அந்தப் பத்திரிகைக் காரருகிட்டே சொன்னராம். பாவம் எவ்வளவு மனக்கஷ்டம் இருந்தா அப்படிச் சொல்லியிருப்பாரு!''

''உண்மைதான்!'' என்று ஒப்புக் கொண்டார் இந்த 'சப்ஜெக்டை' ஆரம்பித்தவர். கதவு திறக்கப்பட பஸ்ஸும் தனது பிரயாணத்தைத் தொடர்ந்தது.

- 'பிரயாணி'

இம்மாத நக்ஷத்திரங்கள்

எஸ். எஸ். ஆர். பிக்சர்ஸின் "தங்கரத்தினம்" தமிழ்ப் படம் சமீபத்தில் திரையிடப்பட்டிருக்கிறது.

அவன் பெயர் தங்கம். குணமும் தங்கம்தான். அவன் ஒரு சீர்திருத்தவாதி. தாழ்ந்த ஜாதி என்று ஒதுக்கப்படும் ரத்தினம் என்ற அரிஜனப் பெண்ணை அவன் காதலிக்கிறான். செல்வம் என்ற தன் நண்பனை விரும்பும் சீதாவை அவனுக்கே மணமுடிக்க உறுதி கூறுகிறான். தன் தகப்பனுருக்கு விரோதமாக ஏழை மக்களை, தாழ்ந்த ஜாதிக்காரர்களை தன் வீட்டுக் கழைத்து விருந்திட, அதனால் வீட்டை விட்டே வெளியேற நேர்ந்தாலும் உறுதியிழக்கவில்லை அவன். சீதா தன்சிற்றன்னை என்றறிந்து சீறும் அவன், உண்மை யறிந்து வேதனைப்படுகிறான். தன்னையும் ரத்தினத்தையும் கொல்ல விரும்பும் தகப்பன் முன் உயிர் விடத் துணிந்து நிற்கிறான். கடைசியிலே சீதா பிணமானதும் தந்தையைச் சாடுகிறான்.

ரத்தினம் பிறப்பால் தாழ்ந்தவளாகக் கருதப்படுகிறவள். ஆனால் குணத்தால் உயர்ந்தவள். தன் எஜமான் மகனை டிரைவர் இழித்துப் பேசும்போது அவனைக் கண்டிக்கிறாள் அவள். தன் தந்தையைச் சவுக்கால் அடிக்கும் மிராசுதாரிடம், உள்ள நிலையை விவரித்து உணர்ச்சி ததும்ப, கோபம் பொங்க அவள் எடுத்துக் கூறும்போது நாம் அங்கே ஒரு வீராங்கனையையே காண்கிறோம். தன்னை தங்கம் தவிர வேறொருவன் தொடுவதைக்கூட விரும்பாத அவள், வேடமிட்டு வந்த தங்கத்தை, வேற்றாள் என நினைத்து அடித்தும் விடுகிறாள்.

"தங்கரத்தினம்" படத்தில் எஸ். எஸ். ஆர். தங்கமாகவும், விஜயகுமாரி ரத்தினமாகவும் நடிக்கிறார்கள். இருவரும் காதல் காட்சிகளில் நெருங்கி இணைந்து நடிப்பது மிகவும் இயற்கையாக இருக்கிறது.

காட்சிகளுக்கேற்ப தங்கள் முக பாவங்களை மாற்றிக் கொள்ளுவதுடன், அவற்றுக் கேற்றபடி குரலை உயர்த்தியும் தாழ்த்தியும் பேசி அருமையாக நடிக்கிறார்கள்.

எஸ். எஸ். ஆரும், விஜயகுமாரியும் தாங்கள் ஏற்ற பாத்திரங்களின் தன்மைகளைப் புரிந்து கொண்டு மிகவும் இயற்கையாக நடித்து ரசிகர்களின் ஏகோபித்த பாராட்டுதல்களைப் பெறுகிறார்கள். ஆகவே இவ்விருவரையும் இம்மாத நக்ஷத்திரங்கள் எனத் தேர்ந்தெடுத்துப் பாராட்டுகிறோம்.

—'குமார்'

அறிமுகம்

மிராசுதார் நல்லமுத்து ஜாதி வெறி பிடித்த செல்வந்தர். தாரமிழந்த அவருக்கு தங்கமான குணமுடைய ஒரே மகன் தங்கம். அவன் கல்லூரி மாணவன். தரகரின் மகன் கிருஷ்ணன், தங்கத்தின் நண்பன். கஷ்டப்படாமல் வாழும் கோமாளி. கறிகாய் விற்கும் ருக்மணியை அவன் காதலிக்கிருன்.

செல்வம் தங்கத்தின் கல்லூரி சகமாணவன். ஏழைப்பெண் சீதா அவனேக் காதலிக்கிருள். தங்கத்தின் முறைப்பெண் மீனுவும் செல்வத்திடம் காதல் கொள்ளுகிருள்.

ஊர் சேரியிலுள்ள வீராசாமியின் மகள் ரத்தினம். மிகவும் துடுக்குக்காரியான அவள், வீராசாமியின் ஒரே மகள். வீராசாமி பழமையில் ஊறியவன். 'தாழ்ந்த ஜாதியிலே பிறந்த நாம அடக்க ஒடுக்கமா நடக்கனும்' என்று பெண்ணுக்குப் புத்தி கூறுகிறவர் அவர்.

ஒன்று

சந்திப்பு

விடுமுறையில் ஊருக்கு வரும் வழியிலேயே தங்கமும் ரத்தினமும் சண்டையிட்டுக் கொள்ளுகிருர்கள். அப்போது, தான் யார் என்பதைச் சொல்லாமல் கார் டிரைவர் என்று அவளிடம் கூறுகிருன் தங்கம். மீண்டும் அவன் பூங்காவில் பாடிக்கொண்டிருக்கும் போது அவள் வந்து சண்டைக்கிழுக்கிருள்.

ரத் : ஏன்யா, பொம்பளேங்க தண்ணிக்குப் போற வழியிலே நின்னுக்கிட்டு முத்தங் குடுத்துட்டு ஓடு, வந்து வந்து மயக்குருன்னு பாடுறியே, யாரய்யா மயக்குனு, எப்பய்யா மயக்குனு, எங்கேய்யா மயக்குனு? எங்கே சொல்லு, சொல்லாட்டி உன்னே சும்மா விட மாட்டேன். ஆமா.

தங் : ஆமா, என்ன நீ, நீ பாட்டில வந்து சடபுட சடபுடன்னு கடலே பொறிஞ்ச மாதிரி பொறிஞ்சு தள்ளுறே. என்னடா, பழகின ஆளாச்சேன்னு நினேச்சு, பார்த்தவுடனே, 'என்னங்க

பாத்திரங்கள்

எஸ். எஸ். ராஜேந்திரன்	**தங்கம்**
வி. கே. ராமசாமி	**நல்லமுத்து**
பிரேம்நசீர்	**செல்வம்**
டி. வி. நாராயணசாமி	**வீராசாமி**
தங்கவேலு	**கிருஷ்ணன்**
விஜயகுமாரி	**ரத்தினம்**
எம். என். ராஜம்	**சீதா**
புஷ்பமாலா	**ருக்மணி**

வசனம் :

கரூர் ல. சேதுராமன்

திரைக்கதை - வசனம்

கே. ஜி. இராதாரமணுளன்

டைரக்‌ஷன் :

எஸ். எஸ். ஆர்.

சௌக்கியங்களா, கார் அடி பட்டதற்கு உங்க முதலாளி ஏதாவது கோவிச்சுக்கிட்டாங்களா' அப்படின்னு பணிவா கேட்பேன்னு நம்பினு, நீ டமார்னு நம்பிக்கைத் துரோகம் பண்ணிட்டியே... ஆலகால விஷத்தையும் நம்பலாம், ஆற்றையும் பெரும் காற்றையும் நம்பலாம், சேலை கட்டிய மாதரை நம்பினுல், தெருவில் நின்று தேங்கித் தவிப்பரே.

ரத் : அய்யோ, வாயை மூடய்யா, சேலைகட்டிய மாதரை நம்பினு, தெருவில் நின்று தவிப்பாங்களாமே பெரிய இவரு.

தங் : ஆமா, சேலை கட்டிய மாதரைச் சொன்ன உனக்கு ஏன் கோபம் வருது? நீதான் பாவாடை கட்டிய மாதராச்சேன்னேன்.

ரத் : பாத்தா, படிச்ச ஆள் மாதிரி தெரியுது.

தங் : என்ன பண்றது? இந்த ஒரே ட்ரஸ்தான். இதெதான் தொவச்சு, தொவச்சு மானேஜ் பண்ணிக்கிட்டு அலைகிறேன். ஏழையாச்சே நான்.

ரத் : யாராயிருந்தா என்னய்யா? பொம்பளைங்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டாம்?

தங் : அது குடுக்க வேண்டியதுதான். இருந்தாலும் ஒரு பொண்ணுவிட்டே பழகுறதுக்கு இப்பதானே பஸ்ட் சான்ஸ் கிடைச்சிருக்கு. அதுவும் ஒரு நாட்டுப் புறத்துக்கிட்டே!

ரத் : அய்யோ, இவரு சீமையிலேருந்து குதிச்சவரு! ஏ டிரைவரு! நீதான் அதிசயமா பட்டினத்திலேருந்து வந்திருக்கியா, எங்க ஊர்லேருந்து கூட ஒருத்தரு பட்டினத்திலே போயி படிக்கிருரு. அவரெல்லாம் எவ்வளவு நல்ல பிள்ளைன்னு பேரு வாங்குருரு தெரியுமா?

தங் : அடடே, யார் அவரு? யார் அந்தச் சுவரு?

ரத் : சுவருமில்லே, கவருமில்லே, எங்க முதலாளி மவன்.

தங் : ஊம்...முதலாளி மகன்னுலே தெரிஞ்சு போயிடுமா?...யார் அந்தப் பய? பேரைச் சொல்லேன்.

ரத் : இந்தாய்யா, ஒரு நல்ல ஆளேப்பாத்து பய, கியன்னு மரியாதைக் குறைவா பேசினே, அப்புறம் கோபம் வரும், ஆமா.

தங் : ம்...உனக்கு இன்னம் அப்பக் கோபம் வரலையா? எனக்குத் தெரியாமே பட்டணத்தில் யார் படிக்கிருன்னு கேக்கிறேன்?

ரத் : ஆமா, பட்டினத்திலேயிருக்கிற அத்தனை பேரையும் தெரியுமா உனக்கு? எங்க எஜமான் மவன் தங்கம், தெரியுமாய்யா?

தங் : எப்படி தங்கம், அட, நம்ம தங்கம். ரொம்ப நல்லாத் தெரியுமே! என் பிரண்டாச்சே அவன். ஆள் என்ன மாதிரியே இருப்பான். கொஞ்சம் லேசா குட்டையாயிருப்பான். அவனைத்தான் சொல்றியா நீ? அவன் சுத்தக் காலிப் பயலாச்சே!

ரத் : இந்தாங்க, ஊர்லே எல்லாரும் நல்லவர்னு சொல்றுங்க. இவரு குத்தங் கண்டு பிடிக்க வந்துட்டாரு. நக்கீரர் பேரனல்ல.

தங் : ம்...ம்...ம்... ஊர்லே எல்லாரும் சொல்றுங்களா? அவர் நல்லவர், நல்லவர்னு, சொல்றுங்களா. அப்ப உனக்குத் தெரியாது அவனே பத்தி!

ரத் : ம்...நான் சின்னப் பிள்ளையா இருக்கும்போது...

தங் : ம்...

ரத் : இந்த ஊர் பள்ளிக்கூடத்திலே

தங் : ம்...

ரத் : என்னங்க, ம்...ம்......ன்னுக் கிட்டு?

தங் : ம்...சொல்லு- சொல்லு.

ரத் : நான் அவருகூடத்தான் படிச்சேன்.

தங் : ம்...உம்.

ரத் : அதுக்கப்புறம்தான் அவரு பட்டணத்துககுப் போயிட்டாரு. இப்ப அவருக்கு என்னப் பாத்தா அடையாளங் கூடத் தெரியாது.

தங் : சரிதான்...நேர்லே பாக்காமத் தான் அடிச்சி விட்ரியா? அவன் பெரிய ஆளாச்சே. அவன் ஹிஸ்ட்ரியே என் கைக்குள்ளே யிருக்கு. அவன், சாமான் யமான அயோக்கியனில்ல, ஜமக்காளத் திலே வடி கட்டின அயோக்கியன்.

ரத் : இந்தாய்யா, உனக்கு எப்படி இருக்கு? சும்மா திரும்ப திரும்ப இதே சொல்லிக்கிட்டிருக்கியே, அப்படி என் னய்யா அவரிட்டே அயோக்கியத்தனத் தைக் கண்டுபிட்டே நீயீ?

பேச்சின் முடிவில் அவள் பெயர் ரத்தினம் என்று அறிகிறான் தங்கம். போகப் போக இது அவர்களி டையே காதலாகப் பரிணமிக்கிறது.

இரண்டு

நான் உன் தாய்!

சீதாவையும் செல்வத்தையும் சேர்த்து வைப்பதாக உறுதி கூறு கிறான் தங்கம். ஆனால் சீதாவின் தாய் காலமாகி விடவே, ஊருக்கு வந்த அவள் தன் தந்தைக்குத் துணையாக அங்கேயே தங்க நேரிடு கிறது. அவள் தந்தை வடிவேலு, பட்ட கடனுக்காக, தரகன், மிராசு தாருக்கே சீதாவை மணமுடிக்க யோசனை கூறுகிறான். வடிவேலு இதற்கு மறுத்து, தற்கொலை செய்து கொள்ள முயற்சிக்கிறார். சீதா அவரைத் தடுத்து, மிராசுதாருக்கே மனைவியாகிறாள். இந்த அதிர்ச்சி தாளாமல் வடிவேலுவும் இறந்து விடுகிறார். தங்கம் கல்லூரியிலிருந்து ஊர் திரும்புகிறான். தகப்பனார் மறு மணம் செய்வதைத் தடுக்க முயற் சித்து, சந்தர்ப்ப கோளாறால் தோல் வியுற்ற அவன், தன் சிற்றன்னை யாகக் காட்சியளிக்கும் சீதாவைக் கண்டு திடுக்கிறான். பண ஆசை காரணமாக அவள் தன் தந் தையை மணந்ததாகத் தப்புக் கணக்கும் போட்டு விடுகிறான். தங் கத்திடம் உண்மையைக் கூற வரு கிறாள் சீதா.

தங் : கடிகார முள்ளின் நடை போல, உள்ளம் சணம் ஓர் இடம் செல் லும் புவிமீதே, கடல் ஆழம் கண்ட பெரியோரும், பெண் மனதாழம் காண முடியாது. முடியாது நம்ப முடி யாது, பெண்கள்...யாரது?

சீதா : நான்தான், படுக்கை யறைக்கு வத்திருக்கேன்னு பயப்படு



நீங்களா? இல்லே சந்தேகப் படுறீங்களா, தங்கம்?

தங் : ஊம் சந்தேகிப்பதா? ம்...உன்னையா? சத்தியம் தவறாத உத்தமியல்லவா நீ. உன்னை சந்தேகிப்பேனா? இப்ப, நீ எதுக்காக அழறே? ஏன் அழறே? எனக்குத் தெரியும், இந்தப் பெண்களுக்கு இருக்கிற ஒரே ஒரு தற்காப்பு சாதனம் இந்த அழுகை ஒண்ணுதான்.

சீதா : தங்கம்! குற்றமற்றவள் நான்.

தங் : ஊம், நீயா குற்றமற்றவள்? மணந்தால் செல்வத்தையே மணப்பேன் இல்லாட்டா மரணத்தே அணைப்பேன்னு சொன்னியே. அதே சீதா தானே?

சீதா : இல்லை தங்கம் இல்லை. அந்த சீதா செத்து விட்டாள். மலர்ச்சோலையிலே உலாவ நினைத்தவள் எப்படி மயானத்தில் தூக்கி எறியப்பட்டாள் என்ற சோகக் கதையைத் சொல்லத் தான்....

தங் : போதும், எல்லாரும் இப்படித்தான் காரியம் முடிஞ்சதுக்கப்புறம், அதுக்கொரு காரணத்தை உண்டு பண்ணிச் சொல்றது... ம்... என்ன இருந்தாலும் மிராசுதார் பெரிய பணக்காரர், செல்வம் அன்னக் காவடிதானே?

சீதா : தங்கம்.

தங் : ம்...காலம் பூராவும் காதல், காதல்னு ஆடிப் பாடிட்டு, இப்ப காசு இருக்கிற காரணத்துக்காக ஒருத்தனுக்கு கழுத்தை நீட்டினேபாரு, உன்னைப் போல புத்திசாலிதான் இப்ப தேவை.

சீதா : பேசுங்க, தங்கம் பேசுங்க.

தங் போதும். இப்ப நீ பேசுறதயே நான் விரும்பலே. முதல்ல இங்கேருந்து போயிடு. சீக்கிரம் போ.

சீதா : போறேன் தங்கம் போறேன். ஆனால் உலகத்திலே குற்றம் செய்யாதவங்களும் தண்டிக்கப்படுறாங்க. என்னை நம்புங்க, என்னை நம்புங்க தங்கம்.

தங் : ம்...இதில நம்புவதற்கு என்னம்மா இருக்கு?

சீதா : ஆமாம், நான் உங்களுக்கு அம்மாதான். முன்பு ஒருநாள், சீதா நீ எனக்கு தாய்மாதிரின்னு சொன்னீங்க. இப்ப நான் உண்மையிலே உங்களுக்குத் தாய்தான், தங்கம் தாய்தான்.

சீதா போகிறாள்.

மூன்று

போ, வெளியே!

மிராசுதார் பொங்கல் திருநாளன்று செல்வந்தர்களையெல்லாம் விருந்துக்கு அழைக்கிறார். தங்கம் ஊர் ஏழை மக்கள் அனைவரையும் அங்கே விருந்துண்ண அழைத்து வந்து விடுகிறான். செல்வந்தர்கள் கீழ் ஜாதிக்காரர்களுடன் விருந்துண்ண மறுத்து வெளியேறி மிராசுதாரிடம் வந்து சண்டை பிடிக்கவே அவர் கோபமாக உள்ளே வருகிறார்.

மிரா : ஆ...அப்படியா, டேய் மாயாண்டி, நம்ம குலகோத்திரம், ஜாதி, ஆச்சாரமெல்லாம் நாசமாப் போச்சு. ஏண்டா, இது சேரியா, மடமா? யோவ், ஒரு பய இலையில் கையை

வச்சா, கையை வெட்டிடுவேன். எழுந்திருங்க, எழுந்திருங்க, அயோக்கியப் பசங்களா, எழுந்திருங்கடா.

தங்: எல்லாம் அப்படியே உக்காருங்க, ஏன் நடுங்குறீங்க? சும்மா சாப்பிடுங்க.

மிரா: டேய் தங்கம்! நீ செய்யறது உனக்கே நியாயமா இருக்காடா? உனக்கே நியாயமா இருக்கா? இந்த அக்கிரமம் அடுக்குமாடா?

தங்: எதப்பா அக்கிரமம்? தமிழர் திருநாள், தரணியெல்லாம் மகிழும் பொங்கல் திருநாள்; இன்னைக்கு எல்லா மனிதர்களும் ஒரே இடத்தில் உட்கார்ந்து சாப்பிடறதா அக்கிரமம்? ஏய், ஏய், எழுந்திருச்சுட்டாங்க. உக்காருங்க, எல்லாம் சும்மா உக்காருங்க.

மிரா: என்ன, உக்காரவா? டேய் சேரிப்பயல்களா! ஒரு பய உக்காரக் கூடாது. எழுந்திருச்சு வெளியே போங்க. இல்லே, எல்லாப் பயன்களையும் தீய வச்சுக் கொளுத்திடுவேன்.

தங்: தீண்டாதவன்னு சொன்ன, தூரப் போடான்னு அதட்டுன இந்தக் காலத்திலே என்ன நடக்கும் தெரியுமா?

மிரா: டேய் நிறுத்துடா, சந்து', பொந்திலே இருந்தவங்களே, சாக்கடை ஓரத்திலே கிடந்தவங்களே, இப்படி நடு வீட்டிலே சோத்தெப் போட்டுக்கிட்டு இருக்கியேடா, இது அடுக்குமா? இது அடுக்குமா? இது அடுக்குமான்னு கேக்கிறேன்?

தங்: சந்து. பொந்திலே, சாக்கடை ஓரத்திலே துவண்டு கிடந்தவங்க எல்லாம் இன்னிக்கு துள்ளி எழுந்துட்டாங்க. அப்பா! உயர்ந்த ஜாதியின்னு உயர்வு பேசறவங்களெப் பார்த்து, புருவத்தே உயர்த்தி எங்களை அடக்கி ஆள நீங்க யாருன்னு கேட்கத் தொடங்கிட்டாங்க.

மிரா: ஏய் தங்கம்! நியாயமாத் தாண்டா உன்னே கேக்கிறேன். தீண்டாதவங்களெ, கீழ் ஜாதிக்காரங்களே நமக்கு சமமா உட்கார வைச்சு சாப்பிடச் சொல்லுறியேடா, இது ஆண்டவனுக்கே பொறுக்காதுடா ஆண்டவனுக்கே பொறுக்காது.

தங்: அக்கிரமத்துக்குத் துணையா ஆண்டவனை ஏனப்பா இழுக்கிறீங்க? எல்லா உயிருக்கும் தந்தையின்னு கடவுளைச் சொல்றுங்களே, அவருடைய படைப்பிலே கீழ்ஜாதி, மேல் ஜாதி என்கிற பேதம் எப்படியப்பா இருக்க முடியும்? இது பாருங்க. இவரை கீழ்ஜாதிங்கிற **(ஒருவரைப் பிடித்து)** காரணத்தினால், இவருக்கு ஒரு கண்ணுதானா இருக்கு? இல்ல இல்ல அவருக்கு மூணு கண்ணு இருக்குதா? அந்த மேஸ்திரிக்காரருக்கு நாலு கையா யிருக்கு? இந்தத் தீண்டாதவனுக்கு ஒரு கையா இருக்குது? என்னப்பா வித்தியாசம்? வேணும்னா ரத்தத்தைப் பரீட்சை பண்ணிப் பாருங்கப்பா.

மிரா: பரீட்சை பண்ணித்தானடா பாக்கிற என் பொறுமையை! இரும்புப் பெட்டியில் கை வச்ச அண்ணைக்கே உன்னே கழுத்தேப் பிடிச்சு வெளியே தள்ளியிருந்தா, இந்த நிலைமைக்கு வந்திருப்பியா, திருட்டு நாயே.

தங் : திருடினேன்; ஊரார் வீட்டிலல்ல. என் வீட்டிலேயே திருடினேன். ஆனந்தபுரிக்கு அனுமதிச் சீட்டு வாங்கவோ, ஆட்ட பாட்டம் என்று காசைக் கரியாக்கவோ அல்ல. உழைத்து உழைத்து தேவாங்காப் போன இந்த தாழ்த்தப்பட்டவங்களுக்கு, ஏழை எளியவங்களுக்கு உதவி செய்வதற்காக திருடினேன். பாருங்கப்பா இவங்களே. நல்லாப் பாருங்க. சேரு பூசின உடம்பத்தான் நீங்க பாத்திருப்பீங்க, இன்னிக்குப் பாருங்க அப்பா, இன்னிக்குப் பாருங்க. ம்...பணத்தை இரும்புப் பெட்டியில் அல்லப்பா, இதயத்தில் வைக்கணும்.

மிரா : மேஸ்திரி!

மேஸ் : ம்...

மிரா : கேட்டயா, இந்தப்பய பேசுறதே? இவன் உருப்படுவானா?

தங் : அவனைப் போய் கேக்கறீங்களா அந்தக் கேள்வியை? இவங்களைப் பார்த்துக் கேளுங்க. நான் உருப்படுவேனான்னு?

மிரா : நான் ஏண்டா அவங்களைக் கேக்கணும்? இந்தப் பஞ்ச பராரி.

தங் : நிறுத்துங்கப்பா, இந்தப் பஞ்ச பராரிதான் நம்ம நஞ்சை, புஞ்சையெல்லாம் பச்சைப் பசேலென்று மரகதக் காடாக்கினது. இவங்க வேர்வை முத்துக்கள்தான் நம்ம களஞ்சியத்தில் நெல் மணியாக் கொட்றது. குட்டிச் சுவர்லே குடியிருந்துக்கிட்டு, கூட கோபுரங்களைக் கட்டித்தருவது இவங்கதான். சேத்தையும், கந்தலையும் தங்களுக்கு வச்சுக்கிட்டு, சந்தனத்தையும், பட்டாடையும் நமக்குத் தருவது இவங்கதான். இவங்க கண்ணீர்தாம்ப்பா நமது பன்னீரும், பழ ரசமும், ஆணிப்பொன்னும், அழகுதாலிமுத்தும். இந்த பஞ்ச பராதீங்க குடிசையிலே விடுகிற பெருமூச்சுத்தான் மாடி வீட்டு சீமான்கள் மேலே வீசுகிற தென்றல்.

மிரா : டேய், என்னடா. அவன் பேசுறதே கேட்டுக்கிட்டு எல்லாப் பயல்களும் நின்னுககிட்டிருக்கீங்க, போங்கடா வெளியே.

தங் : போகாதீங்க, போகாதீங்க யாரும். எல்லாம் இருந்து சாப்பிட்டுத் தான் போகணும்!

மிரா : அடே தங்கம்! என்ன நினைச்சுக்கிட்டுடா நீ இப்படி எல்லாம் நடந்துக்கிட்டு இருக்கே? ஒழுங்கா இருக்

அருமையான புத்தகங்கள்

117 படங்கள் கொண்ட அட்டவணை மூலம் நீங்கள் மெக்கானிக் ஆகலாம். நீங்கள் ரூ. 25/-க்கு ஒரு ரேடியோ தயார் செய்து மின்சாரத்தைப்பற்றி நன்கு அறியலாம். ரேடியோ ரிப்பேரிங், ஒயரிங், எலக்டிரிகல் மெகானிஸம் இன்னும் பல விஷயங்கள் அடங்கியது. விரிவான புதிய பிரசுரம் ரூ. 5/- டெய்லரிங், கட்டிங் [படங்களுடன்] ரூ. 4/- சோப்பும் வாசனை திரவியங்களும் செய்யும் விதம் ரூ. 4/50. போட்டோ கலை ரூ. 3/- படங்கள் வரைவது ரூ. 3/- பூதையல் வேலை ரூ. 4/- ஹிந்திபோதினி ரூ. 4/-

அதிசயமான ஸெக்ஸ் புத்தகங்கள்

மணவாழ்க்கை 88 படங்களுடன் ரூ. 5/- பெண்ணை வசியம் செய்வது ரூ. 4/- கொக்கோகம் ரூ. 3/- காமசூத்திரம் [படங்களுடன்] ரூ. 6/- குடும்பக் கட்டுப்பாடு ரூ. 6/- ரதி சாஸ்திரம் ரூ. 3/- ஸெக்ஸ் வாழ்க்கை ரூ. 3/- ஸெக்ஸ் அவயவங்களின் 325 படங்கள் (அமெரிக்கன் வெளியீடு) ரூ. 5/- தேன் நிலவு ரூ. 3/- ஆண் பெண் ஸெக்ஸ் புதிர்கள் [2 பாகங்கள்] ரூ. 5/- காதல் செய்யும் கலை ரூ. 3/- அழகிய மங்கைகள் 150 படங்கள் ரூ. 7/- மணவாழ்க்கையின் இன்பங்கள் ரூ. 4/50 பருவமங்கை ரூ. 3/- இரகசியக்காதல் கடிதங்களும் பதில்களும் ரூ. 3/50 படுக்கை யறைப் படங்கள் 3 பாகங்கள் ரூ. 6/.

வி. பி. சார்ஜ் புத்தகம் ஒன்றுக்கு ரூ. 1/- மூன்று புத்தகங்களுக்கு ரூ. 1/50

GLOBE BOOK DEPOT,
(70-2) Post Beat 19,
Aligarh City.

கிறதின்னு இரு, இல்லே இப்பவே இந்த விட்டை விட்டு வெளியே போ.

தங் : கால ஓட்டம் இருக்கே, அது காட்டாற்று வெள்ளத்தைப் போன்றது. எதிர்த்து நிக்கிறதை எல்லாம் இருந்த இடம் தெரியாமெ அடிச்சிட்டுப் போய் விடும்.

மிரா : நீ ஒண்ணும் அணைக்கட்ட வேண்டாம். போடா வெளியே.

தங் : போ வெளியே...போகிறேன். உழைப்பவர்கள் பக்கம் சேர்ந்து உழைக்கிறேன். பட்டினி கிடப்பவர்களோடு சேர்ந்து நானும் பட்டினியைச் சுவைக்கிறேன். இடிக்கும், புயலுக்கும் ஈடு கொடுத்து, புத்தம் புதிய சமுதாயத்தை உருவாக்கப் போகிறேன். ஜாதி வெறி தலைக்கேறித்திரியும்பித்தர்களுக்கு தெளிவு உண்டாக்கப் போகிறேன். மனிதனை மனிதன் பிரித்து வைக்கும் மடமையை, தீண்டாமை கொடுமையை எரித்து சாம்பலாக்க இதோ புறப்படுகிறேன்.

போகிறான். மற்றவர்களுடன் உழைத்து உண்ணுகிறான்.

நான்கு

எரிமலை வெடித்தது!

தங்கம் இயற்கையில் நல்லவனென்றும், ரத்தினமும் வீராசாமியும்தான் அவனைக் கெடுத்துவிட்டதாகவும் மேஸ்திரி சொல்லவே, வீராசாமியை வரவழைத்துச் சவுக்காலடிக்கிறார் மிராசுதார். அங்கே காளியைப்போல் தோன்றி கனல் கக்குகிறாள் ரத்தினம்.

வீரா : அய்யோ, எஜமான், அய்யோ, ஆ.

ரத் : நிறுத்துங்க, எங்க அப்பாவே ஏன் அடிச்சீங்க? அவரு என்ன குத்தம் செஞ்சாரு? எதுக்காக இப்படி சித்திரவதை செய்யறீங்க?

இரவில் தனியாக இருக்கும் போதுதான் பார்த்துக் கொள்ள வேண்டும்

KASHMIRI SHASTRA

(Private)

கொக் சாஸ்திரம்

(இரகசியமானது)

84 படங்களுடன்

விளம்பரத்தினால் சரிவரக் கூறமுடியாத விஷயங்கள் அடங்கியுள்ளன.

படிக்கிறவர் நன்றாகவும் தெளிவாகவும் விஷயங்களைப் புரிந்து கொள்வார்கள். பலவிதமான 48 படங்கள் இருப்பதால் மார்க்கெட்டில் எம்முடைய கொக் சாஸ்திரம்தான் மிக நன்றாயிருக்கிறது எனக் கூறப்படுகிறது. விலை. ரூ. 4.

BED ROOM PHOTOS படுக்கை அறைப் படங்கள்

உங்களுக்குப் படுக்கை அறைக் காக்ஷிகளையும், அழகு, வேறு உற்சாகமளிக்கும் காரியங்களையும் தெரிந்துகொள்ள விருப்பமிருந்தால் இன்றே 25 படங்கள் கொண்ட ஒரு ஸெட்டுக்கு ரூ. 6.00 அனுப்பி பெற்றுக் கொள்ளுங்கள். 12 படங்கள் கொண்ட சாம்பிள் ஸெட் ரூ. 3.50. கடிதப் போக்குவரத்து ஆங்கிலத்தில். அயல் நாட்டிலிருப்பவர் பூரா தொகையையும் பி. பி. ஓ. வில் முன் பணமாக அனுப்ப வேண்டும்.

PARIS ART HOUSE

Durgiana (P.P.M.) Amritsar.

வீரா : ரத்தினம், ரத்தினம், பேசாதேம்மா!

ரத் : சும்மா இருங்கப்பா! என்னைக்கு இருந்தாலும் ஒரு நாள் சாகத்தானே போறோம்?

மிரா : ஏய், என்னையா எதிர்த்துப் பேசறே? பாவம் பொண்ணுச்சேன்னு பாக்கிறேன். இதுவரைக்கும் என்ன முறைச்சுப் பாத்தகண்ணுஇருந்ததில்ல, எதிர்த்துப் பேசின உயிர்தப்பினதில்ல. நாளைக்கு பொழுது விடியறத்துகுள்ள நீயும், உங்க அப்பனும் இந்த ஊரை விட்டு ஓடிப் போகலே, என் கோபம் ரொம்ப பொல்லாததாக்கும்.

ரத் : கோபம் உங்களுக்கு மட்டும் சொந்தமல்ல. எங்களுககும் வரும். ஆனா, அந்தக் கோபம் சட்டையையும் சவுக்கையும் தேடாது. நாயே பேயே என்ற வார்த்தைகளை வீசாது- பிரளயத்தையும் ஏற்படுத்தி விடும், அந்தக் கோபம்...அந்த நெருப்பு சூரு வளியிலே கொடுமைக்காடு எரிந்து, சாம்பலாகும். அநீதி மாயும், இரும்பு நெஞ்சங்கள் சாயும்...ம்...என்னை முறைத்துப் பார்த்த கண்கள் இருந்ததில்லை, எதிர்த்துப் பேசிய உயிர் தப்பினதில்லை என்றீரே சீமானே!

மிரா : நன்றிகெட்ட நாயே.

சவுக்கால் அடிக்கிறார்.

வீரா : ரத்தினம்.

ரத் : அடியுங்க, எங்க ரெண்டு பேரையும் கொல்லுங்க, இதோ நிற்கிறாரே எங்க அப்பா, இவர் உம்மைவிட உடல் பலத்தில் குறைந்தவரில்லை. உழைத்து, உழைத்து உரமேறிய கைகள். இவருக்கும் கோபம் பிறந்து கொதிப்பேறி, வீராச்சாமி வீராவேஷத்தோடு உம்மைத் திருப்பித் தாக்கினால், அடித்தால்.

வீராச்சாமி கோபம்கொண்டு ரத்தினத்தை அடிக்கிறார்.

மிரா : வீராச்சாமி.

வீரா : ரத்தினம், ரத்தினம்! போ எங்கேயாவது செத்துத் தொலை! போ, இப்ப உங்களுக்கு திருப்திதானே எஜமான்? நீங்க வாழுங்க, நாங்க சாகிறோம். எங்க துன்பம் தீராது, துயரம் மாறாது.

வீட்டுக்கு வந்ததும் தன் தவறுக்கு வருந்தி ரத்தினத்தை அணைத்து ஆறுதல் கூறுகிறார் வீராசாமி.

ஐந்து

மாநாடு!

தங்கம் திருக்குறள் முன்னணிக் கழகத்தில் சேர்ந்து பழனியில் நடக்கும் மதுரை மாவட்ட திராவிட சமுதாய சீர்திருத்த மாநாட்டுக்குப் போகிறான். அங்கே பலர் பேசுகிறார்கள்.

குரல் : மலையழகும், மறத்தமிழர் தம் கலையழகும் மிகக பழநி மாநகரிலே, பாண்டிய மன்னரின் வீரத்தால், வெற்றியால், நாயக்க மன்னரின் அன்பால், அறத்தால், புகழ் பெற்ற பொன் பூமியிலே நடைபெறும் இந்த திராவிட சமுதாயத்தின் சீர்திருத்த மாநாட்டில் பங்கு கொள்ளும் அறிவில் சிறந்த பெரியோர்களே, அருமைத் தாய்மார்

50 முறை சுடும் பிஸ்டல்

லைஸன்ஸ் தேவையில்லை. 50 முறை தானுகவே சுடும் அமெரிக்கன் மாடல் பிஸ்டல். சுடும்போது வரும் ஓசை மிருகங்களையும் கள்ளர்களையும் நடுங்கச் செய்யும். சினிமா நாடகங்களுக்கு. உபயோகப்படும். விரோதியிடமிருந்து காப்பாற்றிக்கொள்ள உபயோகமாகும். டீலக்ஸ் மாடல் விலை ரூ. 10/50 (50 குண்டுகள் இனும்) வி பி. சிலவு ரூ.2/50 இலங்கைக்கு ரூ. 4/50. பிஸ்டல் உறை பெல்டுடன் ரூ. 3/- உயர்ந்த ரகம் ரூ. 5/- தனி குண்டுகள் நூறு ரூ. 5/- ரிபேர் செய்ய எண்ணை ரூ. 1/-

TARUN TRADERS
(60–53) Post Beat 19
Aligarh City.

களே, ஆற்றல் மிகு வீரர்களே, பகுத்தறிவு சமுதாயத்தை உருவாக்க ஊற்றெடுக்கும் உணர்ச்சியோடு இங்கே கூடியிருக்கும் இளைஞர்களே, எதிர்கால சிற்பிகளே, வருக...வருக...என்று வரவேற்புரை நிகழ்த்துகிறா!, வளமார் திராவிடத்தின் சொத்து, நமது மதுரை முத்து! இதோ கோவிந்தசாமி எம். எல். ஏ. கடும் வேகமாக வரும் கணையையும், காட்டுப் புலியையும் கண்டு அஞ்சாத தமிழன், சாதி என்றதும் அஞ்சுவானேன் என்று கேட்கிறார் வழக்கறிஞர் இளம்வழுதி, வழக்கறிஞர் கோகுலகிருட்டினன், தோழர் அரங்கண்ணல், காஞ்சீபுரம் ராஜகோபால் எம். சி. இதையே வலியுறுத்திக் கூறுகின்றனர், தெள்ளு தமிழிலேயே தெளிவுரை வழங்கும் பேராசிரியர் அன்பழகன், தேனாய், தேமதுர கனியாய் இனிக்கும் சங்க இலக்கியங்களிலே, சாதி என்ற சொல்லே கிடையாதே என்று ஆணித்தரமாகக் கேட்கிறார். அதைத் தொடர்ந்து, தோழர் என். வி. நடராசன், தோழர் இரா. செழியன், தோழர் க. அறிவழகன், தோழர் வி. எஸ். கோவிந்தராஜன் தோழர் ஏ. கே. வில்வம், தோழர் அன்பில் தர்மலிங்கம். தோழர் கோவை ராஜமாணிக்கம், தோழர் தூத்துக்குடி சிவசாமி அனைவரும் அழகு தமிழில் பேசுகின்றனர். தோழர் நாஞ்சில் மனோகரன் விஞ்ஞானத்தில் வெற்றிகளை மேல்நாட்டார் அமைந்து மார்தட்டும் இந்நாளில், கண்ணில் படாதே, அருகில் வராதே, தொடாதே என்றெல்லாம தீண்டாமைக்கு தூபம் இடவேண்டாம் என்று கேட்கிறார். தோழர் ஏ.வி.பி. ஆசைதம்பி எம்.எல்.ஏ பிறப்பால் உயர்வு தாழ்வு, குலத்தால் பெருமை பேசித் திரிபவர்கள சமுதாயத்துக்கு கேடு செய்பவர்கள் என்கிறார். தோழர் கவிஞர் கண்ணதாசன் கவிதை தமிழ் பொழிகிறார். தோழர் ப. உ. ஷண்முகம் எம். எல். ஏ., தோழர் பராங்குசம், தோழர் பதி, பாராளுமன்ற உறுப்பினர் தோழர் தர்மலிங்கம். கலைஞர் கருணாநிதி எம். எல். ஏ., சேரனின் சொந்தக்காரர்களே, பாண்டியனின் பரம்பரையில் வந்தவர்களே. சோழனின்

ரூ. 1000 ரொக்க இனாம்!

நீங்கள் நாடியதெல்லாம் கைகூடும்



எல்லா விதமான பிரயத்தனம் புரிந்து நீங்கள் மனம் சோர்ந்திருந்தாலும் சரி, இந்த மாயஜால மோதிரத்தை வாங்கி அணிந்து கொள்ளுங்கள். இதை அணிந்தவுடனே நீங்கள் விரும்பிய நபர் ஆணாயிருந்தாலும் பெண்ணாயிருந்தாலும், அக்ஷணமே வசியமாய் விடுவார். இஷ்டப்பட்டவரை நீங்கள் மணப்பீர்கள். இதனால் மலட்டு ஸ்திரீகளுக்கும் புத்திர சந்தானம் உண்டாகும். இறந்தவர்களின் ஆத்மாவோடு பேசலாம். பூமியில் இருக்கும் புதையல் உங்கள் கனவில் தோன்றும். லாட்டரி, வியாபாரம், பந்தயம், சூதாட்டம், வழக்கு, பரீட்சை இவற்றில் வெற்றி பெறுவீர்கள். துஷ்ட கிரகம் சாந்தம் அடையும். ஜீவிய காலம் சுகமாகக் கழியும்.

மாந்திரீக மோதிரம் விலை ரூ. 1. 94. ஸ்பெஷல் மோதிரம் ரூ. 3. 00. ஸ்பெஷல் சக்தி மிகுந்தது ரூ. 3. 94. மின்சார சக்தியைப்போல் உடனே இது பலன் தரும். இந்த மாய மோதிரம் கிரஹணம் போன்ற சமயங்களில் தயார் செய்யப்படுகிறது. சூரியன் தவறுதலாய் மேற்கில் உதித்தாலும் இம் மோதிரத்தின் சக்தி தவறமாட்டாது. அப்படி பலன் இல்லையென்றால் இரட்டிப்புசார்ஜ் வாபஸுக்கு காரண்டி. பலனில்லை என்று நிரூபிப்பவருக்கு ரூ. 1000 இனாம்!

Principal : SHINING MESMERISM HOUSE,
(PPM-3) JULLUNDUR CITY, (Pb.)

வழித்தென்றல்களே, கூனாய், குருடாய், வாழ்ந்தது போதும். எழுந்து நில்லுங்கள். ஏறிட்டுப் பாருங்கள் சமுதாயத்தை' என்கிறார். தோழர் என். எஸ். இளங்கோ, தோழர் கே. கே. நீலமேகன், தோழர் டி. கே. சீனிவாசன் தோழர் தில்லைவில்லாளன், தோழர் பொன்னம்பலனார், தோழர் சேலம் ராஜாராம், சிந்தனை சிற்பி சிற்றரசு, 'அறிவுப் பாதையில் செல்வோரையே மக்கள் மதிக்கின்றனர்' என்று கனல் தெறிக்கப் பேசுகிறார். தோழியர் சத்தியவாணிமுத்து, எம். எல்.ஏ. 'பாட்டுஇசைக்காதே பழிவந்து சேரும், ஏட்டைத்தொடாதே தீமை உண்டாகும், என்று வீட்டுக்குள்ளே பெண்ணை பூட்டிவைத்த கொடுமை இருந்தது. அது அந்தக்காலம், பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும், பாரினில் பெண்கள் நடத்துகிறார்கள் இது இந்தக் காலம்' என்று கன்னித்தமிழை அள்ளி வைக்கிறார். தோழியர் அலமேலு அப்பாத்துரை, தோழியர் ஈரோடு சேது பாஸ்கரன், தோழியர் அருள்மொழி வில்வம், தோழியர் ராஜேஸ்வரி சண்முகம், தோழியர் பொற்செல்வி இளமுரு பெண்குலத்தின் மேன்மையை எடுத்துரைக்கின்றனர். சொல்லின் செல்வர் ஈ. வி. கே. சம்பத், எம். பி. 'உன் சாதி, என் சாதி, உயர்ந்தது, தாழ்ந்தது என்றெல்லாம் பேசி, பேசி நம்மவர் சிதறுண்டு சின்னா பின்னமாய்ப் போயினர், வாடிய மலராயினர், வாழ்வு இழந்தனர், அவர்களை ஒன்று கூட்டித் திரட்டி ஒற்றுமை உண்டாக்க சித்தத்திற்கு மருந்தளித்து, பித்தம் தெளிவிக்க, சிதறிக்கிடக்கும் மனிதரை சேர்த்து இணைக்க செழிப்பான வாழ்வை நாம் காணப் பாடுபடுகிறோம். சாந்தியால் உலகம் தழைப்பது நன்று, சாதிபேதம் வளர்ந்து நலிவதே நன்று என்ற கேள்வியை எழுப்புகிறோம்' என்று பைந்தமிழிலேயே நமது பணியின் சிறப்பை எடுத்து விளக்குகிறார். தோழர் மதியழகன், தோழர் ஜீவரத்தினம், தோழர் கோவை செழியன், புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன், 'கலை நிலை மட்டும் கலைஞர்களுக்குத் தெரிந்தால் போதாது. உலக நிலையும் அவர்கள் அறிய வேண்டும். மக்களின் இன்பு வாழ்வுக்காக அறிவின் வளர்ச்சிக்கு, சமத்துவத்துக்கு பணி ஆற்றும் தத்துவத்தை கலைஞர்கள் பெறவேண்டும். பளிங்கு மாளிகையில் பள பளப்பான கார்கள், சுந்தர சிரிப்பும், சொகுசு வாழ்வுமட்டும் இருந்தால் போதாது. தொண்டாற்ற வேண்டுமென்ற உள்ளம் இருக்கவேண்டும்' என்று, கலை உலகத்துக்கு அன்பு அழைப்பு விடுகிறார். நடிப்பு இசை புலவர் கே. ஆர். ராமசாமி எம்.எல்.சி. 'மக்களுக்குகளிப்பூட்டுவது மட்டுமல்ல, கலை மூலம் அவர்கள் நிலையை, நினைப்பை உயர்த்த முடியும். செப்பனிட்ட சீரான வாழ்வைத் தரமுடியும்' என்பதை எடுத்துச் சொல்லுகிறார். நடமாடும் பல்கலை கழகம் நாவலர், நெடுஞ்செழியன் 'அன்பு கெழுமிய தோழர்களே! உள்ளம், உரை, உடல் ஆகியவற்றில் உறுதி வேண்டும். கேடு, கொடுமை, மடமை ஆகியவற்றை எதிர்த்து நிற்கும் துணிவு வேண்டும்' என்று, நெஞ்சை அள்ளும் தமிழிலே உரை நிகழ்த்துகிறார். அறிஞர் அண்ணா, தமிழரின் உள்ளம் நிறைந்தவர், ஆற்றல் மிகுந்தவர். அஞ்சா நெஞ்சனர், தாழ்வுற்ற சமுதாயத்தை தட்டி எழுப்ப; வீழ்ச்சியுற்ற மக்களை விழித்து எழச்செய்ய வந்த, இந்த சாஞ்சி தந்த செல்வம், அறிவு பணிக்கு தம்மை அற்பணித்து விட்ட நம் இதயச் சுடர், இன்பகீதம் அறிஞர் அண்ணா, 'அன்புள்ள தோழர்களே, தாய்மார்களே, சமுதாயத்தை சீர் திருத்த வேண்டிய அவசியத்தைப் பற்றிப் பல ஆண்டுகளாகவே நாம் பட்டி தொட்டிகளிலெல்லாம் எடுத்துக் கூறி வருகிறோம். 'ஜாதி பேதம் கூடாது' என்றார் உத்தமர் காந்தியார். ஜாதியே கூடாது என்று வையத்திலே போர் தொடுத்தார், வையகமே வியக்கும் வெற்றி பெற்றார், தலைவர் பெரியார் ராமசாமி அவர்கள். புத்தர் சென்ற வழியிலேதான், உத்தமர் காந்தியாரின் அடிச்சுவட்டிலேதான் பெரியார் ராமசாமி, நாடு திருத்தி கல்லெடுத்து, செப்பனிட்ட சீர்திருத்தப் பாதையிலேதான் நாமும் செல்லுகிறோம். அவர்களின் லட்சியக்கனவை உண்மையாக்கவே உழைக்கிறோம். தொல்லைகள் எவ்வளவு வந்தாலும், ஜாதி என்ற எண்ணம் நமக்கு இருக்கக் கூடாது. இன்னல்கள் அடுக்கடுக்காய் வந்தாலும், இழிநிலை மாற்றுவோம். இன்ப சமுதாயம் மலரச் செய்வோம். சிங்க உள்ளம் படைத்த

எனது தங்கத்தம்பிகளே, சாதியற்ற சமுதாயத்தை சமத்துவம் நிலவும் புதிய சமுதாயத்தைக் காணப்புறப்படுங்கள், புறப்படுங்கள்' என்று கூறுகிறார்.

அண்ணா வாழ்க என்று குதித்துக் கிளம்புகிறான் தங்கம். அவன் நோக்கம் ஈடேற அந்த இயக்கத்திலே அவன் சேர விழைவது பொருத்தம் தானே!

ஆறு

அம்மா....!

திருக்குறள் முன்னணிக் கழகத்திற்கு வந்து தங்கத்தை சந்திக்கிறாள் சீதா. அவள் மனச் சுமையை இறக்க வேண்டாமா?

சீதா : தங்கம்...

தங் : ஏன் வந்தே, எதுக்காக வந்தே? நான் இங்கே அமைதியா யிருக்கிறது உனக்குப் பிடிக்கலையா? ஏன் வந்தே?

சீதா : தங்கம்!

தங் : போயிடு, உன்னெப் பாத்தாலே என் மனசெல்லாம்கொதிக்குது. செல்வத்துக்கு வசதியில்லே, வாழறதுக்கு வேண்டிய பொருள் இல்லேன்னு தெரிஞ்ச உடனே, உன்னுடைய மனசையே மாத்திக்கிட்டே, இல்லே? ஏன் நிக்கிறே? போயிடு மரியாதையா. உன்னை வெறுக்கிறேன். அடியோடு வெறுக்கிறேன்.

சீதா : உங்க வெறுப்பை வாழறவங்க மேலே காட்டுங்க தங்கம். இந்தப் பிணத்து மேலே காட்டாதீங்க.

தங் : சீதா, பேசாதே.

சீதா : வேண்டாம் தங்கம். மத்தவங்க என்னை வாழவிடலேன்னு நீங்க என்னை அழக்கூட, என் துக்கத்தை சொல்லக் கூட விடமாட்டேங்கிறீங்களே.

தங் : என்ன சொல்லப் போறே? சாகசக் கண்ணீர் வடிப்பே. அதை நான் பார்த்துஇரக்கப்படணும்.இல்லே? நம்பிக்கைத் துரோகம் செய்த உங்கிட்ட எனக்கென்ன பேச்சு?

சீதா : அந்த எண்ணத்தை மாத்தணும், உண்மையை உங்ககிட்ட சொல்லலாமுன்னு எத்தனையோ முறை நான் முயற்சி செய்தேன். நெருப்பாச் சுட்டு என்னை நெருங்க விடாமெ செய்திட்டீங்களே. என் சோகக் கதையெச் சொல்றேன். அதைக் கேட்ட பிறகாவது என் நிலைமையிலே நீங்க யிருந்திருந்தா என்ன செய்திருப்பீங்கன்னு சொல்லுங்க.

தங் : தூக்குப் போட்டுக்கிட்டு செத்திருப்பேன்.

சீதா : ஆமாம் தங்கம், ஆமாம். தூக்குப் போட்டுக்கிட்டு சாக இருந்த எங்க அப்பாவை காப்பாத்தப் போயித்தான், நான் இப்படிப் பிணமானேன். எங்கெல்லாமோ கடன் பட்டு, இருக்கிற சொத்தெல்லாம் வித்து, எங்கப்பா என்னெ படிக்க வச்சாரு. எங்கம்மா நோயாலே கஷ்டப்படும்போது அவளுக்கு மருந்து வாங்க வச்சிருந்த பணத்தைக் கூட என் படிப்புக்காக அனுப்பினாரு. எங்கப்பாவுக்கு என் படிப்பின் மேலே இருந்த ஆசை, எங்கம்மாவை சாகடிச்சுடிச்சு. என் படிப்பு பின்னது. கடன்காரங்க எங்க கழுத்தை நெரிச்சாங்க. எங்கப்பா, மானத்துக்கஞ்சி, மரக்கிளையிலே பிணமாத் தொங்கப் போற காட்சியை என் கண்ணாலே பாத்தேன். அந்தக் கடனுக்கு என் வாழ்க்கையை ஈடு கொடுத்து அவர் உயிரைக் காப்பாத்தினேன். நான் யாருக்காக தியாகம் செய்தேனோ, அந்த அப்பாவும் கண்ணை மூடிட்டாரு.

தங் : சீதா.

சீதா : சொல்லுங்க தங்கம், நான் பணத்தாசை பிடிச்சவளா, நம்பிக்கைத் துரோகம் செய்தவளா?

தங் : இல்லே சீதா, இல்லே. நீ நம்பிக்கைத் துரோகம் செய்யலே. நான்தான் தவறு நினைச்சுட்டேன். இவ்வளவு பெரிய சோகம். ஆறுத ரணம், உன்னுடைய உள்ளத்திலே இருக்கும்னு நான் நினைக்கவே இல்லே, சீதா நினைக்கவே இல்லே. சீதா, ஒண்ணுமட்டும் உறுதியாச் சொல்லுறேன், அசைக்க முடியாத நம்பிக்கையோட சொல்றேன், உன்னை மறுபடியும் வாழவைக்கிறேன் சீதா, உன்னை மறுபடியும் வாழ வைக்கிறேன்.

சீதா : வேண்டாம், தங்கம் வேண்டாம். அந்த எண்ணமே வேண்டாம். புண்பட்ட மனசுக்கு ஆறுதல் சொல்றீங்க. புது வாழ்வு தர்றேன்னு உறுதி கூறுறீங்க. அது கலைஞ்சு போன கனவு.

மறைஞ்சுபோன அந்த வாழ்வு வேண் டாம், தங்கம், இனி எனக்கு வேண்டாம்.

தங் : அம்மா.

சீதா : இன்னொரு தடவை சொல் லுங்க தங்கம். அம்மான்னு, இன்னொரு தடவை சொல்லுங்க தங்கம், அந்தத் தாய்பாசத்தோட வாழ எனக்கு உரிமை கொடுங்க, அது போதும். இந்த உல கத்திலே வேறே எனக்கு எதுவுமே வேண்டாம்...எதுவுமே வேண்டாம்.

போகிறாள். தங்கம் தன் தவறுக்கு வருந்துகிறான்.

ஏழு

நீ ஒரு பெண்ணா?

செல்வம் தங்கத்தின் வீட்டுக்கு வந்து, அங்கே சீதாவைக் கண்ட தும், தங்கத்தை மணந்து விட்டாள் என்று நினைத்துக் கொதிப்புடன் பேசுகிறான். மிராசுதார் வருகிறார்.

மிரா: அடிபாவி,இவன் உன் பழைய காதலனா...? அயோக்கியப் பயலே, போடா, அயோக்கியா.

செல்வத்தை அடித்து விரட்டு கிறார். தங்கத்தைச் சோலையில் கண்டு கொல்ல முயற்சிக்கிறான். பிறகு உண்மை தெரிந்து அவ னுடன் போகிறான்.

எட்டு

கிருஷ்ணனுடன் சேர்ந்து ஒரு நாடகமாடிதன் தந்தை மூலமாகவே ரத்தினத்தை மணக்க ஏற்பாடு செய்கிறான் தங்கம். ஆனால் கிருஷ் ணனின் அஜாக்கிரதையால் உண்மை வெளியாகிறது. ரத்தி னத்தை பாழ்வீட்டில் அடைத்து விட்டு தங்கம்-மீனா திருமணத்தை நடத்த ஏற்பாடு செய்கிறார் மிராசு தார். சீதா விஷம் குடித்துவிட்டு, தி. மு. கழகத்தில் தங்கத்தை சந்தித்து உண்மையைக் கூறுகிறாள். தங்கம் ரத்தினத்தைச் காப்பாற்றி தந்தையிடம் அழைத்து வருகிறான்.

மீனா : அத்தான், அத்தான்! நான் தான் மணப் பெண்ணுன்னு மாமா சொல்லுறாரு. இது நியாயமா அத்தான்?

தங் : நீ அழாதே மீனா, அழாதே, உன்னுடைய இஷ்டத்துக்கு விரோத மாக இந்தக் கல்யாணம் நடக்கவே நடக்காது.

மிரா : நடந்து ஆகணும்.

தங் : நடக்க முடியாது.

மிரா : அந்த சேரிப் பெண்ணை முதல்லே வெளியே போகச் சொல்லு.

தங் : அவ மட்டுமில்லேப்பா, நாங்க ரெண்டு பேருமே உயிரோடு திரும்பிப் போவோம் என்ற நம்பிக்கை யில் இங்கே வரலே.

மிரா : ஆ...அப்படியா...உயிருக்கு துணிஞ்சிட்டியாடா? இப்ப பார். இந்த மணவீட்டைப் பிணவீடாக்கிடறேன்.

துப்பாக்கியைத் தூக்கி சுடுவ தற்கு ஆயத்தம் செய்கிறார்.

தங் : தூக்குக் கயிற்றைப் பார்த் திட்டு வந்திருக்கிறோம்ப்பா, துப்பாக்கி முனைக்கு பயப்பட மாட்டோம், உங்க துப்பாக்கி யிலிருக்கிற அவ்வளவு குண்டுகளும் எங்கள் உடம்பைத் துளைக்கட்டும். அப்பவும் எங்கள் உறுதி தளராது மாறாது!

சீதா மாண்ட செய்திவர, யாவ ரும் தி. மு. க. வுக்கு ஓடுகிறார்கள்.

தங் : மாங்கல்யம் கழுத்தில் மாட் டப்பட்ட அன்றே மரணத்தின் மடியில் சாய்ந்து விட்டாயம்மா.

அவள் கையிலிருந்த கடிதத்தைப் படிக்கிறான்.

என்னை சிரிக்கவைக்கப் பாடு படுவ தாகச் சொன்னீர்கள். அது ஒரு தங்கத் தால் முடியாது. நாட்டிலே இருக்கும் அத்தனை இளைஞர்களும், பத்தரை மாத்துத் தங்கங்களாக மாறவேண்டும். அதுவரை சீதாக்கள் வாழமுடியாது. உங்கள்மீது நான் காட்டிய தூய அன் புக்கு தவறான, விபரீதமான தொடர்பு கள் கற்பிக்கப்பட்டன. நிலை தவறிய வள், நெறி கெட்டவள் என்று, கொண்ட கணவனே பழித்தபோது, தற்கொலையைத் தவிர எனக்கு வேறு வழியேது? தங்கம்! என் கடைசி ஆசை, நானாவது காதலைவிட என் தந்தைதான் பெரிது என்று கருதினேன். மீனா, செல்வத்துக்கு ஏற்றவள். அவர்களைச் சேர்ந்து வாழச் செய்யுங்கள்.

தங்கம் ஆவேசங் கொண்டவனாய் ஜாதி வெறியர்களைப் பார்க்கிறான். வார்த்தைகளை விஷமாகக் கக்கு கிறான்.

தங் : பெண்ணாகப் பிறந்தாய், பெற்ற தந்தைக்காக உன்னைத் தியா கம் செய்தாய், இன்று ஊர் அறிய

உன்னை மணந்தவரின் பழிச்சொல்லுக்காக உயிரையே மாய்த்துக்கொண்டாய். இல்லை...இல்லை...சாகவில்லை. சாகவில்லை. கொலலப்பட்டாள். படுகொலை செய்யப்பட்டாள். இந்தக் கொலைக்கு காரணமானவர் யார்? கொலை செய்தவனுக்கு ஆயுள் தண்டனை. கொலை செய்யத் தூண்டியவனுக்குத் தூக்குத் தண்டனை. உடந்தையாயிருந்தவனுக்கு சிறை தண்டனை. இப்படிச் சட்டப் புத்தகத்திலே சிறைத் தண்டனையும், தூக்குக் கயிறுகளும் காணக்கிடக்கின்றன. ஆனால் உடல் உருகி, உணர்ச்சி மங்கி, கண்ணொளி குறைந்து, சதையிலே சுருக்கமும், ஏற்பட்ட பிறகும் தினம், தினம், இது போன்ற சீதாக்களை பலியிட்டு, கொலை பாதகம் புரியும் இவர் போன்ற மனிதர்களுக்குத் தண்டனையே கிடையாது. சமுதாயத்தின் தூண்கள் என்று தங்களை நினைத்துக் கொண்டிருக்கும் உங்களைப்போன்ற பெரிய மனிதர்கள் இந்தக் கொடுமைக்கு பெண்களை அடிமைப்படுத்தி, பழி கொள்ளும் இந்தப் பாதகச் செயலுக்கு துணை செய்கிறார்கள், துதி பாடுகிறார்கள். மிராசுதார் நல்லமுத்துப் பிள்ளை, சீதாவை மட்டுமல்ல, இதோ நிற்கிறாளே ரத்தினம். ஒரு குற்றமும் செய்யாதவள், என்னைக் காதலித்ததைத் தவிர; இவளையும் பிணமாக்கிப் பார்த்திருப்பார், நான் காப்பாற்றாமல் இருந்திருந்தால். ஜாதி வெறி உள்ளத்திலே ஊறிப்போன காரணத்தினால், இவர் செய்த கொடுமைகள் ஏராளம். ஏராளம். சேரியிலே பிறந்ததாலே தீண்டாதவாகள் என்று அவர்களைத் துரத்தித், துரத்தி விரட்டி அடித்த அந்த துயரக் கதை கல்லையும் உருக்கும். உடன் பிறந்த மனிதர்களை விட, ஏன், தன் சொந்த மகனைவிட இவருக்கு ஜாதி வெறி, குலம், கோத்திரம் உயர்ந்தது. மகன் பட்டினி கிடக்கலாம். தெருவிலே அலையலாம். அவன் செத்தாலும் பரவாயில்லை. அவனைச் சுட்டுக் கொன்றாலும் பாதகமில்லை. ஆனால், ஜாதியின் பெருமை மட்டும் கெடக்கூடாது, என்று எண்ணுகிற இவரைப் போன்ற கொடிய இதயம் படைத்த பத்தாம்பசலிகள் இன்னும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஜாதி வெறியின் பிடரியைப் பிடித்து குலுக்க நேர்மையும், நெஞ்சழுத்தமும் கொண்ட நல்லவர்கள் படையென கிளம்பாததால் தானே இத்தகைய கொடுமைக்காரர்கள் பவனிவர முடிகிறது? மணவீடு, பிணவீடாகுமென்று சொன்னீர்களே, இப்பொழுது உங்கள் வேட்கை தீர்ந்ததா? தீரவில்லையானால் உங்கள் உள்ளத்திலே பதிந்து கிடக்கும் அந்தப் பழைய வெறிக்கு இன்னும் எத்தனைபேர் பலி வேண்டும்? சொல்லுங்கள். அணி அணியாக ஆட்களைக் கொண்டு வந்து நிறுத்துகிறேன், அந்த கள பலிக்கு என்னையே தருகிறேன். உங்கள் வெறி தணியும் மட்டும் வெட்டுங்கள், குத்துங்கள், சுட்டுத்தள்ளுங்கள். இப்படிப்பட்ட ஒரு தந்தைக்கு மகனாகப் பிறந்தேனே என்பதற்காக வெட்கப்படுகிறேன்.

மிராசுதார் தலைகழூவிகிறது.

மிரா : நான் பெருமைப் படுகிறேன். இவ்வளவு பெரிய முற்போக்கு வாதியின் தந்தை என்பதற்காக நான் பெருமைப் படுகிறேன்.

தங்கம் ஆச்சரியத்துடன் அவரைப் பார்க்கிறாள்.

மிரா : ஆச்சரியப்படாதே! ஜாதி வெறி, கொடுமை, வஞ்சகம், சோகம், இவைகளையே நம்பி வாழ்ந்த பழைய மிராசுதார் பேசவில்லை. ஏழைகளின் கண்ணீரையே குளிக்கும் பன்னீராகக் கருதிய நல்லமுத்துப் பிள்ளை செத்துவிட்டான். செய்த குற்றங்களை எண்ணி, உள்ளம் துடிக்கும் புதிய மனிதன் பேசுகிறேன். லட்சியவாதியான தங்கத்தின் தந்தை நல்லமுத்து பேசுகிறேன். ஜாதி ஒழியட்டும், தீண்டாமை ஒழியட்டும், பணத்திமிர் ஒழியட்டும். நாடு வாழட்டும், நல்லவர்கள் உள்ளமெல்லாம் மகிழட்டும்.

தங்கமும் ரத்தினமும் மணந்து 'தங்கரத்தின'மாகிறார்கள். செல்வம் மீனாவை மணக்கிறான். கிருஷ்ணன் ருக்மணியை மணக்கிறான்.

அந்த ஊரே ஒன்றுபடுகிறது. சீதாவின் தியாகம், தங்கத்தின் உழைப்பு இரண்டும் இனவெறியை ஒழித்து, 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்று மகிழச் செய்கிறது. இனி அங்கே இருப்பவர்களுக்கு குலம் ஒன்றுதான்; கடவுள் ஒருவன் தான். ★

ஜனவரி ரிலீஸ்!
ஸ்ரீ கணபதி பிலிம்ஸாரின்
ஸ்ரீ கிருஷ்ண பாண்டவர் யுத்தம்
வசனம் பாடல்கள் ஸங்கீதம் தயாரிப்பு
உதயகுமார் * கு.மா.பா * சத்தியம் * N.S.ராஜகோபாலன்
S.M.ராஜகோபால்
டைரக்ஷன் : தத்தா தர்மாதிகாரி
ஸ்டுடியோ: மெஜஸ்டிக்
ஸ்ரீ கணபதி பிலிம்ஸ் - சென்னை-14

பேசும் படம்
REGD.NO.M 4523
ஜனவரி 1961 ✦ 75 காசு
பிரகதி ஆர்ட் புரொடக்ஷன்
அன்புமக
டைரக்ஷன் :
தயாரிப்பு :
T. பிரகாஷ்ராவ் ✦ D.V.S. ரா
வசனம் :
முரசொலி மாறன்
FLOOD LIGHT